


சிவசங்கரி
குறுநாவல்கள்
தொகுதி-2
வானதி பதிப்பகம்

## உள்ளே...


1. ஒரு சிங்கம் முயலாகிறது 1
2. தகப்பன்சாமி 83
3. ஒரு பகல் – ஒரு இரவு 159
4. அடிமாடுகள் 261
5. துள்ள முடியாத புள்ளிமான் 327
6. எரிக்கடியில் சில கனவுகள் 433


# ஒரு சிங்கம் முயலாகிறது

# 1

லாவண்யா மணியைப் பார்த்தாள்.

ஐந்தேகால்.

ஐந்தரைக்கு தாமு வருவதாய்ச் சொல்லியிருக்கிறான். அவன் நேரம் தவறுவதே இல்லை.

வெள்ளை ஆர்கண்டி பிரிண்டட் புடவை, பொருத்தமான ரவிக்கை— காதில் ஒற்றை முத்துத் தோடு. அதிக மேக்கப் இல்லாத முகம்— நெற்றியில் சின்னதாய்க் கறுப்புச் சாந்துப் பொட்டு. உதடுகளில் லேசாய் லிப்ஸ்டிக். தோளோடு வெட்டிவிடப்பட்ட முடி. அதைப் பறக்க விடாமல் சேர்த்தணைத்த கறுப்பு ரப்பர் பாண்ட்.

ஷானல் சென்ட்டைத் தெளித்துக்கொண்ட லாவண்யா, கைப் பையுடன் கீழே போகக் கிளம்பினாள்.

ஏ.ஸி. அறையை விட்டுக் கீழே வருவதற்குள் குண்டூசி, குண்டூசியாய் நெற்றியிலும், மேலுதட்டிலும் வியர்வை.

வரவேற்பறைக்குச் செல்லாமல் நேரே வராந்தாவை அடைந்து, ஒருபக்கமாய் இருந்த ஆடும் ஊஞ்சலில் அமர்ந்தாள்.

எஜமானியைக் கண்டதும் புல்வெளிக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த தோட்டக்காரன் பைப்பை அப்படியே போட்டு விட்டு, கிட்டத்தில் வந்து “லான்லே நாற்காலி போடட்டுமாம்மா?” என்றான் பவ்யமாய்.

“வேண்டாம்ப்பா... நா வெளியே போறேன்...”

அவன் போய்விட்டான்.

லாவண்யா கீழே இறங்கிவந்துவிட்டதை அறிந்த சமையற் காரர் அப்பு வராந்தாவில் எட்டிப்பார்த்தார்.

“வெளியே போகப் போறயாம்மா? காப்பி சாப்பிடலியே, கொண்டுவரட்டுமா?”

அப்பு அந்த வீட்டில் காலடி எடுத்துவைத்து வருஷங்கள் இருபது பூர்த்தியாகிவிட்டன.

கைலாசம், லாவண்யாவின் அப்பா, தொடங்கிய சிறு தொழில், இன்று நாட்டின் முன்னணி தொழிலாக மாறியதைக் கூடவே இருந்து பார்த்தவர் இந்த அப்பு.

லாவண்யாவின் ஐந்தாவது பிறந்தநாள் அன்று இவர்களோடு ஏற்படுத்திக்கொண்ட சமையற்காரர்—எஜமானன் உறவு இன்று 'வீட்டில் ஒரு உறவு மனுஷன்' என்று சொல்லும் விதத்தில் வேர் விட்டுவிட்டது.

லாவண்யாவின் அம்மா அகாலமாய் இறந்தது, இரண்டாம் கல்யாணம் வேண்டாம் என்று கைலாசம் பிடிவாதமாய் இருந்தது, லாவண்யாவை ஆணுக்கு ஆணாய், பெண்ணுக்குப் பெண்ணாய்ச் சிறப்பாக வளர்த்தது, ராம் அந்த வீட்டு மாப்பிள்ளையாக வந்தது, அப்புறம் போன வருஷம் விமான விபத்தில் கைலாசமும் நினைத்த நினைப்பில்லாமல் போய்ச் சேர்ந்தது— என்று அந்தக் குடும்பத்தில் இத்தனை வருஷங்களாய் நடந்த நல்லது கெட்டது அத்தனைக்கும் ஸ்திரமான சாட்சி அப்பு.

தலையைத் திருப்பி அப்புவைப் பார்த்து சின்னதாய் புன்னகைத்தாள் லாவண்யா.

"வேண்டாம் மாமா— மத்தியானம் சாப்பிட்டதே வயத்துலே டம்முனு இருக்கு. வெறும் ஐஸ் வாட்டர் கொடுங்கோ போதும்."

ஐஸ் வாட்டர் வந்தது.

"ராத்திரி சாப்பிட வந்துடுவியாம்மா?"

"ம்... தாமுவும் என்கூட சாப்பிட்டாலும் சாப்பிடுவான்— அவனுக்குப் பிடிச்சதா ஏதாவது பண்ணிடுங்கோ, மாமா—"

அப்பு சரி என்று தலையாட்டினார்.

கேட்டில் தாமுவின் அம்பாஸிடர் கார் நுழைவது தெரிய, எழுந்து வராந்தாவில் நடந்து, படிகளில் இறங்கினாள் லாவண்யா.

கார் அருகில் நின்றது.

"ஹாய் தேர்... யு லுக் நைஸ்!"

சிரித்துக்கொண்டே காரின் முன்ஸீட்டில் ஏறி அமர்ந்தாள் லாவண்யா.

கார் கிளம்பி பெரிய அரைவட்டமாய் இருந்த புல்வெளியைச் சுற்றிக்கொண்டு கேட்டைத் தாண்டியது. கூர்க்கா எழுந்து நின்று சலாம் வைத்தான்.

வலது பக்கம் திரும்பி போயஸ்கார்டனை விட்டு வெளியே வந்ததும், வேகத்தைக் கூட்டினான் தாமு.



"ட்ரைவ் இன் ரெஸ்டாரண்டுக்குப் போய் காபி சாப்பிட்டுண்டே பேசலாமா?"

"ம்..."

கார் ட்ரைவ் இன்னில் நுழைந்து, பச்சைக் குடையாய்க் கவிழ்ந்த மரம் ஒன்றின்கீழ் நின்று, சர்வர் வந்து ஆர்டர் எடுத்துப் போகும்வரை இருவரும் ஏதும் பேசவில்லை.

முதலில் லாவண்யாதான் மௌனத்தைக் கலைத்தாள்.

"ஸோ?"

நிமிர்ந்து அவளைத் தீர்க்கமாய் பார்த்தான் தாமு.

சலனமில்லாத லாவண்யாவின் முகத்தைக் கண் கொட்டாமல் பார்க்கையில், எத்தனை அதிசயமான பெண் இவள் என்று வழக்கமாய் தோன்றும் வியப்பு இப்போதும் ஒரு கணம் தோன்றி மறைந்தது.

"என்னமோ விஷயம் சொல்றேன்னு போன்லே சொன்னே. இப்போ இப்படிப் பேசாம இருந்தா என்ன அர்த்தம், தாமு?"

"ம்? சொல்லத்தானே லவி வந்திருக்கேன். அதுக்குள்ளே அவசரப்பட்டா எப்படி? ஓ.கே... முந்தாநாள் நீ சொன்ன விஷயத்தைப்பத்திதான் ரெண்டு நாளா எனக்கு யோசனை. முதல்லே இதெல்லாம் சரிப்பட்டு வருமானு ரொம்பக் கவலையாத்தான் இருந்தது. ஆனா, தொடர்ந்து அதை யோசிச்சுப் பாக்கறப்போ உன் கோணத்தை என்னால சரியா புரிஞ்சுக்க முடியறது. லவி... நீ சாதாரண பொண்கள் மாதிரி என்னிக்குமே நடந்துண்டதில்லே, யோசிச்சதில்லே... நீ வித்தியாசமானவ... புத்திசாலித்தனமா, விவேகத்தோட நீ எதுவும் செஞ்சுதான் நா இத்தனை வருஷங்களா பாத்திருக்கேன். அதனாலே நீ செய்ய விரும்பற காரியத்துக்கு என்னோட முழு ஆதரவைக் கொடுக்கறதுனு நேத்திக்கு தீர்மானம் பண்ணினேன்."

தாமு நிறுத்தின கணத்தில் கண்களை விரித்து லேசாய் சிரித்தாள் லவி.

உன் பாராட்டு எனக்குப் பிடிக்கிறது, நன்றி— என்று தெரிவிக்கும் சிரிப்பு.

சர்வர் காபியைக் கொணர்ந்து கதவில் மாட்டியிருந்த ட்ரேயில் வைத்துப் போனான்.

ஒரு கப்பை லாவண்யாவிடம் நீட்டிய தாமு இன்னொன்றைதான் எடுத்துக்கொண்டான். மேலே படர்ந்திருந்த நுரையை மெதுவாய் உறிஞ்சிக் குடித்தான்.

"நீ கேட்ட விதத்துல ஒரு பொண் இருக்கா, லவி... ஆனா அவ நம்ம கூட ஒத்துழைக்க ரெடியா, இல்லையானு கிட்டப்போய் பேசிப் பாத்தாத்தான் தெரியும்..."

தூரத்தில் இருந்த விளையாட்டு மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. ஸீஸாவில் இரண்டு, ஊஞ்சலில் நாலு. ஒரு குழந்தையை ஊஞ்சலில் வைத்துக் கத்தக்கத்த இன்னொன்று தள்ளியது.

"மேலே விவரம் சொல்லு, தாமு..."

பெரிசாய், முக்கியமான விஷயத்தைக் கேட்கும்போதுகூட இவள் நிதானமிழக்காமல், படபடக்காமல் இருப்பது எத்தனை பெரிய சமாச்சாரம்! எத்தனை பெண்களால இப்படியிருக்க முடியும்?

தாமுவுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. அந்த உணர்வுடனேயே பேசினான்.

"அவ பேர் மேனகா; பெரிய நடிகையாகணும்ங்கற ஆசைலே வீட்டை விட்டு ஓடிவந்து, இன்னிக்குத் துணைநடிகையா நாலைஞ்சி சினிமாவிலே தலையை, உடம்பைக் காட்டியிருப்பதோடு சரி. சின்னவதான். நா பழகினவரைக்கும் புத்திசாலியாத் தெரிஞ்சா..."

"நீ பழகினவரைக்கும்னா?"— லவியின் குரலில் குறும்பு எட்டிப்பார்த்தது.

"ஹேய்... உன் கேலிக்கு வேற ஆளைப்பாரும்மா..."— லாவண்யாவின் சிரிப்புக்கு அர்த்தம் புரிந்த தாமு வேகவேகமாய் தலையை ஆட்டிவிட்டுத் தானும் சிரித்தான்.

"ஆல் ரைட்... சொல்லு..."

"எனக்கு இவளை ரெண்டு வருஷமா தெரியும்... தெரியும்னா, மேனகாங்கிற அழகான, துடிப்பான சின்னவயசுப் பெண், துணை நடிகையா நடிக்கறாங்கற விதத்துல... நெருக்கமா பழக்கம் இல்லே... என்னோட 'இண்டியா டுடே'யை நீ பார்த்திருக்கயே, அதில் இவ, சில சீன்களிலே வந்திருக்கா... கோயில் சிற்பங்களைக் காட்டி, உடனே உயிருள்ள பொண்ணை அதே போஸில் நாட்டியமாடறதைக் காட்டியிருக்கேனே, அது உனக்கு ஞாபகமிருக்கா? அந்தப் பொண், இந்த மேனகாதான்..."

லாவண்யாவுக்கு ஞாபகம் வந்துவிட்டது. சிலை போன்ற வாளிப்பான உடல்; சின்ன இடை, அகன்ற துடைகள், எடுப்பான



மார்பகங்கள். 'இந்தப் பெண் ரொம்ப அழகு' என்று படத்தைப் பார்த்த நிமிஷத்தில் தான் நினைத்தது இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

அவளா? அந்த அழகானவளா?

சற்றே லாவண்யாவின் முகம் பூரித்ததைக் கண்ட தாமுவுக்கு இவளுக்கு மேனகா யார் என்பது புரிந்துவிட்டது. அவளை இவளுக்குப் பிடித்திருக்கிறது என்பது தெளிவானது.

"அப்பறம் சொல்லு..."

"நீ கேட்டதுக்குச் சம்மதிக்க ரொம்ப துணிச்சலான பொண் ஒருத்திதானே முன்வருவா... எனக்குத் தெரிஞ்ச பொண்களை எல்லாம் மனசிலே அலசிப் பார்த்தேன். மேனகாவை மட்டுமே என்னால தேர்ந்தெடுக்க முடிஞ்சது... 'இண்டியா டுடே' எடுத்த போது நிர்வாணச் சிலைகள் மாதிரியே போஸ் பண்ணக்கூடிய பொண்ணை ரொம்ப சிரமப்பட்டு நா தேடவேண்டியிருந்தது. எதேச்சையா ஒருநாள் இவளைச் சந்திச்சேன். இவ உடல்கட்டு எனக்குச் சரியாப்பட்டது. தோல் நிறத்துலே மெல்லிசு உடைமேலே, நிறைய நகைகளைப் போட வெச்சு எடுக்கலாம்னு நினைச்சேன். ஆனா, இந்த மேனகா என்ன சொன்னா தெரியுமா? 'நிர்வாணமா இருக்கற பாவனையை உண்டுபண்ணலாம்னா, நிஜமாவே நிர்வாணமா நின்னா, என்ன ஸார் தப்பு? எனக்கு ஆட்சேபணை இல்லை'னு ரொம்ப தைரியமா பேசினா... அதுக்கு அப்பறம்தான் நா நினைக்கற விதத்திலே அந்தக் காட்சிகளை உருவாக்க முடிஞ்சுது... நா ஏற்கெனவே சொன்ன மாதிரி எனக்கு அவளைத் தொழில் ரீதியாகத்தான் தெரியும். ரொம்ப நெருக்கமா தெரியாது. விசாரிக்கலாம்னா அனாவசியமா நாலு பேருக்கு விஷயம் தெரிய இடம் கொடுத்துடுவோமோனு தயக்கமா இருக்கு... உனக்கு சரிப்பட்டா சொல்லு... மேலே நா அவகிட்ட பேசிப் பாக்கறேன்... என்ன சொல்றே...?"

லாவண்யா யோசனையில் ஆழ்ந்தாள்.

பெயராலும், உருவத்தாலும் மட்டுமே தெரிந்த மேனகா கண்முன்னால் நின்றாள். சின்னவயசுப் பெண், உடம்பும் முகமும் நன்றாய் இருக்கின்றன. டான்ஸ் தெரிந்தவள். படித்திருக்கிறாளோ...? சொந்த ஊர் எது? உறவுக்காரர்கள் இருக்கிறார்களா?

தன் சந்தேகங்களை தாமுவிடம் கேட்டாள்.

"படிச்சிருக்காளானு எனக்குத் தெரியாது, லவி... ஆனா... கொஞ்சம் இரு... அவ என்கூடப் பேசறப்போ சகஜமா இங்கிலீஷ் கலந்து பேசினா... ஸோ... கொஞ்சம் படிச்சவளாய் இருக்கலாம். அவ பேச்சு புத்திசாலித்தனமா இருந்தது, லவி... முக்கியமா அவ துணிச்சல்காரியா இருக்கா... ஆமா, ஊர், உறவு என்னவானா என்ன? அதுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கறே?"

அதுவும் சரிதான், பெண் சின்னவளாய், அழகானவளாய், புத்திசாலியாய், முக்கியமாய்த் துணிச்சல்காரியாய் இருக்கிறாளே, வேறு என்ன வேண்டும்?

சர்வர் வந்து பில்லுக்குப் பணத்தை வாங்கிப் போனான். காக்கிச்சட்டை அணிந்த பையன் ட்ரேயைக் கழட்டினான்.

மௌனமாய் லாவண்யா தனக்குத்தானே ஏதோ எண்ணிப் பார்த்தாள்.

பிறகு, "அவ வீடு உனக்குத் தெரியுமா, தாமு?" என்றாள்.

"ம்? வீடு தெரியாது, ஆனா அட்ரஸ் தெரியும்."

"இப்பப் போனா அவ இருப்பாளா?"

"சொல்ல முடியாது... ஷூட்டிங் இல்லேன்னா இருப்பா..."

"ஓ.கே. கிளம்பு, தாமு... அவளை நேரே பாத்துப் பேசிடலாம்..."

நிமிர்ந்து முழுசாய் லாவண்யாவைப் பார்த்தான் தாமு.

"இவ்வளவு அவசரஅவசரமாய் எல்லாத்தையும் பண்ண ணுமா, லவி? இன்னும் கொஞ்ச நாள் கழிச்சுப் பாத்தா என்ன? ராம் பம்பாயிலேந்து வந்ததும் அவன்கிட்டப் பேசிட்டு, இன்னும் கொஞ்சம் யோசனை பண்ணிப் பாத்துட்டு..."

"நோ— தாமு... நா நிறைய நாளா, ஏன் மாசமா, வருஷமா யோசனை பண்ணிட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். அதனாலே இன்னும் இதை ஆறப் போடறதிலே எனக்கு இஷ்டம் இல்லே. என் மனசிலே நா தீர்மானமா இருக்கேன். அப்பறம் எதுக்குத் தயங்கணும்? போய் இந்தப் பொண்கிட்ட பேசிப் பாப்போம்... அவ பேச்சு சரியாப் படலைன்னா, அவளை என் மனசுக்குப் பிடிக்கலைனா இதை இப்படியே விட்டுடுவோம்... முதல்ல முயற்சி பண்ணுவோம்... தடுக்காதே தாமு... ப்ளீஸ்..."

ஒரு நிமிஷ மௌனத்துக்குப் பிறகு தாமு காரை ஸ்டார்ட் செய்தான். என்ன தோன்றியதோ திரும்ப என்ஜினை அணைத்து விட்டு லாவண்யாவைப் பார்த்தான்.



"ராம்கிட்ட இதைப்பத்திப் பேசாம, நாம மேலே போறது சரியாப் படலியே, லவி! அவன் இதைச் சரியாப் புரிஞ்சுப்பானா? வீணா அவன் மனசைப் புண்படுத்தக் கூடாது பாரு..."

தாமுவை ஏறிட்ட லாவண்யாவின் கண்கள் லேசாய்க் கலங்கின மாதிரி இருந்தன.

"ராமைப் புண்படுத்த எனக்கு மட்டும் பிடிக்கும்னு நீ நினைக்கறியா, தாமு? அது எனக்குச் சாத்தியம்னும் நீ நினைக்கறியா?"

"அப்படி இல்ல, லவி... இது ரொம்ப ஸீரியஸ் விஷயம்... அவன் சம்பந்தப்பட்ட விஷயம்... அதனாலேதான் அவன்கிட்டே முதல்லே பேசாம இதுலே இறங்கறது தப்போனு தோணறது..."

"அவரைச் சரிபண்ண முடியும், சம்மதிக்க வைக்க முடியுங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு, தாமு... அவர் அற்புதமான கணவர்... சொல்றதைச் சொல்ற விதமா சொன்னா கண்டிப்பா ஒத்துப்பார்... ஆனா, ரொம்பக் கஷ்டமான காரியம்தான், எனக்குத் தெரியறது..."

ஒரு முடிவுடன் பேசுகிறாள் என்பது புரிய தாமு காரை ஸ்டார்ட் செய்தான்.

ரிவர்ஸில் சென்று கியரை மாற்றிச் சுற்றிலும் நின்ற கார்களை வளைத்துக்கொண்டு வெளியேறினான்.

"நீ சொல்றதும் சரிதான்... ராம் ரொம்ப திடமான, நேர்மையான, அழுத்தமான சிந்தனை கொண்ட நல்ல கணவன். உணர்ச்சிகள் அவனுக்கு அடிமையே தவிர, அவன் உணர்ச்சி களுக்கு இல்ல... பித்துக்குளித்தனமான குழப்பங்கள் எல்லாம் அவன்கிட்ட வராதுதான்... ஆனா...? சரி, உன் மனசிலே நீ தீர்மானம் பண்ண பிறகு, நா எதுவும் சொல்லி குறுக்கே நிக்க மாட்டேன். நீ நினைக்கறது நல்லபடியா முடியும். வா... போய் மேனகாவைப் பாக்கலாம்..."

தனக்குத்தானே முணுமுணுக்கிற குரலில் பேசின தாமு, வண்டியை ஜெமினி பாலத்தடியில் செலுத்தி கோடம்பாக்கத்தை நோக்கி ஓட்டினான்.

கணவனிடம் பேசாமல் காரியத்தில் இறங்குகிறோமே என்ற சலனம் மனசில் பரவ, ஸீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள் லாவண்யா.

இந்த மேனகாவைப் பார்க்கவேண்டும், மனசுக்குப் பிடிக்க வேண்டும், அவள் இதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும். ஓ!

எவ்வளவு இருக்கின்றன! இதையெல்லாம் தாண்டிக் கொண் டல்லவா ராமிடம் வரவேண்டும்? எதற்காக 'சுக்லாம் பரதரம்' கொட்டும்போதே அவரிடம் இதைப்பற்றிப் பேசவேண்டும்? இது முழுக்க முழுக்க ராம் சம்பந்தப்பட்டதுதான். ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் கடைசியில் 'சரி' அல்லது 'மாட்டேன்' என்று சொல்லுவதுதானே அவர் வேலை? முதலில் இந்த மேனகாவைப் பார்க்கலாம்... அப்புறமாய் அவரிடம் பேசலாம். அவர் புரிந்து கொள்வார். கண்டிப்பாய் என் ராம் எனக்கு எப்போதும் இதமாய் நடக்கத்தான் விருப்பப்படுவார். உங்களை நான் நேசிக்கிறேன், ராம்... அந்தக் காதலின் காரணமாய்த்தான் இப்படியொரு காரியத்தில் இறங்கியிருக்கிறேன் என்று புரிந்துகொள்வீர்களா ராம்?

**லா**வண்யா எம்.ஏ. இறுதி ஆண்டில் இருந்தபோதுதான் அவளும், ராமும் முதன் முறையாகச் சந்தித்தனர்.

பியூஸி. முடித்ததும் மருத்துவம் படிக்க ஆசைப்பட்டவளை கைலாசம் தடுத்துவிட்டார்.

"அம்மாடி! மெடிகல் கோர்ஸா? முழுசாய் ஆறு வருஷம்? கணவன், குழந்தைனு ரொம்ப கவனம் கொடுக்க முடியாம ப்ராக்டீஸ் பண்ண வேண்டிய புனிதமான தொழில்... என்னம்மா நீ? சட்டுபுட்டுனு உனக்குக் கல்யாணத்தைப் பண்ணி வீடு நிறைய பேரன் பேத்திகளோடு வாழணும்னு நா ஆசைப்படறதை நடக்க விடமாட்டியா?"

"சட்டுபுட்டுனு கல்யாணம்? வீடு நிறைய பேரன் பேத்திகள்? ஓ— அப்பா— இது ரொம்ப அதிகம்பா..."

"என்னம்மா அதிகம்? எங்களுக்குக் கல்யாணமான பத்தாம் மாசம் நீ பிறந்தே... உங்கம்மா மட்டும் இப்படி அகாலமா போய்ச் சேராம இருந்தா, உனக்கப்பறம் எட்டோ, பத்தோ கண்டிப்பா இருந்திருக்கும்... ஒண்ணே ஒண்ணை வெச்சிண்டு, அதுக்குத் தலைவலி, கால்வலினாகூட பயந்துண்டு... என்னம்மா அசட்டுத் தனம் இது?"

சிரித்துக்கொண்டே தன்னை வம்புக்கு இழுக்கும் அப்பாவின் கைகளை இழுத்துத் தன் பிடிக்குள் வைத்துக்கொண்டாள் லாவண்யா.

"அப்பா ப்ளீஸ், நா மெடிகல் காலேஜ்ல சேர்றேன்பா!"



"ப்ளீஸ், நா நல்ல மாப்பிள்ளையைத் தேடறேன்மா!"

இவள் பேசின பாவனையுடனே அவரும் பேச, இருவரும் சிரித்துவிட்டார்கள்.

"அப்போ சரி— நா பி.ஏ., எம்.ஏ., முடிச்சுட்டு ஐ.ஏ.எஸ். படிக்கறேன். ஓ.கே? இதுக்கு நீங்க சரினு சொல்லித்தான் ஆகணும்!"

கைலாசம் யோசித்தார்.

பிடிவாதக்காரப் பெண்; விட்டுக் கொடுத்துப் பிடிப்பதுதான் சரி.

"சரி, பி.ஏ., படிச்சு முடிச்சுடு— அப்பறம் இதப்பத்தி யோசிக்கலாம்."

மருத்துவ ஆசையை மூட்டைகட்டிவைத்துவிட்டு, பி.ஏயில் லவி சேர்ந்தது இப்படித்தான்.

பி.ஏ. யில் முதல் வகுப்பில் பாஸ் செய்து, யுனிவர்ஸிடி ராங்க் வாங்கியது, எம்.ஏ., படிக்கிறேன் என்ற சிணுங்கல் இல்லாமலேயே அவளை மேலே சேரவைத்தது.

எம்.ஏ. முதல் வருஷத்தில் இருக்கையிலேயே கைலாசம் மனசுக்குள் ஒரு திட்டம் தீட்டத் தொடங்கிவிட்டார்.

புதுசாய் கம்பெனியில் மார்க்கெட்டிங் கன்ஸல்டன்டாகச் சேர்ந்திருந்த ராம் மேல் ஒரு கண் வைத்ததில் அவன் நடவடிக்கை, பேச்சு, திறமை எல்லாம் வெகு திருப்திகரமாக இருந்ததால், லாவண்யா எம்.ஏ. இரண்டாம் ஆண்டு படிக்கும்போது மெள்ள மெள்ளக் காரியத்தில் இறங்கினார்.

"நம்ம கம்பெனில ஒரு வருஷத்துக்கு முன்னாலே நாலைஞ்சு எம்.பி.ஏ.க்களை எடுத்தோமே, ஞாபகமிருக்கா லவி? அதுலே ராம்னு ஒரு பையன்; ரொம்ப புத்திசாலிம்மா!" என்றார்.

"இந்த ராம் கொடுக்கிற யோசனை எத்தனை கச்சிதமா இருக்கு தெரியுமா, லவி..? ரொம்ப புத்திசாலி!" என்றார் இன்னொரு நாள்.

"தொழிலாளர் பிரச்சினை எல்லாம் நன்னா கவனிக்கறான். தொழிலாளர்கள் மனசு புரிஞ்சு நடக்கிறான். மனோதத்துவம் தெரிஞ்சு பேசறான். பரவாயில்லே..." என்றார் மற்றொரு நாள்.

"தலையெழுத்தேனு எல்லாரும் பணத்துக்காக உழைக் கறப்போ இவன் உண்மையா, சிரத்தையோட உழைக்கறது

சந்தோஷமா இருக்கு. லவி... இவன் முன்னுக்கு வரது நிச்சயம்... நீ வேணா பாரும்மா" என்றார் இன்னும் ஒரு நாள்.

சாதாரணமாக யாரையும் அளவுக்கு மேல் புகழாத அப்பா இந்த ராமை மட்டும் ஆகா, ஓகோ என்று புகழ்வது முதலில் லாவண்யாவுக்கு வேடிக்கையாய் இருந்தது; அப்புறம் இந்த ராம் என்ன அப்படிப்பட்ட கொம்பனா, இவனைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கியது.

அதன்படி எப்போது அப்பா ஆபீஸுக்கு வாயேன்ம்மா என்றாலும் மறுத்துவிடும் லவி, அன்றைக்கு 'காலேஜிலேந்து வீட்டுக்குப் போறச்சே, ஆபீஸுக்கு வாம்மா... நானும் உன்னோடு வந்துடறேன்' என்று சொன்னபோது, 'உங்க கார் என்னாச்சு?' 'கம்பெனி கார்கள் க்யூவில் நிற்குமே அதெல்லாம் என்னாச்சு?' என்றெல்லாம் கேட்காமல் சமர்த்தாக நாலேகாலுக்கு ஆபீஸ் முன் போய் இறங்கினாள்.

அப்பாவின் அறையில் இவள் அமர்ந்த மறுநிமிஷம் அவர் கேட்ட விவரங்களுடன் ராம் வந்து சேர்ந்தான்.

வந்து சேர்ந்தான் என்ன? வரவழைக்கப்பட்டான்.

ராமின் பெருமைகளை மட்டுமே இதுநாள்வரை கேட்டிருந்த லவி, அவனைக் கண்ணால் கண்டதும் ஒரு நிமிஷம் பிரமித்துத் தான் போனாள்.

நல்ல உயரம்.

ஆறடி இரண்டங்குலம்? இருக்கும்.

பரந்த மார்பு... விளையாட்டு வீரனாக இருக்கவேண்டும்.

ரொம்ப யதார்த்தமாய் மகளையும், ராமையும் அறிமுகப்படுத்தி வைத்து, பெண் பார்க்கும் படலத்தை நாகரிகமாய் முடித்தார் கைலாசம்.

ராமைத் தனக்கு மாப்பிள்ளை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக்கப்பட்டு ஆறு மாசங்கள் ஆகிவிட்டா லும், மகளின் ஸ்வபாவம் கொஞ்சம் பயமுறுத்தியதால் கைலாசம் அவள் போக்குக்கே போய் வளைக்க எண்ணினார்.

இந்த லாவண்யா இருக்கிறாளே, அவள் ஒரு அலாதித் தன்மை உடைய பெண்.

சிந்தனையில் தெளிவு, நிதானம், எல்லாம் எப்போதும் வயதுக்கு மீறி உண்டு.



அதிகம் பேசமாட்டாள். ஆனால் பழகி, ஒருத்தரைப் பிடித்து விட்டால் கலகலப்பாள். அதுவரை கஷ்டம்தான்.

தனக்காக எதுவும் அவளுக்குத் தோன்றவேண்டும். இது எனக்கு வேண்டும், இது வேண்டாம், இது அவசியம், இது அனாவசியம் என்று தன் மனசுக்குப் பட்டால் ஒழிய, எளிதில் எந்தக் காரியத்திலும் இறங்கமாட்டாள். தீர்மானித்து இறங்கி விட்டால், அதை முடிக்காமல் விடமாட்டாள்.

பிடிவாதம், அழுத்தம் இருந்த அளவுக்குப் புத்தியும், திறமையும் இருந்ததால் லட்சத்தில் ஒருத்தி என்று அவளை அறிந்தவர்கள் நம்பும்படிதான் லாவண்யா இருந்தாள்.

கெக்கேபிக்கே சிரிப்பு? பேச்சு? ம்ஹூம்– கிடையாது. சின்னதாய்ப் புன்னகைப்பாள். ஆனால் அந்தப் புன்னகையே காண்பவர்கள் மனசில் இடம் பிடிப்பதாய் இருக்கும்.

லாவண்யா படிப்பில் முதல். டென்னிஸ் சாம்பியன். நீச்சல், குதிரையேற்றம், மலையேற்றம் என்று ஒன்றுவிடாமல் எல்லாவற் றிலும் தேர்ச்சி பெற்றவள். தோற்றத்திலும், பணத்திலும் பூரண மாய் இருந்ததால் அவளை ஒரு அழகான, தைரியம் நிறைந்த பெண்சிங்கமாகவே கைலாசம் மனசில் பாவித்து வளர்த்து விட்டார். பெண்ணுக்கு வயசு ஏறஏற, இந்தப் பெண்சிங்கத் துக்கு ஏற்ற, இவளுக்கு ஈடுகொடுத்து இவளைவிட அதிகமாய் பிரகாசிக்கக்கூடிய ஆண்சிங்கத்துக்கு எங்கே போவது என்று சிந்தித்திருந்த சமயத்தில்தான் ராம் அவர் கண்ணில் பட்டு மனசில் விழுந்தான்.

ராமைப் பார்க்கப்பார்க்க, பழகப்பழக இவனைத் தன் மாப்பிள்ளையாக வளைத்துவிட வேண்டும் என்ற ஆசை பெரிசாய் வளர்ந்தது.

இவர் ஆசைப்பட்டால் மட்டும் ஆயிற்றா?

ஆண்களில் ராம் ஒரு சிங்கம் என்பது லாவண்யாவுக்குத் தானாக மனசில் பதியவேண்டுமே! பிறர் சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டாளே! கைலாசம் யோசித்தார்.

பின் ராமுக்கும் லாவண்யாவுக்கும் முடிச்சுப் போடும் எண்ணம் தன் மனசில் இருப்பதை மகள் அறியாத வகையில் காரியத்தில் இறங்கினார்.

ராமின் தோற்றம் பற்றியோ, குணம் பற்றியோ, அவன் ஒரு சிறந்த விளையாட்டு வீரன் என்பதைப் பற்றியோ தப்பித்தவறிக்

கூட பேசவில்லையாதலால், லாவண்யாவுக்கு அப்பா மனசில் உள்ள திட்டத்தைப் புரிந்துகொள்ள வாய்ப்பே இல்லாமல்தான் போயிற்று.

அப்பாவைக் கவர்ந்த அந்த புத்திசாலியை நாமும் பார்க்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு மட்டும் வந்தவள், ராமின் நிமிர்ந்த பார்வையில், கம்பீரமான தோற்றத்தில், தன்னை இழந்து, அப்பா வெகு சாமர்த்தியமாக விரிந்திருந்த வலையில் பொத்தென்று விழுந்தாள்.

லாவண்யாவுக்கு ராமையும், ராமுக்கு லாவண்யாவையும் பிடித்துப்போனது என்பது அந்த முதல் சந்திப்பிலேயே தெளிவாக, அடுத்த ஞாயிற்றுக்கிழமை வீட்டிலிருந்த டென்னிஸ் கோர்ட்டில் விளையாட ராமைக் கைலாசம் அழைத்தார்.

ராம் குறித்த நேரத்தில் வந்தான்.

அழகான, பணக்காரப் பெண்ணோடு டென்னிஸ் விளையாடுகிறோம் என்ற பரபரப்பில், ஆட்டத்தைக் கோட்டைவிட்டு ஈ என்று இளிக்காமல் நிதானமாய், கச்சிதமாய் ஆடி நேரடியாய் லாவண்யாவைத் தோற்கடித்தான்.

ஆட்டம் முடிந்த பிறகு புல்வெளியில் அமர்ந்து காலையுணவு சாப்பிட்டபோது, லாவண்யாவின் எம்.ஏ. பாடங்களை ஆழமாய் அலசினான். நாட்டின் அரசியலைத் தீர்க்கதரிசனத்துடன் விமர்சித்தான்.

சாதாரணமாகத் தன்னோடு பேசும் எந்த இளைஞனும் தன்பால் அசடு வழிவதையும், 'இன்னிக்கு சாயந்திரம் ஒரு சினிமா போகலாமா?' என்பதையும், 'காரில் ஒரு ட்ரைவ் போகலாமா' என்பதையும் கேட்டுக்கேட்டு அலுத்திருந்த லாவண்யாவுக்கு ராம் வித்தியாசமாய்த் தெரிந்ததில் என்ன ஆச்சரியம்!

அன்று இரவு கைலாசத்திடம் "உங்க ராம் நிஜமாவே கெட்டிக்காரனாய்த்தான் இருக்கான்ப்பா—" என்றாள் தானாகவே வலிய.

அப்புறம்?

அப்புறம் என்ன?

வாராவாரம் டென்னிஸ் விளையாட வந்த ராம், தினம் வரத் தொடங்கி லாவண்யாவின் உலகத்தை முழுமையாய் ஆக்கிரமித்துக்கொண்டான்.



ராமின் பெற்றோர் செகந்திராபாத்தில் இருந்தனர். அப்பா அரசு அதிகாரி. ராமைத் தவிர இன்னொரு பிள்ளை உண்டு.

கைலாசம் செகந்திராபாத்துக்குப் போய்வந்தார். கல்யாணம் நிச்சயிக்கப்பட்டு ஒரு நல்ல முகூர்த்தத்தில் லாவண்யா மிஸஸ் ராம் ஆனாள். ராம் கன்ஸல்டன்ட் பதவியிலிருந்து அஸோஸியேட் மானேஜிங் டைரக்டர் ஆனான்.

**அ**ன்றைக்குத் தூங்கி எழுந்ததிலிருந்து லாவண்யாவுக்கு வயிற்றில் லேசாய் வலி. சின்ன விஷயம்; இதைப்போய் பெரிசு பண்ணுவானேன் என்ற நினைப்பில் அவள் அதைப்பற்றி வெளியே ஏதும் சொல்லவில்லை. ஆனால் அன்று மதியம் லேசாய் உதிரப்போக்கு இருக்கவும், என்ன இது என்று ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள்.

நாளே ஆகவில்லையே. அதற்குள் எப்படி?

எதற்கும் தனக்கு ஞாபகமறதியாக இருக்கலாம் என்ற நினைப்பில் டயரியை எடுத்துப் பார்த்தாள். முந்தின மாதவிலக்கை இருபத்தி ஐந்தாம் தேதி அன்று குறித்திருந்தாள்.

இன்னிக்கு தேதி என்ன? பதினைந்து! கடவுளே! இருபது நாட்களிலா? இது என்ன, ஒரு மாசமும் இல்லாத புதுப் பழக்கமாய் இருக்கிறது! ஒரு வேளை கல்யாணம் ஆனால் சில பெண்களிடம் ஹார்மோனல் மாற்றங்கள் வரும் என்பார்களே, எனக்கும் அப்படித்தானா? இருக்கும்....

லாவண்யா அதோடு இதை விட்டுவிட்டாள்.

ஆனால் அடுத்த மாசமே, அதாவது அவர்களுக்குத் திருமணமான ஏழாம் மாசமே, மீண்டும் மாதவிலக்கு முந்திய முறை போலவே சற்றும் எச்சரிக்கை கொடுக்காமல், பதினேழாம் நாளே வந்தபோது 'இது என்ன பிரச்சினை' என்று லாவண்யா சலித்துக் கொண்டாள்.

அந்த முறை பத்து நாட்கள் ஆகியும் ரத்தப்போக்கு நிற்காமல் தொடர்ந்ததோடு, அவ்வப்போது வயிற்றில் முறுக்குவலியும் தோன்றவே ராமிடமும், அப்பாவிடமும் இதுபற்றிப் பேசினாள்.

"என்னம்மா லவி, ரெண்டு மாசமா இப்படி இருக்குனு அலட்சியமா சொல்றே? உடனே டாக்டரைப் பாரும்மா," என்று கைலாசமும்,

"எந்த டாக்டரைப் பாக்கலாம், லவி?" என்று ராமும் கேட்டதால், தன் சிநேகிதி ரமாவின் அக்காவான டாக்டர் சுசீலா வுக்கு போன் செய்தாள்.

டாக்டர் சுசீலாவும் அவருடைய டாக்டர் கணவரும் பத்து வருஷங்கள் லண்டனில் ப்ராக்டீஸ் செய்தவர்கள். சுசீலா லண்டன் மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவத்தில் விசேஷப் பயிற்சி பெற்றவர்.

கணவனும், மனைவியும் கொள்ளையாய் சம்பாதித்தும்கூட, வயசு வந்த பெண்களை அந்த நாட்டுச் சூழ்நிலையில் வளர்க்கப் பிரியப்படாமல், பெண்கள் வயசுக்கு வரும் முன்னரே இந்தியா வுக்கு வரத் திட்டமிட்டு, இங்கு வந்து இரண்டு வருஷங்கள் ஆகின்றன. கையில் ஏகமாய்க் கொண்டுவந்திருந்த பணத்தில், நுங்கம்பாக்கத்தில் நவீன வசதிகளோடுகூடிய மருத்துவமனை யைக் கட்டி, இப்போது கணவனும் மனைவியுமாய் திறம்பட நடத்து கிறார்கள். நல்ல பெயர், அதைவிட நல்ல வருமானம்.

டாக்டர் சுசீலாவிடம் முன்கூட்டியே நேரம் குறித்துக்கொண்டு லாவண்யா கிளம்பினாள்.

குறித்த நேரத்தில் லாவண்யாவை ரிஸப்ஷனிஸ்ட் உள்ளே போகச் சொன்னாள்.

சென்றாள்.

"ஹலோ— லவி... எப்படியிருக்கே? நர்ஸிங்ஹோமை சாதாரணமா பாக்க வானு கூப்பிட்டுண்டே இருந்தேன், கடைசிலே நோயாளியா வந்திருக்கியா? என்ன விஷயம்? ஏதாவது நல்ல சேதியா?"

சின்ன வயசில் பள்ளியில் ரமாவும், இவளும் சிநேகமாகி பி.ஏ. முடிய சேர்ந்து படித்ததால் குடும்பம் முழுவதுக்குமே லாவண்யாவை நன்றாகத் தெரியும். இவள் எம்.ஏ. படித்தபோது ரமாவுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. இப்போது கணவன், குழந்தை யுடன் நைஜீரியாவில் இருக்கிறாள்.

"கல்யாணத்துலே உன்னைப் பாத்ததுதான்; அப்பறம் நீ டின்னருக்கு ஒரு நாள் கூப்பிட்டே. எனக்கு வர ஒழியலை. சரி, என்ன விஷயம் சொல்லு?"

திருமணமாகி ஏழு மாசங்கள் ஆகின்றன. கர்ப்பமாகி இருப்பாள், பரிசோதனைக்கு வந்திருக்கிறாள் என்று நினைத்துப்



பேசிய டாக்டருக்கு விவரம் அறிந்தபோது எப்படியோ இருந்தது.

"ஐ'ம் ஸாரிம்மா— உடம்பு கொஞ்சம் பெருத்துண்டு இருக்கயா, அதனாலே கர்ப்பமா இருக்கேன்னு நினைச்சுட்டேன்— வா— இப்படி டேபிள்லே படுத்துக்கோ— லெட் மீ எக்ஸாமின் யூ—"

பரிசோதித்து நிமிர்ந்த டாக்டரின் முகத்தில் லேசாய் சலனம்—

"என்ன டாக்டர்?"

"ம்? ஒண்ணும் தெளிவாச் சொல்ல முடியலை— எதுக்கும் மாத்திரை தரேன்— சாப்பிடு— அடுத்த பீரியட்ஸுக்கு என்னைக் கட்டாயம் வந்து பாரு. ஓகே!"

சில மருந்துகளை எழுதிக் கொடுத்து, நாலு நாட்களுக்குப் பிறகு எப்படி இருக்கிறது என்று டாக்டர் போன் பண்ணச் சொன்னார்.

மாத்திரைகளின் சக்தியோ என்னமோ, இரண்டாம் நாளோடு உதிரப்போக்கும் வலியும் நின்றுவிட்டன.

டாக்டர் சொன்னபடி போனில் விஷயத்தைத் தெரிவித்தாள் லவி.

"குட்... அடுத்த மாசம் திரும்பப் பாக்கறேன். கட்டாயம் வா. கவலைப்பட ஒண்ணுமில்லே..."

டாக்டரின் நெற்றிச் சுருக்கத்தையோ, அடுத்த மாசம் பார்க்கிறதையோ லாவண்யா பெரிசாய் எடுத்துக்கொள்ளவில்லை.

ராம் புனாவுக்கும் ராஜஸ்தானுக்கும் வேலை விஷயமாய் சென்றபோது அவளையும் உடன் அழைத்துப் போனதால் அடுத்த இருபது நாட்களுக்குக் கொட்டமடித்துவிட்டு ஊர் திரும்பி னார்கள். ஒரு வாரம் கழித்துதான் முப்பதாம் நாள் மணி அடித்துக் கூப்பிட்ட மாதிரி வந்துநிற்பது வரவில்லை என்பது புரிய, காலெண்டரை வைத்துக்கொண்டு கணக்குப் பார்த்தாள் லாவண்யா.

முப்பத்தி ஆறு நாட்கள்;

குட்னஸ்— குழந்தையா!

கல்யாணமானதுமே ராமும், லாவண்யாவும் உடனடியாகவே குழந்தை பெற்றுக்கொண்டுவிடலாம், அப்பாவுக்குத் திருப்தியாக இருக்கும் என்று தீர்மானித்துவிட்டார்கள். ஆறுமாசம்வரை ஒன்று மில்லை. அப்புறம் ரத்தப்போக்குக் கோளாறு. இப்போது குழந்தையா?

அன்று இரவு ராமும், லாவண்யாவும் இதைப்பற்றியே திரும்பத்திரும்பப் பேசி சந்தோஷப்பட்டார்கள். நாலு நாட்கள் கழித்து விஷயம் உறுதியான பிறகு அப்பாவிடம் சொல்லலாம் என்றும் பேசிக்கொண்டார்கள்.

மூன்றாம் நாள் மதியம் மூன்று மணி இருக்கும். சாப்பாட்டுக்கு வந்துவிட்டு அப்பாவும், கணவனும் கம்பெனிக்குப் போனபிறகு, கதைப் புத்தகத்தோடு உட்கார்ந்தவளுக்கு, அடிவயிற்றில் சொரேர் என்று வலி.

ஒரு நிமிஷம் துடித்துப்போய்விட்டாள்.

இது என்ன? சுளுக்கா? எங்கேயாவது பிடித்துக்கொண்டதா?

அடுத்த கால்மணியில் விட்டுவிட்டு பயங்கரமாய் வலி, பிராணன் போகிற மாதிரி.

இரண்டாக மடிந்து உட்கார்ந்தவண்ணம் ராமுக்கு போன் பண்ணினாள்.

பத்து நிமிஷத்தில் ராமும், கைலாசமும் வந்து சேர்ந்தார்கள்.

அதற்குள் இரண்டு முறை வாந்தி எடுத்து, தலை கிறுகிறு வென்று சுற்ற ஓய்ந்துபோய்விட்டாள் லாவண்யா.

இதயத் துடிப்பு வேகமாய் இருக்கிற மாதிரி தோன்றியது; நாக்கு உலர்ந்து போயிற்று; கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது.

வலி... வலி... 'ஹோ' என்று கத்தத் தூண்டும் வலி.

லாவண்யாவை அள்ளிப்போட்டுக்கொண்டு டாக்டர் சுசீலாவின் மருத்துவமனைக்கு ஓடினார்கள்.

நல்லவேளையாய் டாக்டரின் வீடு அதே காம்ப்பௌண்டில் இருந்தது.

பல்ஸ் பார்த்து, வலியை உணர்ந்த டாக்டருக்கு விவரத்தை ஊகிக்க முடிந்ததால் எமர்ஜென்ஸி ஆபரேஷன் மணியை அடித்து, தியேட்டருக்குள் லாவண்யாவை எடுத்துச் சென்றார்.

உதவியாளரும் நர்ஸ்களும் லாவண்யாவை ஆபரேஷனுக்குத் தயாரிக்கும் நிமிஷங்களில் இரண்டே வரிகளில் விஷயத்தை டாக்டர் சொன்னார்.

"ஓவேரியன் ஸிஸ்ட்... அது முறிக்கிண்டு இருக்கா, இல்லை சேதமாயிருக்கானு சந்தேகமா இருக்கு... சேதம் ஆன மாதிரிதான் தோணறது... உடனே திறந்து பார்த்து அந்த ஓவரியை எடுத்துடணும்... நல்லபடியா நடக்கும்னு நம்புவோம்..."



நல்லது நடக்கும் என்றே நம்புவோம் என்று டாக்டர் மனப் பூர்வமாய் வேண்டியது நடக்கவில்லை.

ஆபரேஷன் தியேட்டரில் லாவண்யாவின் வயிற்றுப் பகுதியை அறுத்துத் திறந்த டாக்டர் அதிர்ந்துபோனார்.

ஒரு பக்கம் ஓவரியில் ஸிஸ்ட் என்னும் நீர்க்கட்டி அப்போது தான் உடைந்து அந்தப்பக்க ஓவரியை எடுக்கவேண்டியது அல்லாமல், இன்னொரு பக்க ஓவரியிலும் பரவலாய் முத்து முத்தாய் பல ஸிஸ்ட்டுகளும் அதில் ஓரிரண்டு கொட்டைப் பாக்களவு வளர்ந்திருப்பதையும் பார்த்தவர் கலங்கிப் போனார்.

ஒவ்வொரு பெண்ணுக்கு ஆண்டவன் கொடுத்திருப்பது இரண்டு ஓவரிகள். இரண்டில் ஒன்று பழுதானாலும்கூட, மற்றதால் கருவை உற்பத்தி செய்ய முடியும். அதனால் குழந்தை பிறக்கும் வாய்ப்பு கெடுவதில்லை.

ஆனால்... இரண்டு ஓவரிகளையும் எடுத்துவிட்டால்?

கடவுளே...

நீர்க்கட்டி வெடித்துவிட்ட ஓவரியை எடுத்தபின் தன் இரு உதவியாளர்களையும் கிட்டத்தில் நிற்கவைத்துவிட்டு அவசரம் அவசரமாய் வெளியில் வந்தார் டாக்டர்.

அறுவை சிகிச்சைக்குப் பின் தங்கும் அறைக்கு ராமை வரவழைத்தார்.

எப்படிச் சொல்வது? நீளமாய்ப் பேசி சமாதானம் செய்ய வேண்டிய விஷயம் அல்லவா இது? ஆனால் அதற்கு நேரம் இல்லையே! ஐந்து நிமிஷங்களில் விவரத்தைச் சொல்லி ராமைப் புரிந்துகொள்ள வைக்க முடியுமா என்னால்?

"ஐ'ம் ஸாரி, மிஸ்டர் ராம்... ரியலி ஸாரி... கொஞ்சம்கூட எதிர்பாக்காத சேதியை உங்ககிட்ட நா இப்போ சொல்லப் போறேன். நா பயந்தது போலவே ஒரு பக்க ஓவரி சேதமாயிருக்கு... இன்னும் பத்து நிமிஷம் ஆயிருந்தாக்கூட லவி உசிருக்கு ஆபத்தாகி இருக்கும்... அதை எடுத்தாச்சு... ஆனா, கொஞ்சம்கூட எதிர் பாக்காத விதத்துலே இன்னொரு ஓவரிலேயும் ஏகப்பட்ட கட்டிகள் வளர்ந்திருக்கு. அதுலே ஒண்ணு ரெண்டு பெரிசாக் கூட இருக்கு... என்னைக் கேட்டா, டாக்டர்ங்கற முறைலே அந்த ஓவரியையும் எடுத்துடறதுதான் லாவண்யாவுக்கு நல்லதுனு சொல்லுவேன். ஒரு முறை சேதமான பிறகும், தெய்வாதீனமாக

காப்பாத்த முடிஞ்சுது— அடுத்த தடவை நாம இத்தனை அதிருஷ்ட சாலியா இருப்போம்னு என்ன நிச்சயம்?"

என்ன சொல்கிறார் இந்த டாக்டர்?

புரிந்துகொள்ள ராமுக்கு முழுசாய் இரண்டு நிமிஷங்கள் தேவைப்பட்டன.

"நாழியில்லே, மிஸ்டர் ராம். உங்க சம்மதம் வேணும்... என்ன பண்ணட்டும்... சொல்லுங்க..."

"......"

"ஐ'ம் ஸாரி, ராம். இதைத் தவிர்க்க முடியாது. தைரியமா இருங்கோ. லாவண்யாவோட நல்லதுக்காக நாம இதையும் எடுத்துடறதுதான் புத்திசாலித்தனம்..."

ராம் என்ன சொல்லுவான்?

"லாவண்யாவைவிட வேறு எதுவும் எனக்கு முக்கியமில்லே, டாக்டர்" என்று பேசி அவன் தன் சம்மதத்தைத் தந்ததும் டாக்டர் மீண்டும் தியேட்டருக்குள் போனார். அப்புறம் இரண்டு மணி நேரம் கழித்து ராமைத் தன் தனியறைக்கு அழைத்துப்போய் எல்லா விவரத்தையும் சொன்னார்.

போன மாசம் லாவண்யா பரிசோதனைக்கு வந்தபோதே கட்டிகள் உள்ள ஓவரியாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்த தால்தான், மறுமாசம் வரச் சொன்னாராம். ஆனால் இரண்டு மாச இடைவெளியில் அசுர வேகத்தில் இத்தனை வளர்ச்சி வந்துவிடும் என்று அவர் எதிர்பார்க்கவில்லையாம்.

"ரெண்டு மூணு மாசத்துலே கட்டி வளர்ந்து, முறுக்கிண்டு சேதமாறது அவ்வளவு சகஜமானதில்லே, மிஸ்டர் ராம். சாதாரணமா கட்டி இருக்கறதைக் கண்டுபிடிச்ச பல மாசங்கள் கழிச்சுக்கூட நாங்க ஆபரேஷன் பண்ணியிருக்கோம். லாவண்யா வின் உடைஞ்ச கட்டியும்கூடப் பெரிசா இல்லை. துரதிருஷ்டவசமா இப்படி ஆயிடுத்து! இந்த மாதிரி நடக்காதுன்னு சொல்ல முடியாது. ஆனா ரொம்ப அதிசயம்... ஆயிரத்துலே ஒண்ணு. நீங்க தைரியமா இருக்கணும், மிஸ்டர் ராம். உங்க தைரியம்தான் லாவண்யாவுக்குப் பெரிய டானிக்கா, தெம்பா இருக்கும்."

எதற்குமே பதில் பேசாமல் நின்ற ராம் கடைசியாய் ஒன்றே ஒன்றை மட்டும் சொன்னான்.



"ஒரு உதவி செய்ய முடியுமா, டாக்டர்? இந்த விஷயம் என் மாமனாருக்குக்கூடத் தெரிய வேண்டாம். லவிகிட்ட நா சொல்ற விதத்திலே சொல்றேன். ஆனா நம்ம மூணு பேரைத் தவிர வேற யாருக்கும் இது தெரிய வேண்டாமே, ப்ளீஸ்."

லாவண்யா இனி பிள்ளை உண்டாக இடமே இல்லை என்ற உண்மை ராம், லவி, டாக்டர் சுசீலா ஆகிய மூவரின் உள்ளங்களில் மட்டும் உறைந்துபோனது இப்படித்தான்.

ஆபரேஷன் முடிந்து நாலு மாசங்கள் முழுசாய் ஆன ஒரு நாளில், மனசுக்குள் ஏதோ தீர்மானம் பண்ணிக்கொண்டவளாய் லாவண்யா ராமிடம் பேசினாள்.

இரவு சாப்பாடு ஆகி, மாடிப் படுக்கையறையில் இருவரும் இருந்தனர்.

"உங்ககிட்டே ஒரு விஷயம் பேசணும்" என்றாள் லவி.

ஸ்டீரியோ ரெக்கார்டரில் ஆங்கிலப் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த ராம், த்வனியை சின்னதாக்கிவிட்டு எழுந்து வந்து லாவண்யாவின் அருகில் அமர்ந்து, அவள் தோளைக் கையால் அணைத்துத் தன்னோடு சேர்த்துக்கொண்டு "சொல்லு" என்றான்.

"நா பேசப் போறதைக் கேட்டு நீங்க வருத்தப்படக் கூடாது, கோபப்படக் கூடாது, நிதானமா கேக்கணும், சரியாப் புரிஞ்சுக் கணும்; ப்ளீஸ் ராம்..."

இது என்ன பெரிய பீடிகை என்கிற தினுசில் ராம் அவளைப் பார்த்தான்.

பின் 'நீ எது சொன்னாலும் அது சரியாகத்தான் இருக்கும்' என்பதுபோல மெதுவாய், நம்பிக்கை தரும் சிரிப்பொன்றைச் சிரித்தான்.

லாவண்யா சுற்றிவளைக்காமல் நேரே விஷயத்துக்கு வந்தாள்.

"நீங்க என்னை விவாகரத்து பண்ணிட்டு வேற கல்யாணம் பண்ணிண்டா என்ன, ராம்? மனுஷாளா பிறந்துட்ட எல்லாருக்கும் குழந்தை, குட்டினு வாழ ப்ரியம் இருக்கத்தான் செய்யும். இதுக்கு நீங்க மட்டும் விதிவிலக்கா என்ன? என் இயலாமை உங்களை ஏன் துன்பத்துக்கு உள்ளாக்கணும்? நீங்க தாராளமா இதப்பத்தி என்கிட்ட பேசலாம், ராம்... நா நிச்சயம் புரிஞ்சுப்பேன்..."

தொடர்ந்து பேசமுடியாமல் லாவண்யாவின் சோகம் அவளைக் கட்டிப்போட்டது. எவ்வளவோ முயன்றும், அடி

உதட்டைக் கடித்துக்கொண்டு முயன்றும், கண்களில் ஊறின நீர், கன்னங்களில் இறங்குவதை அவளால் நிறுத்த இயலவில்லை.

லாவண்யாவை அணைத்திருந்த பிடியைச் சட்டென்று ராம் விலக்கினான். முகம் கோபத்தில் சிவந்துபோக எழுந்து நாலு தடவை அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தான். என்னவோ சொல்ல நினைத்து, வார்த்தைகள் சரியாக வராததால் கொஞ்சம் தடுமாறினான். பின் ரொம்ப மெதுவாகப் பேசினான்.

"சாதாரண ஆம்பிளை மாதிரி என்னையும் நினைச்சுப் பேசிட்டயே, லவி! யாருக்கு என்னைத் தெளிவா புரிஞ்சிக்க முடியாட்டாலும் உன்னால முடியும்னு நம்பியிருந்ததைப் பொய்யாக்கிட்டயே, டார்லிங்... ஏன் இப்படிப் பேசினே? உன்னைவிட எனக்கு ஒரு குழந்தை முக்கியம்னு எப்படி உன்னால நினைக்க முடிஞ்சுது, லவி? விவேகத்தோட வாழ்க்கையை அலசி வாழ முயற்சிக்கற எனக்கு அதே யதார்த்த அறிவோடு இருக்கற நீ மனைவியானதுலே எத்தனை சந்தோஷப்படறேன் தெரியுமா? குழந்தையாவது கிழந்தையாவது! நீதான் எனக்கு முக்கியம்! இது போதும்னு என் மனசு சொல்றதே, அப்பறம் எதுக்கு இந்தக் குழந்தை ஆசை? நமக்குக் கிடைக்காதுங்கறது மேல ஆசையை வளர்க்காம இருக்கக் கத்துக்கணும்மா... அதுதான் முக்கியம். மனசை உணர்ச்சிகளுக்கு அடிமையாக்கிட்டா அப்பறம் வாழ்க்கைலே நிம்மதி இருக்காது, லவி. இன்னியோடு இந்தப் பேச்சை விட்டுடு, டார்லிங்... நிச்சயம் விட்டுடு... ஓகே?"

பேசிக்கொண்டே அழுகின்ற மனைவியின் கண்களை ராம் மெல்லத் துடைத்தான். மென்மையாய் அவளைத் தன் தோள்களில் சார்த்திக்கொண்டு தட்டிக்கொடுத்தான்.

அதோடு அந்தப் பேச்சை லாவண்யா விட வெகுவாக முயற்சித்தாலும் தன்னைச் சுற்றி இருந்தவர்களின் எதிர்பார்ப்புகளைச் சமாளிக்கவேண்டி, அடிக்கடி பொய் சொல்லவேண்டி இருந்தபோதெல்லாம் உடைந்துதான் போனாள்.

மூன்று வருஷங்கள். அந்த மூன்று வருஷங்களில், அப்பா சற்றும் எதிர்பாராமல் விமான விபத்தில் மாண்டுபோகும்வரையில், எத்தனை பொய்களை சகஜமாய்ச் சொல்ல லாவண்யா கற்றுக்கொண்டிருந்தாள்!

ஒரு ஓவரியைத்தான் எடுத்திருக்கிறது, இன்னொன்று இருப்பதால் தாராளமாய் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையோடு



அப்பா, மாமனார், மாமியார் இருந்ததால், 'ஏம்மா, குழந்தை வேண்டாம்னு இருக்கேளா என்ன?' என்றும், 'டாக்டர்கிட்டே போய் ஏதாவது சிகிச்சை எடுத்துக்கலாமானு கேட்கறயா, லவி?' என்றும், 'எப்பத்தான் பேரக் குழந்தைகளோடு என்னை விளையாட அனுமதிக்கப் போறேளோ?' என்றும் அவர்கள் கவலையுடனும், ஆதங்கத்துடனும் பேசியபோதெல்லாம் சின்னப் பெண் மாதிரி சிரிக்க முயற்சிப்பாள் லவி.

"இத்தனை அவசரப்பட்டா எப்படிப்பா? கொஞ்ச நாள் வாழ்க்கைய அனுபவிக்கறோமே!" என்பாள்.

"மூணு வருஷம்தானேப்பா? இன்னும் ரெண்டு வருஷம் போகட்டுமே!" என்பாள்.

"அடுத்த வருஷம் உலகத்தைச் சுற்றிப்பாக்கப் போகலாம்னு இருக்கோம், அதுக்கப்புறம்தான்" என்பாள். இப்படி வேடிக்கையாகவே பேசி ஏதாவது சொல்லி அவர்களைச் சிரிக்க வைத்து விடுவாள்.

ஆனால், கொஞ்சம்கூட லவி எதிர்பார்க்கவில்லை.

இங்கே இருக்கும் கொச்சின், அதற்கு வேலை நிமித்தமாய் போய்வருவதற்குள் அப்பாவின் கதையே முடிந்துவிடும் என்று.

முதல்நாள் புறப்பட்டுப்போய் மறுநாள் வீடுதிரும்ப வேண்டியவரின் சடலம்கூடக் கையில் கிடைக்காதபடி ஒட்டு மொத்தமாய் விமானம் எரிந்துபோனது.

கைலாசம் ஊருக்குப் புறப்பட்ட நிமிஷத்தில் கடைசி வார்த்தையாகப் பேசினது பேரக் குழந்தையைப் பற்றித்தான்.

"கொச்சின்லே அத்தையைப் பாப்பேன், லவி— போன தடவை போனபோதே 'ஏண்டா கல்யாண சாப்பாடோடு நிறுத்திண்டுட்டயே, வளைகாப்பு, சீமந்த சாப்பாடு எப்போ'னு தொணதொணத்தா! திரும்ப இப்பவும் அதையேதான் கேக்கப் போறா. நானும் அசடு வழியப் போறேன்"— என்று விளையாட்டாய்ப் பேசினவர் தொடர்ந்து, "லட்ச லட்சமாய் பணம் இருக்கு, வீடு, தோட்டம், அது, இதுனு எதுக்கும் குறை இல்லே— பத்து வாரிசுகள் பிறந்தாலும் தாங்கக்கூடிய இடத்திலே இன்னும் ஒண்ணைக்கூடக் காணோமே, அதுதான் என் வருத்தம். ராமின் புத்தி, திறமைகளைக் கொண்டு பேரன்கள் பிறந்தா எப்படி இருக்கும் தெரியுமா, லவி? என்னைக் கட்டிப்பிடிக்க முடியாதும்மா... என் ஆசை சுருக்க நிறைவேறணும்; அப்பறம் என் தொழிற்சாலைகள் அமோகமா வளரும்கற நிம்மதியோட நா

போய்ச் சேர்ந்துடுவேன்" என்றார். என்றைக்கும் இல்லாத விரக்தியுடன் அவர் பேசின வார்த்தைகள், விடாமல் காதில் முரசம் கொட்டினதில் லவி பரிதவித்துப் போனாள். 'என்ன செய்து அப்பாவின் கடைசி ஆசையை நிறைவேற்றலாம்?' என்று ஓயாது சிந்திக்கத் தொடங்கினாள்.

ஒரு வருஷம் முடிவதற்குள் அவள் மனசில் ஒரு திட்டம் உருவானது.

ரொம்பத் துணிச்சலான திட்டம், நம் நாட்டில் யாரிடம் சொன்னாலும் முகத்தை ஐயே– என்று சுளிக்க வைக்கும் அல்லது கையை ஓங்கிக்கொண்டு நம் பண்பாடு என்னாவது என்று அடிக்க வர வைக்கும் திட்டம்.

லவி இரவு பகலாய் யோசித்தாள்.

இது முழுக்கமுழுக்க நானும், ராமும் சம்பந்தப்பட்டது. இதில் மூன்றாம் பேருக்கு என்ன வேலை? ஐயே என்றும், ஆ! பாரதப் பண்பாடு, தமிழ்ப்பண்பாடு போய்விடும் என்றும் குமுறுவதற்கு அன்னியருக்கு என்ன உரிமை இருக்கிறது! அவர்களுக்கு இதில் எந்த சம்பந்தமும் கிடையாது.

மஹா பெரிய பண்பாடு! பண்பைப் பற்றியும், கற்பைப் பற்றியும், கலாச்சாரத்தைப் பற்றியும் வாய்கிழியப் பேசுபவர்கள் மனசிலும்; வீட்டிலும்தான் இந்தப் பண்பை, கலாச்சாரத்தைத் தேடித்தேடிப் பார்க்கவேண்டும்.

சமுதாயமாவது, மண்ணாவது!

எல்லாம் போலி!

எனக்கு நிம்மதி வேண்டும், எங்கள் வாழ்க்கையில் சந்தோஷம் வேண்டும். முக்கியமாய் செத்துப்போன அப்பாவின் ஆசை நிறைவேறி அவர் ஆத்மாவைக் குளிரவைக்க வேண்டும். இதுதான் எனக்கு முக்கியம்–

நன்றாய் சிந்தித்து, திட்டவட்டமாய் ஒரு முடிவுக்கு வந்தபின் இதுகுறித்து யார் உதவியை நாடலாம் என்று யோசித்தபோது தாமுதான் மனசில் வந்து நின்றான்.

தாமு, லாவண்யாவின் பெரியப்பா பையன். இவளைவிட ஐந்து வயது மூத்தவன். சொந்த அண்ணன், தங்கை போல தனிப்பட்ட பாசப் பிணைப்பில் வளர்ந்தவர்கள். நல்ல பையன். விசாலமான புத்தி, இதயம் கொண்டவன். ராமுடன் விவேகானந்தா காலேஜில் ஒன்றாய்ப் படித்தவன். இப்போதும்



ராமுக்கு நெருங்கிய நண்பன். படத்துறையில் அசாத்தியமான ஈடுபாடு கொண்டதால் தன் விளம்பரக் கம்பெனியோடு செய்திப் படத் தயாரிப்பையும் தொழிலாகக் கொண்டவன்.

"உன்னோடு தனியாப் பேசணும் தாமு; ரொம்ப ரகசியமான விஷயம்" என்று போனில் சொல்லி, நேரில் வந்ததும் தன் தீர்மானத்தை அவனிடம் வெளிப்படையாய் சொன்னாள் லாவண்யா.

சில நிமிஷங்களுக்கு ஏதும் பேசாமல் இருந்துவிட்டு, "இது சரியா வருமா?" என்றான் மெல்ல.

"முயற்சி பண்றதுல தப்பில்லையே, தாமு!"

"ராம்கிட்டே பேசிட்டியா?"

"இல்லே– முதல்லே இது சாத்தியமானு நாம்ப ரெண்டு பேரும் பேசிப் பாக்கலாம், முயற்சி பண்ணி பாக்கலாம். முடியும்னு தோணித்துன்னா ராம்கிட்டே பேசலாம்..."

யோசித்து பதில் சொல்வதாகச் சொல்லி தாமு எழுந்து நின்றான்.

**கா**ர் ஒரு குலுக்கலுடன் நின்றது. அருகிலிருந்த பெட்டிக் கடையில் விலாசத்தை விசாரித்துவிட்டு மீண்டும் வண்டியைக் கிளப்பின தாமு, லாவண்யா கண்களைத் திறந்துகொண்டிருப்பதைப் பார்த்து 'என்ன தூக்கமா?' என்றான்.

"ம்ஹூம்... ஏதோ பழைய யோசனை..."

என்ன யோசனை, லவி– என்று தாமு கேட்கவில்லை. அவனுக்குத் தெரியாதா?

காரை அந்த சந்துக்குள் ஓட்டுவது கஷ்டமாக இருந்தது. அகலமாய், திறந்தவெளியில் ஓடும் சாக்கடை. பத்தும், இருபதுமாய் பன்றிக் கூட்டங்கள். அரை நிர்வாணமாய், கும்பலாய், நடுசந்தில் விளையாடிய குழந்தைகள், லுங்கி கட்டி திறந்தமார்பின் முடி தெரிய நின்ற தடியான ஆண்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள், நாங்கள் வெளியூர் ஆசாமிகள் என்று நெற்றியில் எழுதி ஒட்டிக்கொண்டு அதில் சவாரி செய்பவர்கள். இரண்டும், நாலுமாய் வீடுகளின் வாசலில் நின்ற பெண்கள், அவர்களின் சகிக்க முடியாத அலங்காரங்கள்.

லாவண்யாவைக் கூட்டிவரும் இடமா இது? தப்பு பண்ணிவிட்டேனோ? மேனகாவை நான் அழைத்துப் போய்

எங்காவது லவி அவளைச் சந்திக்கும்படி செய்திருக்க வேண்டுமோ?

வீட்டு எண்களைப் பார்த்தவண்ணம் ஓட்டின தாமு சட்டென்று ப்ரேக் போட்டு வண்டியை நிறுத்தினான்.

"இதுதான் வீடு. நீ கார்லேயே இரு. லவி, நா அவ இருக்காளானு விசாரிக்கறேன்..."

இறங்கி வீட்டுக்குள் மறைந்து போனவன் ஐந்து நிமிஷத்தில் திரும்பிவந்தான்.

"இருக்கா... நீ வரயா, இல்லை அவளைக் கூட்டிண்டு வரட்டுமா?"

"நோ— நானே வரேன்."

லாவண்யா தாமுவோடு உள்ளே போனாள்.

அது, பல ஒண்டுக் குடித்தனக்காரர்கள் வாழும் வீடு என்பது, ஒரே பார்வையில் புரிந்தது.

குப்பை, அழுக்கு, ஏழ்மை—

முதல் மாடியில் மூன்றாவது போர்ஷனில் நுழைந்தார்கள்.

கதவின் வெளிப்பக்கம் நின்றிருந்த மேனகா "வாங்க" என்றாள்.

தாமுவைப் பார்த்தபோது விரியாத கண்கள், தன்மேல் படர்ந்ததும் வியப்பால் விரிவது லாவண்யாவுக்குப் புரிந்தது.

ஆண்கள் மட்டுமே வரக்கூடிய இந்த இடத்திற்கு, பெண், அதுவும் உன்னைப் போன்ற பணக்காரப் பெண் எதற்கு வர வேண்டும் என்ற அந்த வியப்பு லவிக்குப் புரிந்தது.

இதே வியப்பு இன்னும் பலருக்கும் எழுந்ததால் அவரவர் போர்ஷனை விட்டு வெளியில் வந்து பார்ப்பதும், தங்களுக்குள் பேசிக்கொள்வதும் புரிந்தது.

இரண்டு மோடாக்களைத் தட்டிப் போட்டு "உட்காருங்க" என்றாள் மேனகா.

அவள் பேச்சில் எட்டிப்பார்ப்பது தெலுங்கா, கன்னடமா? நிச்சயம் இவள் தமிழ்நாட்டுக்காரி இல்லை.

எதுவுமே பேசாமல் பார்வையால் லாவண்யா அளப்பதை இரண்டு நிமிஷங்களுக்குமேல் பொறுத்துக்கொள்ளப் பிடிக்காத மேனகா "என்ன விஷயங்க?" என்றாள் தாமுவிடம்.

தாமு லாவண்யாவைப் பார்த்தான்.



லாவண்யாவுக்கு எப்படிப் பேச்சைத் தொடங்குவது என்று புரியவில்லை.

"அம்மா ஏதாவது படம் எடுக்கப்போறாங்களா? அதுக்கு என்னை புக் பண்ண வந்திருக்காங்களா?"

"——"

"என்னங்க, ஒரு கேள்விக்கும் பதில் சொல்லாம இருந்தா, எப்படி?"

இப்போது தாமு பேசினான்.

"படம் இல்லே, மேனகா; ஆனா இவங்களுக்கு உன்னால ஒரு வேலை ஆகணும்; அதுக்காக உன்கிட்ட பேச விரும்பறாங்க..."

இவங்களுக்கு என்னால் என்ன வேலை ஆகணும்?— என்கிற பார்வை ஒன்றைப் பார்த்தாள் மேனகா. பிறகு "சொல்லுங்க" என்றதும் லவி வாயைத் திறந்தாள்.

"முதல்லே உன்கிட்டே கொஞ்சம் பேசப் போறேன். அப்பறமா எதுக்கு வந்திருக்கோம்னு சொல்றேன், ஓகே? நீ இங்கே தனியா தான் இருக்கியா, மேனகா?"

"இல்லே... கூட இன்னும் ரெண்டு பெண்கள் இருக்காங்க— கமலா, ரதி."

"அவா எங்கே?"

"நைட் ட்யூடி பார்க்கப் போயிட்டாங்க..." இந்த மாதிரி பேசினால் இவள் அதிர்ந்து போவாள் என்ற குறுகுறுப்போடு மேனகா பேசுவதாய்த் தோன்றியது.

விலைமாதுகளாக மேனகாவின் தோழிகள் போயிருப்பது தனக்கு எந்தவித சலனத்தையும் உண்டாக்கவில்லை என்ற முக பாவனையுடன் லவி கேட்டாள் :

"ஏன், நீ போகலியா?"

மேனகா நிமிர்ந்து லாவண்யாவைப் பார்த்தாள்.

"ம்? போவேன்... ஆனா தினம் தினம் இல்லே... எப்போ பணம் வேணுமோ, எப்போ அடுத்த வேளை சோறு இல்லைன்னு ஆகுதோ, அப்போ... நாட் அதர்வொய்ஸ்..."

"இங்கிலீஷ் நல்லாப் பேசறியே, படிச்சிருக்கயா?"

"இங்கிலீஷ் பேசறதனாலே நா படிச்சவள்னு நீங்க நினைச்சா, அது எனக்கும் சரிதான்—" மேனகா சிரித்தாள்.

பிறகு "வந்த விவரத்தைச் சொல்லுங்க. வீணா அனாவசியமான விவரங்களைப் பேசி நேரத்தை வீணடிப்பானேன்?" என்றாள்.

"நீ மாசத்துக்கு எத்தனை சம்பாதிப்பே, மேனகா?"

எதற்கு இந்த அனாவசியமான கேள்விகளெல்லாம் என்ற சலிப்போடு மேனகா நிமிர்ந்து பார்த்தாள்.

"ஆயிரமும் சம்பாதிப்பேன், நூறும் சம்பாதிப்பேன்... இது என்ன கேள்வி? மளமளன்னு வந்த விஷயத்தைச் சொல்லாம என்னங்க இது? எனக்கு வேலை இருக்கு; நாளைக்கு குரூப் டான்ஸ் ஷுட்டிங் இருக்கு. அதுக்குக் கொஞ்சம் ஆடிப் பாக்கணும்..."

"உன் மாச வருமானம் ஆயிரம்னே வெச்சிண்டாலும், வருஷத்துக்குப் பன்னிரண்டாயிரம் ஆறது. ரைட்? ஓ.கே... இப்போ நா சொல்றதைக் கேளு... ஒரு வருஷம் நா உன்னை வேலையிலே சேர்த்துக்கறேன். ஒரு வருஷம் ஒப்பந்தம். அதுக்கு உனக்கு சம்பளம் இருபத்தஞ்சாயிரம் ரூபாய். ஒப்பந்தம் முடிஞ்சதும் நீ எப்படி வேணும்னாலும் இருக்கலாம்— சுதந்திரப் பறவையா ஆயிடுவே..."

நிதானமாய் நிறுத்தி சின்னக் குரலில் லாவண்யா பேசினாள்.

"பணம் மட்டுமில்லே, மேனகா, அந்த ஒரு வருஷமும் உன் பூராச் செலவும் என்னுது. நீ தங்க இடம், உடுத்தத் துணி, சாப்பிடச் சாப்பாடு, இன்னும் மத்த எல்லாச் செலவுகளையும் நானே பாத்துப்பேன். அந்த இருபத்தஞ்சாயிரம் உன் கைச்செலவுக்கு மட்டும்..."

மேனகா அவள் பேச்சால் பாதிக்கப்பட்டுவிட்டது தெளிவானது.

இருபத்தையாயிரம்? அதுவும் செலவுகள் போக! இன்றைக்கு இருக்கும் இருப்பில் இப்படி ஒரு வரவை அவள் எங்கு, எப்படி எதிர்பார்க்க முடியும்?

"வேலை என்னான்னு நீங்க சொல்லலியே!"

லாவண்யா எழுந்தாள்.

"கஷ்டமான வேலை ஒண்ணுமில்லே, மேனகா. ஒரு வருஷத்துக்கு உன்னை என்கூட வெச்சுக்கப் பிரியப்படறேன். அவ்வளவு தான். ஆனா அதைப்பத்தின விவரங்களை உனக்கு நா இப்போ சொல்லப் போறதில்லை. ஒரு நாள் பூராவும் நீ யோசி; நாளைக்கு உன்னைத் திரும்ப நாங்க சந்திக்கறோம். அப்போ என் நிபந்தனைகளுக்கு நீ தயாரா இருக்கறதா சொன்னா, நா மேற்கொண்டு விளக்கமா சொல்றேன். வா தாமு... நாம்ப போகலாம்..."



ஒன்றுமே புரியாமல் நின்ற மேனகாவிடம் சென்று அவள் தோள்களைத் தட்டிக்கொடுத்தாள் லவி.

"நீ துணிச்சல்காரி மட்டுமில்லே, ரொம்ப புத்திசாலியுங் கூடன்னு தாமு சொல்லியிருக்கார்... அதனாலே நாங்க இங்கே வந்த விவரம், உன்னோடு பேசின விவரம் இதையெல்லாம் நீ யார்கிட்டேயும் சொல்லாம இருப்பேன்னு நம்பறேன். என் பேச்சுக்கு நீ கட்டுப்பட்டுப் பணம் சம்பாதிக்க விரும்பினா, முதல்லே ரகசியத்தைக் காப்பாத்தப் பழகிக்கணும்... என்ன? சரி, நாளைக்கு சாயங்காலம் நாலு மணிக்குப் பாக்கறோம்... குட் நைட்..."

மேனகா பிரமித்து நிற்க இருவரும் கீழே வந்து காரில் ஏறிச் சென்றார்கள்.

காரில் செல்லும்போது லவி கேட்டாள்: "அவ நம்ப வந்ததைப் பத்தி யார்கிட்டயாவது பேசினாளா இல்லையான்னு எப்படியாவது விசாரிக்க முடியுமா, தாமு?"

"செய்யலாம். ஒண்ணும் பிரச்சினையில்லே."

கார் வீட்டை அடைந்தது.

"உள்ளே வாயேன்... சாப்டுட்டுப் போகலாம்..."

"இல்லேம்மா... வேலை இருக்கு— நா போயிட்டு நாளைக்கு போன் பண்ணறேன்."

காரை விட்டு இறங்காமலேயே தாமு சென்ற பிறகு, மாடிக்குப் போய் தான் மறுநாள் செய்யவேண்டிய காரியங்களை, சந்திக்க வேண்டிய நபர்களை, கேட்கவேண்டிய கேள்விகளை மனசில் குறித்துக்கொண்டாள் லவி.

நாளை மறுநாள் ராம் வந்துவிடுவார். அதற்குள் உருப்படியாய் ஏதாவது செய்ய முடியுமா?

கடல்காற்று உடம்புக்கு சுகமாக இருந்தது. முகம் தெரியாத அளவுக்கு இருட்டு இன்னும் பரவவில்லை.

புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்தியபடி லவி, எதிரில் அமர்ந்திருந்த மேனகாவை ஊன்றிப் பார்த்தாள்.

அரைமணிக்கும் மேலாய் தான் பேசிய விஷயம் இவளை எவ்வாறு பாதித்திருக்கிறது என்று அறியத் துடிக்கும் துடிப்பு அந்தப் பார்வையில் இருந்தது.

தான் பேசப்பேச, தன் திட்டத்தை விளக்கவிளக்க மௌனமாய் குறுக்கே ஓரிரண்டு வார்த்தைகள்கூடப் பேசாமல் மேனகா கேட்டது லாவண்யா சற்றும் எதிர்பாராதது.

நானா? இப்படியா? என்னை என்ன என்று நினைத்துக் கொண்டீர்கள்? இவள் ஏழை, என்ன செய்ய முடியும் என்ற தைரியத்தில் பேசுகிறீர்களா? ஏழை என்றாலும், எப்போதோ உடம்பை விற்பவளாக இருந்தாலும் எனக்கென்று ஒரு மனசு, ஒரு கௌரவம், ஒரு விருப்பு இல்லை என்றுகூடவா நினைத்து இப்படிப் பேசுகிறீர்கள்?— என்று விழிகளை உருட்டிக்கொண்டு கத்தலாம்.

அல்லது, இப்படி மட்டமாக என்னை நினைத்துவிட்டீர்களே— என்று புடவைத் தலைப்பைச் சுருட்டிக்கொண்டு பிழியப்பிழிய அழலாம்; அதுவும் இல்லாவிட்டால்... முடியுமா என்னால்? நீங்கள் நினைக்கிற திட்டத்தை நிறைவேற்றிக்கொடுக்க முடியுமா என்னால்?— என்று மணிக்கணக்கில் வியக்கலாம்... என்று மனசுக்குள் விதவிதமான எதிர்பார்ப்புகளுடன் வந்திருந்த லாவண்யாவுக்கு, ஒன்றுமே பேசாமல், கண்களை 'நானா? இதையா!' என்று கூட விரிக்காமல், உதடுகளைத் துடிக்கவிடாமல் அமைதியாய், எதிரில் அமர்ந்திருக்கும் மேனகாவின் பாங்கு முதலில் வியப்பாய் இருந்தது. அப்புறம் அதுவே அவள்பால் மதிப்புக் கொள்ளத் தூண்டுவதாக இருந்தது.

பெண்கள் பேசும்போது தான் அருகே நிற்பது அநாகரிகம் என்று அவர்களைப் பேசவிட்டுவிட்டுத் தள்ளி கடல் ஓரமாய் நடந்துகொண்டிருந்த தாமுவை, தலையைத் திருப்பிப் பார்த்தாள் லவி.

ஏதும் தெளிவாகத் தெரியவில்லை. புகை போன்ற இருட்டில் மசமசவென்று அவன் உருவம் புரிந்தது.

தாமுவைக் கூப்பிடலாமா? இவள் ஏன் ஒன்றுமே பேசவில்லை. 'இந்த வேலை செய்பவள் நான் இல்லை, அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசிவிட்டால் தேவலைபோல இருந்தது.

எதற்கும் தாமுவைக் கூப்பிடுவதற்கு முன், இவளிடம் நாமே கேட்டுப் பார்ப்போம் என்ற நினைப்பில் லாவண்யா பேசினாள்:



"என்ன மேனகா— நா பேசினதைப் புரிஞ்சிண்டயா? என்ன முடிவு பண்ணியிருக்கே? மனசிலே இருக்கறதை தைரியமா சொல்லு..."

இருட்டில் மேனகாவின் கண்கள் பளபளத்தன. அழகான கண்கள். அவள் லேசாய் சிரிப்பது, வெள்ளையாய்த் தெரிந்த பற்களின் மூலம் புரிந்தது. வரிசையான வெள்ளைப் பற்கள்.

"மனசிலே எதுவுமே இல்லிங்க... இருந்தால்தானே பயப்படறதுக்கு?" இப்போது மேனகா கொஞ்சம் சத்தம் போட்டுச் சிரித்தாள்.

அவள் குரல் இனிமையாய் இருந்தது. தயக்கமில்லாமல், சரளமாய்த் தொடர்ந்து பேசினாள்.

"தாமு சாரை எனக்குத் தெரியும், அவர் நல்ல குணம், நல்ல மனசு, திறமை எல்லாமே தெரியும்; இந்த சினிமாத்துறையில அவர் மாதிரி ஒருத்தரைப் பாக்கறது அபூர்வம். பெண்களை ஈனப் பிறவியா நினைக்கற பல ஆண்கள் நடுவிலே இவர் இப்படி இருக்கறது ரொம்ப வினோதம். அவருக்கு வேணா என்னைப் பத்தி ஏதும் தனிப்பட்ட முறையிலே தெரியாம இருக்கலாம். ஆனா அவரைப்பத்தி இங்க இருக்கறவங்க பேசிப்பேசி, நா நிறையவே தெரிஞ்சிகிட்டதாலே என் மனசிலே அவருக்கு ஒரு உயர்ந்த இடம் கொடுத்திருக்கேன். அதுவும் தவிர, உங்ககிட்டே தாமு ஸார் சொன்னாரோ இல்லையோ, நா அவர் படம் 'இண்டியா டுடே'லே வேலை பண்ணப்போ, என்னை செட்டுலே ஒருத்தர் தரக்குறைவா பேசினார். இத்தனைக்கும் அவர் ஒரு பெரிய மனுஷர்தான். இந்த விஷயத்தை தாமு ஸார் கேட்டதும், 'யார் முன்னாலே அவளை நீ தரக்குறைவா பேசினியோ அவங்க முன்னாலே மன்னிப்பு கேட்டுக்கணும், இல்லைனா இனி நா உன் நண்பன் இல்லை'னு சொல்லி, அவரை மன்னிப்பு கேக்க வெச்சார். சாதாரணத் துணை நடிகையான என் உணர்ச்சிகளுக்கு அதுநாள்வரை இப்படி ஒரு மரியாதையை யாரும் கொடுத்ததில்லை. அதனாலே நேத்து அவர் மூலமா நீங்க என் வீடு தேடி வந்தபோது, தாமு சாருக்காக நா நீங்க சொல்ற வேலையை எதுவானாலும் செஞ்சு தரணும்னு முடிவெடுத்திட்டேன்."

என்ன சொல்கிறாள் இவள்? தன் திட்டத்துக்குக் கொஞ்சம் கூட மறுப்பு சொல்லாமல் ஒப்புக்கொள்ளத் தயார் என்கிறாளா?

"தாமு— இங்கே வாயேன்" லாவண்யாவின் குரலில் சந்தோஷம் இருந்தது.

கிட்டத்தில் வந்த தாமுவிடம் "அவளுக்குச் சம்மதம்னு சொல்றா..." என்றாள் லாவண்யா.

தாமு அவர்கள் அருகில் மெல்ல உட்கார்ந்தான்.

"என்ன, மேனகா?"

"ஆமாங்க... நா ரெடி..."

"யோசிச்சுப் பாத்துட்டு சொல்லேன். அவசரம் இல்லை. ரெண்டு நாள் டைம் எடுத்துக்கோ..."

"தேவையில்லை, சார். உங்களுக்கு இந்த அம்மா உறவா, தெரிஞ்சவங்களான்னு எனக்குத் தெரியாது. ஆனா உங்களுக்கு ரொம்ப வேண்டியவங்கனு மட்டும் எனக்குப் புரியுது. நீங்க கூட இருக்கறது எனக்குத் தைரியத்தைக் கொடுக்குது! இவ்வளவு பணம் எனக்கு வேற யார் கொடுக்கப் போறாங்க? நா ரெடி சார்!"

இரண்டு நிமிஷங்கள் மௌனமாய் நகர்ந்தன.

"ஆல் ரைட்... அப்போ இதுக்கு நீ சம்மதிக்கறே? மனப்பூர்வமா சம்மதிக்கறே?"

"ஆமா, சார்—"

"ஒரு வருஷ காலம் முடியறத்துக்குள்ளே தலையே போனாலும் நீ இதுலேருந்து பின்வாங்கக் கூடாது, சரியா?"

"சரிங்க..."

"இதப்பத்தி யார்கிட்டயும் பேசமாட்டேன்னு சத்தியம் பண்ணித்தரணும், மேனகா... உனக்கு எந்தக் கடவுள் பேர்ல நம்பிக்கை இருக்கோ அந்தக் கோயிலுக்குப் போகலாம்... அங்கே நீ உன் வாக்கு மீறமாட்டேன்னு சத்தியம் பண்ணணும்..."

மேனகா சின்னதாய் சிரித்தாள்.

"எனக்குக் கடவுள் மேலே நம்பிக்கை இல்லை, சார்... ஆனா சொன்ன வாக்கைக் காப்பாத்துவேன், கவலைப்படாதீங்க..."

மேனகாவுக்குத் தெரியாமல் தாமு தன் ஸ்டெனோவை அனுப்பி அவளைப்பற்றி முதல்நாள் விசாரித்ததில் அவள் யாரிடமும் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூட ஏதும் சொல்லவில்லை என்பதை அறிந்திருந்த லாவண்யாவுக்கு அவள் பேசுவதை நம்பத் தோன்றியது.

மேனகாவின் வெளிப்படையான பேச்சும், சிரிப்பும், தைரியமும் அந்தக் கணம் சட்டென்று லாவண்யாவின் மனசுக்குள் புகுந்து வியாபித்தன.



திரும்ப சில நிமிடங்களுக்கு யாருக்கும் எதுவுமே பேசத் தோன்றவில்லை.

டாக்டர் சுசீலாவிடம் பேசிவிட்டு, கடைசியில் ராமை நெருங்க வேண்டும். அவர் சம்மதத்தை வாங்கினபின் காரியத்தில் இறங்க வேண்டும்.

மணலைத் தட்டிக்கொண்டு எழுந்தாள் லாவண்யா.

"இன்னும் நாலு நாளிலே நாங்க திரும்ப உன்னைச் சந்திக்கறோம். தவிர்க்க முடியாத விதமா நாம நினைச்ச காரியத்துலே இறங்க முடியாமப் போயிட்டா தாமு உன்கிட்டே ரெண்டாயிரம் ரூபாய் கொடுப்பார். அதை வாங்கிண்டு இந்தப் பேச்சை நீ அடியோடு மறந்துடணும். அப்படியில்லை, மேற்கொண்டு காரியம் நடக்கணும்னா, நானே உன்னைச் சந்திச்சு விவரம் சொல்றேன்... ஓ.கே?"

மேனகா சரி என்று தலையாட்ட, மூவரும் எழுந்து காருக்குப் போனார்கள்.

மறுநாள் காலை டாக்டர் சுசீலாவுக்கு போன் செய்தாள் லாவண்யா.

"குட்மார்னிங், டாக்டர்."

"ஓ! ஹல்லோ— குட்மார்னிங். எப்படியிருக்கே?"

"ஃபைன், தேங்க்யூ... உங்ககிட்டே அந்தரங்கமா பேசணுமே டாக்டர்— எப்ப வரட்டும்?"

டைரியைப் புரட்டின டாக்டர், "சாப்பாட்டு நேரத்துல வரயா, லவி? சாயங்காலம் வரிசையா அப்பாய்ன்ட்மென்ட் இருக்கு" என்றதும் சரி என்று ஒப்புக்கொண்டு போனை வைத்தாள்.

பகல் ஒரு மணிக்கு டாக்டர் சுசீலாவின் வீட்டுக்குப் போனாள் லவி. சுசீலாவின் கணவரும் கூடவே இருந்ததால் சாப்பாட்டின் போது அவள் வாயைத் திறக்கவில்லை.

சாப்பாடு முடிந்தது.

வரவேற்பறைக்கு அவளை அழைத்துச் சென்று அமர்ந்தார் டாக்டர் சுசீலா. தங்கள் தனிமையை நன்கு உணர்ந்தபின் "என்னம்மா?" என்றார் மெள்ள.

தன் மனசில் இருந்ததைப் படிப்படியாய் லவி பேசினாள். உணர்ச்சிவசப்படாமல் நிதானமாய்ப் பேசினாள். 'இவள் ரொம்ப

விவேகத்தோடு சிந்தித்திருக்கிறாள்' என்ற உணர்வு டாக்டருக்கு ஏற்படும் வகையில் பேசினாள்.

"இதான் என் திட்டம். இதை முடிச்சுக் கொடுக்க உங்களைத் தான் நம்பியிருக்கேன், டாக்டர்..."

"ராம்கிட்ட பேசிட்டியா, லவி?"

"இல்லே... தாமு மூலமா மேனகானு ஒரு பொண்கிட்டே பேசியிருக்கேன். அவ சம்மதிச்சுட்டா... மூணாம் மனுஷருக்குத் தெரியாமே நடந்துக்கறேன்னு வாக்குக் கொடுத்திருக்கா. உங்க கிட்டே இது சாத்தியமானு கேட்டுத் தெரிஞ்சுண்டப்பறம் ராம் கிட்டே கெஞ்சியோ, கொஞ்சியோ, அழுதோ, அடம் பிடிச்சோ சம்மதம் வாங்கிடலாங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு."

"அந்தப் பொண் தன் வாக்கைக் காப்பாத்துவான்னு நீ நம்பறியா, லவி?"

"நம்பறேன், டாக்டர். நம்பிக்கை இல்லாட்டா உலகமே இல்லியே..."

"நல்லது. இப்போ இது மருத்துவ ரீதியா முடியுமான்னு சொல்றேன். இந்தியாவிலே இது ரொம்ப ரொம்ப அபூர்வம். இதுலே பயிற்சி பெற்ற டாக்டர்ஸ் கம்மி. நல்லவேளையா, லண்டன்லே இந்தக் கேஸ்களை நானே கவனிச்சிருக்கறதாலே பிரச்சினை இல்லை. நீ முதல்லே ராம்கிட்டே பேசு. கணவனும், மனைவியுமா செய்யப்போறது சரிதாங்கற முடிவுக்கு வாங்கோ... அப்பறம் பாக்கியை நா கவனிச்சுக்கறேன்..."

பேச்சுவார்த்தை முடிந்து வீட்டுக்குப் புறப்படும்முன் லாவண்யா தயங்கித்தயங்கி ஏதோ சொல்ல முற்படுவது டாக்டருக்குப் புரிந்தது.

"நா டாக்டர், லவி... என் தொழிலை தெய்வமா மதிக்கற டாக்டர். அதனாலே உன் சிநேகிதி ரமாகிட்ட ஏன், என் கணவர் கிட்டக் கூட இதப்பத்தி பேசமாட்டேன். கவலைப்படாமப் போ,"— என்றதும் 'ரொம்ப தாங்க்ஸ் டாக்டர்' என்று சொல்லி லேசாகி விட்ட மனசோடு, வெளியில் வந்தாள் லாவண்யா.

**அ**ன்று மாலை விமானத்தில் பம்பாயிலிருந்து ராம் சென்னைக்குத் திரும்பினான்.

ஒரு ஏற்றுமதி வேலை விஷயமாய் நாலு நாட்கள், எண்ணி நாலே நாட்கள், போய் வருவதற்குள் இங்கு லாவண்யா செய்திருக்



கும் ஏற்பாடுகளைப் பற்றின கடுகத்தனை எண்ணமும் இல்லாத வனாய் விமான நிலையத்தில் இறங்கினான்.

கண்ணாடிக்கதவு வழியாகத் தெரிந்த மனைவியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே கிட்டத்தில் வந்தான்.

"ஹாய் டார்லிங்— ஐ மிஸ்ட் யூ" என்றவன் நெருங்கி லவியின் இடையில் கையைவிட்டு அணைத்தவண்ணம் நடந்தான்.

டிரைவரை அழைக்காமல் லவி தானே வண்டியை எடுத்து வந்திருந்ததால், டிரைவர் ஸீட்டில் ராம் அமர்ந்து ஓட்டினான்.

கார் வீட்டை நோக்கிப் போகையில் "ஏன் சோர்ந்திருக்கே, லவி? சரியா தூங்கலியா?" என்றான் கரிசனத்துடன். அப்புறம் தன் பம்பாய் பயணத்தைப்பற்றி, அதன் வெற்றிகரமான கான்ட்ராக்ட் பற்றி, நீளமாய்ப் பேசினான்.

ராம் சந்தோஷமான மூடில் இருந்தது லவிக்குத் திருப்தியைத் தந்தது.

வீட்டுக்குப் போய் சாப்பிட்டார்கள்.

படுக்கையறையில் ஏ.ஸி. இதத்தில் படுத்தார்கள்.

இரவு உடையில் இருந்த கணவனின் தோள்பட்டையில் தலையை வைத்திருந்த லவி முகத்தைத் திருப்பி அவனைப் பார்க்காமலே 'அலுப்பா இருக்கா?' என்றாள் சின்னக் குரலில்.

ஒரே புரட்டலாய் அவளைப் புரட்டித் தன் மார்பில் கிடத்திக் கொண்டே ராம் "டயர்டா? நானா? ம்ஹூம், இல்லை. எவ்வளவு தெம்பாய் இருக்கேன்னு காட்டட்டுமா?" என்றான். முகத்தோடு முகம் நெருங்கியிருந்த அந்தக் கணத்தில் "எனக்கு ஒரு ஆசை; அதை நிறைவேற்றுவேளா, ராம்?" என்றாள் லாவண்யா கெஞ்சும் குரலில்.

அப்படியே தலையைத் தூக்கி அவளை முத்தமிட்டான் ராம். "ஜஸ்ட் ஆர்டர், டார்லிங்... இது என்ன கெஞ்சல்!"

லாவண்யா எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

ஒரு வருஷமாய் மனசில் நினைத்து, வளர்த்திருக்கும் எண்ணத்தை வெளியில் சரியாய் ராம் புரிந்துகொண்டு ஏற்றுக் கொள்ளும் விதத்தில் சொல்லவேண்டுமே என்ற பயம் நெஞ்சைக் கவ்வ, நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

"என்னம்மா? ஏதாவது பிரச்சினையா?"

"ஒண்ணுமில்லே... ஆனா எனக்கு ஒரு ஆசை..."

"சொல்லு..."

"முதல்லே நீங்க கண்டிப்பா அதை நிறைவேத்தறதா சத்தியம் பண்ணுங்கோ..."

"ஹேய் லவி—என்ன இது! சின்னக் குழந்தையாட்டம்! நீ எது கேட்டு நா இன்னிவரைக்கும் இல்லேனு சொல்லியிருக்கேன்... ம்?"

"இல்லே. இது வழக்கம்போல இல்லே..."

"அப்படின்னா நீ சொல்லு— நா கேட்டுட்டு முடியுமா, முடியாதான்னு பார்க்கறேன்."

"உங்களால் முடியும், டார்லிங். கண்டிப்பா முடியும்..."

"அப்போ சொல்லு..."

"இன்னும் நீங்க சத்தியம் பண்ணலியே?"

பெரிசாய் சிரித்துவிட்டான் ராம்.

"உனக்கு என்னாச்சு இன்னிக்கு? குழந்தை மாதிரி... ஓ...கே... ஐ...ப்ராமிஸ்..."

"எனக்குக் குழந்தை வேணும்னு ஆசையா இருக்கு, ராம்..."

ஒரு மாசம் விடுமுறையில் போகலாம், உங்களுக்கு வேலை ரொம்ப அதிகம், ஒரு மாறுதல் தேவை, எங்கே போகலாம் என்று கேட்கப் போகிறாள் என்று நினைத்தால், லவியின் ஆசை தந்த அதிர்ச்சி ராமின் பார்வையில் தெரிந்தது.

இது என்ன இத்தனை வருஷங்களாய் இல்லாத ஆசை?

"தத்து எடுக்கணும்னு ஆசைப்படறியா, லவி?" என்றபோது அவன் குரல் இதமாய், வருடிக்கொடுக்கிற தினுசில் வந்தது.

"நோ—"

"அப்பறம்?"

மேலே பேச ஒரு கணம் லவிக்கு பயமாக இருந்தது. இவர் நாம் சொல்வதைச் சரியாகப் புரிந்துகொள்வாரா என்று தயக்க மாய் இருந்தது.

"என்ன, லவி?"

இரண்டு கைகளாலும் கணவனின் கழுத்தைக் கட்டிக்கொண் டாள் லவி. அவன் காதருகில் தன் வாயை வைத்துக்கொண்டு மெதுவாய்ப் பேசினாள்.

"நா சொல்றதைக் கேட்டு நீங்க கோபப்படக் கூடாது, ராம்... ரொம்ப நன்னா யோசிச்சுட்டுதான் இதப்பத்தி பேசறேன்...



அசட்டுத்தனமா ஆசைப்படறவ, யோசனை பண்ணாம காரியத்துல இறங்கறவ நா இல்லைன்னு உங்களுக்குத் தெரியும்... அதனால ப்ளீஸ், பொறுமையா நா சொல்றதை முழுக்கக் கேளுங்கோ— ஞாபகம் இருக்கட்டும், என் விருப்பத்தை நிறைவேத்தறதா சத்தியம் பண்ணியிருக்கேள்."

ராமின் கண்களைச் சந்திக்கப் பிரியப்படாத லவி, அவன் தோளில் முகம் வைத்து, காதின் அருகில் சின்னக் குரலில் மேலே பேசினாள்.

"அப்பா, பேரன், பேத்தி வேணும்னு ரொம்ப ஆசைப்பட்டார், ராம். அதை நிறைவேத்தலையேங்கற குறுகுறுப்பு வரவர எனக்கு அதிகமாயிடுத்து. என்னாலதான் இனிமே அதை நிறைவேத்த முடியாது; ஆனா உங்களால முடியும் இல்லையா? இதப் பத்தி ஒரு வருஷமா யோசிச்சேன்... யாரோ பெத்த குழந்தையை தத்தெடுக்கறதை விட உங்க ஜீன்ஸ், உங்க குணம் இதெல்லாம் ஐம்பது சதவீதம் கலந்திருக்கற குழந்தை ரொம்ப உசத்தி இல்லையா? என்ன ராம், நா சொல்றது புரியறதா?"

முதுகுப் பக்கமாய் கவிழ்ந்திருந்த லவியை முரட்டுத்தனமாய் அணைத்து தன்முன் இழுத்தான் ராம்.

"நீ என்ன சொல்ல வரே, லவி?"

"சொல்றேன்— அவசரப்பட்டா எப்படி?" என்ற லவி மீண்டும் அவன் தோள்களில் சாய்ந்துகொண்டாள்.

"எனக்குத்தான் உங்க குழந்தையை எனக்குள் வளர்க்கத் தகுதி இல்லே; ஆனா, வேற யாருக்காவது இருக்கும் இல்லையா?"

முதல் நாள் பேப்பரில் அமர்க்களப்பட்ட சோதனைக்குழாய் குழந்தை பற்றின சேதி ராமுக்குத் திடும்மென்று ஞாபகத்துக்கு வந்தது. லவி அதைப் படித்துவிட்டுப் பேசுகிறாளா?

"லவி— சோதனைக்குழாய் குழந்தை பத்தி நிறைய படிச்சுட்டயா? அதனால விளையாடறயா?"— ராம் தன் இறுக்கம் குறைந்தவனாய் கேலி செய்தான்.

"விளையாடலை, ராம். ரொம்ப ஸீரியஸா பேசறேன். சோதனைக்குழாய் குழந்தை இல்லை. நா சொல்றது செயற்கை முறைல கருத்தரிக்கறது..."

தடக்கென்று பிடியை உதறிவிட்டு எழுந்து நின்றான் ராம். லாவண்யா என்ன சொல்ல வருகிறாள் என்று அவனுக்குப் புரிந்த மாதிரி இருந்தது.

"லவி"— என்றான் அதட்டும் குரலில்.

"கோபப்படறதுலே பிரயோஜனம் இல்லே, ராம்... என்மேல அன்பு இருந்தா, பொறுமையா நா சொல்றதை நீங்க கேட்டே ஆகணும். பத்து மாசம் உங்க குழந்தையை வளர்க்க மட்டும் வேறொருத்தி; அப்பறம் அது நம்ம குழந்தையாயிடும், ராம்... ப்ளீஸ், கொஞ்சம் நிதானமாக யோசிச்சுப் பாருங்கோளேன், ப்ளீஸ்..."

எழுந்து தன்னை அணைக்க வந்த மனைவியின் பிடிக்கு அகப்படாமல் இரண்டடி பின்னால் போனான் ராம்.

"கடவுளே! இது எத்தனை அசிங்கம், லவி! உன்னாலே எப்படி அந்த தினுசிலே கற்பனை பண்ண முடிஞ்சுது!"

"என்ன அசிங்கம், ராம்? ரத்தம் ஏத்திக்கறோமே, அந்த மாதிரி தானே இதுவும்? அடிக்கடி வாலண்டரி ப்ளட்பாங்குக்குப் போய் ரத்ததானம் செய்றேளே, அப்போ இது யாருக்குப் போறது, சின்னப் பொண்ணுக்கா, வயசான ஆணுக்கானு யோசிச்சிண்டா கொடுக்கறேள்? மேல்நாட்டுலே ரொம்ப சகஜமா நடக்கற இந்த முறைக்கு ஏனோ நம்ப நாட்டுலே வரவேற்பே இல்லை... இதுலே என்ன தப்பு, ராம்? சோரம் போறோமா, இல்லை கெட்டுப் போறோமா, ஒண்ணுமில்லே... உசிரைக் காப்பாத்த, ரத்தம் ஏத்திக்கற மாதிரி, நொந்த மனசைக் காப்பாத்த, ஒரு தாம்பத்தியம் உடைஞ்சிப் போயிடாமக் காப்பாத்த ஒரு ஊசி மூலம் குழந்தையை உண்டு பண்ணற சக்தியை ஏத்திக்கறோம். அவ்வளவுதானே? வெறும் ஊசி... அவ்வளவுதானே? உங்களைப் பொறுத்தவரைக்கும் இதுலே நீங்க வேற எந்தப் பொறுப்பையும் ஏத்துக்க வேண்டாம். ஒருநாள் அஞ்சு நிமிஷம் டாக்டரைப் பாத்துட்டு வந்துடறதோடு உங்க வேலை முடிஞ்சுடும். அவ யாரு, எப்படிப்பட்டவ, கறுப்பா, சிவப்பாங்கற விவரங்கள் உங்களுக்குத் தெரியவேண்டிய அவசியம் இல்லே. அதோடு நீங்க இந்த விஷயத்தை மறந்துடலாம். பத்து மாசம் கழிச்சு நம்ப குழந்தை ஒண்ணை உங்க கண்ணிலே நா காட்டறேன், அவ்வளவுதான்... உங்களுக்கு வேதனையோ, கஷ்டமோ, சங்கடமோ இல்லாமப் பாத்துக்கறது என் பொறுப்பு. நா இத்தனை வருஷங்கள்ளே உங்ககிட்டே எதுக்குமே இப்படிக் கெஞ்சினதில்லே, ராம்... இப்ப கெஞ்சறேன். என் இந்த ஆசையை மட்டும் நிறைவேத்திடுங்கோ, ப்ளீஸ்... நீங்க சத்தியம் பண்ணியிருக்கேள் ஞாபகம் இருக்கட்டும், ராம்."



கடைசி நாலு வரிகளைப் பேசமுடியாமல் லாவண்யா உடைந்துபோனாள். மெதுவாய்ப் பேசிவிட்டு, தன் விருப்பம் நிறைவேறுமா, நிறைவேறாதா என்று புரியாமல் அழத் தொடங்கினாள்.

'காட்— மை காட்—' என்று உரக்கக் கூவின ராம், காலால் டீபாயை எட்டி உதைத்தான். அழும் மனைவியை சமாதானம் செய்யக்கூடத் தோன்றாமல், கதவைத் திறந்து சத்தத்தோடு மீண்டும் அதை அறைந்து சாத்திக்கொண்டு வெளியே போனான்.

அப்புறம் இரண்டு நாட்களுக்கு அந்த வீட்டில் ஒரு மௌன நாடகம் நடந்தது.

இரண்டாம் நாள் முடிவில் மனைவியின் பரிதாபம் தாங்க முடியாதவனாய் ராம் வலிய இந்தப் பேச்சை எடுத்தான்.

"நாம்ப ரெண்டு பேரும் எதுக்காக இப்படித் துக்கப்பட்டுண்டு இருக்கணும்? உன் பேச்சை நீ மறந்துடு, நானும் மறந்துடறேன் ஓ.கே... லவி?"

மாட்டேன் என்றாள் லாவண்யா. "நீங்க சத்தியம் பண்ணினேள், ராம்... எப்படி மறக்கறது?"

"சத்தியத்த தூக்கி உடைப்புல போடு! விஷயம் என்னனு தெரியாம நா சொன்னதை எப்படிக் காப்பாத்த முடியும்?"

"........"

பதில் ஏதும் பேசாமல் கண்ணீர் நிறைந்த கண்களுடன் தன் பிடிவாதத்தை விடாமல் லவி இருந்தது கோபத்தை அதிகரிக்க, ராம் மாடிக்குப் போய்விட்டான்.

ஆனால் மறுநாள் மனசு கேட்காமல் லவியிடம் மீண்டும் வந்தான் ராம்.

"ஆல்ரைட்— என்னை என்ன பண்ணச் சொல்றே, லவி?"

கணவனைத் தன் பேச்சுக்குக் கட்டுப்பட வைக்க முடியும் என்ற நம்பிக்கை பலித்துவிட்ட சந்தோஷத்தில் அவன் கழுத்தில் மாலையானாள் லவி.

"ஒண்ணும் பண்ணவேண்டாம்... எல்லாத்தையும் என்கிட்ட விட்டுடுங்கோ போதும்!"

"உன் எண்ணம் அத்தனை சுலபமா நிறைவேறிடும்னு நினைக்கறியா, டார்லிங்?"

"ஏன் நடக்காது? இதப்பத்தி நா ஏற்கெனவே டாக்டர் சுசீலா கிட்டே பேசியாச்சு. ரெண்டாம் பேருக்குத் தெரியாம செஞ்சு

முடிக்க முடியும்னு அடிச்சு சொல்றா... அப்பறம் ஒரு பொண்ணைக் கூடத் தயாரா வச்சிருக்கேன், ராம்... ஆனா அவளைப் பத்தின விவரங்களை உங்களுக்குச் சொல்லமாட்டேன். ஒரே ஒருநாள் என்னோட நர்ஸிங் ஹோமுக்கு வாங்கோ— அப்பறம் அடியோட இதை நீங்க மறந்துடலாம். ப்ளீஸ் டார்லிங்... சந்தோஷமா நீங்க சரின்னாதான் எனக்குத் திருப்தியா இருக்கும். இன்னும் ஒரு வருஷத்துல நம்ப குழந்தை— நினைச்சுப் பாக்கவே சந்தோஷமா இருக்கு!"

கண்களை விரித்துக்கொண்டு, சின்னப் பெண்ணுக்குரிய ஆசாபாசங்களோடு, என்றோ உனக்கு இனி இல்லை என்று ஆனதை, இன்று யார் மூலமாகவோ அடையத் துடிக்கும் லவியைப் பார்த்தான் ராம். இந்தப் பெண்மேல் நான் வைத்திருக்கும் அன்புக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நினைப்பு எழ, "உனக்காக எது வேணுன்னாலும் செய்வேன். உன்மேல நா உயிரையே வெச்சிருக்கேன், லவி" என்று சொல்லி அவளை இறுக அணைத்துக்கொண்டான்.

## 2

கணவனின் சம்மதம் கிடைத்த பின்னர், மேனகாவைச் சந்திக்கும்முன் டாக்டர் சுசீலாவைப் பார்த்து, விவரங்களைக் கேட்டுக்கொண்டாள் லாவண்யா.

"அந்தப் பொண்ணை இங்கே கூட்டிண்டு வா, லவி... முதல்லே அவளை நன்னா பரிசோதனை பண்ணணும். வியாதி, வேறு கோளாறு ஏதுமில்லாமல் இருக்காளான்னு பரிசோதனை செய்யணும். எல்லாம் சரியாய் இருந்தால் ரெண்டு மாசம் அவளை விசேஷ கவனிப்புல வெச்சு, தினம் டெம்பரேச்சர் எடுத்து, மற்ற மாற்றங்களைக் கவனித்து, அவளுக்கு முட்டை எப்ப உற்பத்தி ஆறதுன்னு கணக்குப் பண்ணணும். அப்பறம் ஒரு நாளை தீர்மானமாய் குறிச்சுண்டு ஊசி போடணும்."

டாக்டர் சொன்னதை தாமுவிடம் கூறினாள் லாவண்யா.

"எப்படியும் ஊசி போட மூணு மாசம் குறைந்தபட்சம் ஆகும்னு டாக்டர் சொல்றார். அந்த மூணு மாசம் நர்ஸிங் ஹோமிலே இருக்கணுமான்னு கேட்டேன். அவசியமில்லேன்னுட்டார். அதனால உடனடியாக நாம்ப ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதுல மேனகாவைக் குடிவைக்கறது நல்லதுனு நினைக்



கறேன். முதல்லே அவளை அந்த நாத்த சூழ்நிலைலேந்து கிளப்பணும். அந்த சந்தோ, அந்தப் பொண்களோ, அந்த ஆண்களோ, சே— எனக்கு ஒண்ணும் பிடிக்கலை—"

லாவண்யாவின் விருப்பப்படி வீடு தேடும்முன் மேனகாவைச் சந்தித்து, 'இன்னும் ஒரு வாரத்திற்குள் உன்னை வேறு வீட்டில் குடிவைத்துவிடுவோம். அதனால் வேலை ஏதாவது இருந்தால் முடித்துக்கொண்டுவிடு. கடன் கிடன் இருந்தால் அதையும் தீர்த்துவிடு' என்று சொல்லி இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்து வந்தார்கள்.

ஞாயிறு பேப்பர்களை வைத்துக்கொண்டும், தெரிந்த தரகர்களைப் பார்த்தும் அலைந்ததில் ஒரே வாரத்தில் மனசுக்குப் பிடித்த வீடு குதிர்ந்தது.

கலாக்ஷேத்ரா காலனியில், ஒதுக்குப்புறமாய் ஒரு சின்ன புது வீடு.

ஆசைஆசையாய்க் கட்டின வீட்டை விட்டு இரண்டு வருஷங்களுக்கு வெளிநாட்டுக்குப் போகவேண்டி இருக்கிறதே, வீட்டை ஒழிக்காமல் இப்படியே அலங்கரிக்கப்பட்ட தினுசிலே யாருக்காவது வாடகைக்கு விட்டால் என்ன என்று அந்த வீட்டின் சொந்தக்காரர்களான இளம் தம்பதி யோசித்த சமயத்தில்தான், அதைப்பற்றிக் கேள்விப்பட்டு லாவண்யா அங்கு போனாள்.

அத்தியாவசியப் பொருட்களும் தொலைபேசியும் உள்ள வீடு.

லாவண்யாவுக்கு ஏக திருப்தி.

வாடகை எண்ணூறு என்றதற்கு, 'இதற்கா? இவ்வளவா? ஊருக்கு ஒதுக்குப்புறமா இருக்கும் இந்தச் சின்ன வீட்டுக்கா?' என்றெல்லாம் அங்கலாய்க்காமல் டக்கென்று ஒப்புக்கொண்டு முன்பணமாக ஆறு மாச வாடகையையும் நீட்டிவிட்டாள்.

ஒரு பிரச்சினை முடிந்தது.

அடுத்து, மேனகா தனியாய் எப்படியிருப்பாள்? கூட, பேச்சுத் துணைக்கு, காவலுக்கு, ஒத்தாசைக்கு யார்?

இதற்கு தாமு வழி செய்துகொடுத்தான். அவன் கம்பெனி ப்யூனின் வயசான தாய் மேனகாவைப் பார்த்துக்கொண்டு வேலைகளில் உதவ, வீட்டோட இருக்க, வரவழைக்கப்பட்டாள்.

சூதுவாது இல்லாத கிராமத்துக் கிழவி. வெட்டிப்பேச்சுக்கு அலையாதவள். பொறுப்பாய், நிதானமாய் வேலையைச் செய்பவள்.

ஆயாவை லாவண்யாவுக்குப் பிடித்துப் போனது.

அடுத்த இரண்டாம் நாள், ஒரு பெட்டியில் அடைபட்டுப் போன தன் உடைமைகளோடு மேனகா கலாக்ஷேத்ரா காலனி வீட்டுக்குக் குடிவந்தாள்.

அன்று மாலை ஏழு மணிக்கு மேல், நன்றாக இருட்டின பிறகு மேனகாவை அழைத்துக்கொண்டு டாக்டரிடம் போனாள் லாவண்யா.

டாக்டர் எல்லாவற்றையும் பரிசோதனை செய்தார். ரத்தம், மலம், மூத்திரம் இவற்றை எடுத்து டெஸ்டுக்கு அனுப்பினார். இரண்டு நாட்கள் கழித்து முடிவுகள் வந்ததும் லாவண்யாவை போனில் அழைத்து, 'எல்லாம் சரியாய் இருக்கு, லவி– வி கான் கோ அஹெட்' என்றார்.

மேனகாவிடம் இருபத்தி எட்டு நாட்களில் அவளுக்கு ஒவ்வொரு மாசமும் மாதவிலக்கு கணக்காய் வருவதைக் குறித்துக் கொண்டதால், 'இந்தப் பெண் உடல்நிலையால் பிரச்சினை ஏதும் வராது' என்ற நினைப்பு சந்தோஷத்தைத் தர, அன்றிலிருந்து இரண்டு மாசங்களுக்கு தினமும் அவள் உடலின் வெப்பநிலை, மற்ற மாற்றங்கள் முதலியவற்றைக் குறிப்பு எடுக்க மேனகாவுக்கே அவர் கற்றுக் கொடுத்தார்.

இதன் நடுவில் ஆர்.எச் ஃபாக்டர் தகராறு இல்லாமல் இருக்க, ராமை ஒருநாள் சோதனைக் கூடத்திற்கு வரச் செய்து, ரத்தப் பரிசோதனை மூலம் அதுவும் இல்லை என்று அறிந்துகொண்டார்.

கவனிப்பில் இருந்தவரைக்கும் எல்லாம் திருப்திகரமாய் இருக்கவே இரண்டு மாசங்கள் முடிந்து, மூன்றாம் மாசம் சரியாய் பதினான்காம் நாள் ராமிடமிருந்து சேகரித்து வைத்திருந்த விந்து திரவத்தை மேனகாவின் கர்ப்பப்பையினுள் ஊசி மூலம் டாக்டர் ஏற்றினார்.

அடுத்துவந்த பதினான்கு நாட்களைக் கழிப்பதற்குள் லாவண்யாதான் தவித்துப்போனாள்.

சரியாய் நடக்குமா? எல்லாம் திட்டப்படி சரியாய் நடக்குமா? மேற்கொண்டு இருபது நாட்கள்போலத் தாண்டி மேனகாவின் மாதவிலக்கு வராமல் இருந்ததும், 'இது பிள்ளைதான்' என்ற குதூகலம் எழுந்து தவிப்பை விரட்டியது. அந்த நாற்பதாம் நாள், பரிசோதனை மூலம் மேனகா கர்ப்பமாய் இருப்பதை ஊர்ஜிதம் செய்த அன்று, இரவு கணவனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு



ஒன்றுமே சொல்லாமல் ரொம்ப நேரத்துக்கு விசும்பினாள் லவி.

கடந்த மூன்று மாசங்களாய் அவள் எதற்காக அலைந்து திரிகிறாள், மனசில் என்னென்ன கோட்டைகளைக் கட்டியிருக் கிறாள் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்ததால் ராம் அவளை ஏதும் கேட்கத் துணியவில்லை.

மூன்று மாசங்களாய் எத்தனை அலைச்சல்! என்ன தவிப்பு!

இப்போதெல்லாம் லவி அடிக்கடி வெளியில் போகிறாள். காரைத் தானே ஓட்டிப் போகிறாள். டிரைவர் வீட்டில் ஷெட்டோடு இருக்கப் பழகிவிட்டான்.

"வேர்க்க விறுவிறுக்க எங்கே டார்லிங் போயிட்டு வரே? டிரைவரை அழைச்சுண்டு போகக் கூடாதா?" என்று முதல் சில நாட்கள் ராம் கேட்டதற்குப் பதிலாய் ஏதும் கூறாமல் சின்னச் சிரிப்பாய் சிரித்துக்கொண்டு லாவண்யா நின்றபோதுதான், 'ஓ! இவள் அந்தப் பெண்ணுக்காக, அவளிடம் குழந்தையை உண்டாக்க அலைகிறாள்' என்ற நினைப்புத் தோன்றி அதன் பிறகு வாயை இறுக்க மூடிக்கொண்டு விட்டான்.

திடும்மென்று ஒரு நாள் லவி, 'உங்க ரத்தத்தைப் பரிசோதனை செய்யணுமாம், வரேளா?' என்றபோது என்ன ஏது என்று அவன் கேட்கவில்லை. அப்புறம் போன மாசத்தில் ஒரு நாள் நர்ஸிங் ஹோமுக்கு அரைமணி போய்விட்டு வந்தபோதும் அவன் மேற் கொண்டு ஒரு கேள்வியும் கேட்கவில்லை.

உனக்காகச் செய்கிறேன்; உன் மனசு திருப்திக்காகச் செய் கிறேன்; உன்மேல் நான் வைத்திருக்கும் அன்புக்காகச் செய்கிறேன்; உனக்கு நான் கொடுத்த சத்தியத்துக்காகச் செய்கிறேன் என்ற பாவனை அவன் முகத்தில், நடத்தையில், பேச்சில் தெரிவதை உணரும்போதெல்லாம் லவி நெகிழ்ந்துபோவாள்.

அன்று, லவி தன் மார்பில் சாய்ந்துகொண்டு வெகு நேரம் விசித்த அன்று மட்டும், இனியும் தாளமுடியாது என்று சங்கடத் துடன் அவன் அவள் முகத்தை நிமிர்த்தி, "என்னம்மா?" என்றான் மெள்ள.

"நிச்சயமாயிடுத்து, ராம்; அவ கர்ப்பம்னு இன்னிக்கு நிச்சய மாயிடுத்து" என்று விசும்பலினூடே லாவண்யா முனகினாள். முகம் தெரியாத ஏதோ ஒரு பெண்ணின் வயிற்றில் தன் குழந்தை வளரத் தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்த அந்தக் கணத்தில்

ராமின் மனசுக்குள் ஏதோ ஒன்று கிளுகிளுத்தது. அடிநாக்கில் தேனின் தித்திப்பு பரவியது. முதல் முறையாக இத்தனை வருஷங்களில் தோன்றாத ஒரு சிலிர்ப்பு தன் தேகத்தில் தோன்றுவதையும் ராம் புரிந்துகொண்டான்.

**மே**னகாவுக்கு இரண்டு மாசங்கள் பூர்த்தியாகிவிட்டன.

காலையில் எழுந்தால் வயிற்றைப் புரட்டியது. தலையைச் சுற்றியது.

சாப்பிடப் பிடிக்கவில்லை. சதா தூங்கினால் தேவலை போல இருந்தது.

காலைநேரத் தொல்லைகள் மேனகாவுக்குத் துன்பமாய் இருந்ததோ இல்லையோ, லாவண்யாவுக்கு அது வேதனையைத் தரத் தவறவில்லை.

மேனகா சோர்ந்து உட்கார்ந்தால் இவளும் சோர்ந்துபோவாள்.

தாமுகூட கேலி செய்தான்—

"பிள்ளையை அவ சுமக்கறான்னு பேர்தான். வேதனை அத்தனையும் உனக்குதான். என்ன அலைச்சல், என்ன வேதனை! எதுக்காக நீ இத்தனை சிரமப்படறே, லவி?" என்றால், இவள் புன்னகைப்பாள்.

ஆனால் ஒருநாள் மட்டும் அவனிடம் சொன்னாள்:

"மேனகாவோட அத்தனை உணர்வுகளையும், இன்ப, துன்ப உணர்வுகளையும் நானும் அனுபவிச்சாத்தானே, நானே பிள்ளை யாண்டு நானே பிள்ளை பெத்த மாதிரி இருக்கும், தாமு?"

விவேகியான லாவண்யா மனசில் இத்தனை குழந்தைத் தனமான ஆசையா?

அதன் பின்னர் அவளைச் சீண்டுவதை தாமு விட்டு விட்டான்.

இரண்டாம், மூன்றாம் மாசங்களில் நிறைய பழரஸத்தை மேனகாவுக்கு டாக்டர் கொடுக்கச் சொல்லியிருந்ததால் கூடை கூடையாய் டவுனுக்குப் போய் பழங்களை வாங்கி வந்து கொட்டி னாள் லவி.

இரும்புச்சத்து, மல்டிவைடமின், கால்ஷியம் மாத்திரைகளைத் தந்ததோடு, காலையிலும், மாலையிலும் நிச்சயமாய் மேனகா காலாற நடந்து பழகவேண்டும் என்று டாக்டர் சொல்லிவிட்டார். முடிந்தபோதெல்லாம் தானே வந்து மேனகாவை அருகிலிருந்த



கடற்கரைக்கு அழைத்துச் சென்று அவளோடு தானும் நடப்பாள். அப்படி இயலாத நாட்களில் ஆயா துணைக்கு வர கொஞ்ச தூரமாவது மேனகா போய்வரவேண்டும் என்று போன் மூலம் வற்புறுத்துவாள்.

மேனகாவைக் குடிவைத்த வீடு தள்ளியிருந்தாலும், போன் மூலம் பேசுவது லாவண்யாவுக்கு சௌகரியமாய் இருந்தது.

ராம் ஊரில் இல்லாவிட்டால் தூங்கி எழுந்ததும் மேனகாவுக்கு போன் பண்ணிவிடுவாள். அப்புறம் மதியத்துக்குமேல் போய்ப் பார்த்து அவள் தேவைகளை அறிந்து வருவாள்.

ராம் இருந்தால், அவன் ஆபீஸுக்குக் கிளம்புமுன் போனில் மேனகாவோடு பேசமாட்டாள். எக்காரணத்தைக் கொண்டும் மேனகாவும் காலை, மாலை நேரங்களில் வீட்டுக்கு போன் பண்ணக் கூடாது என்பது அவள் உத்தரவு. தேவைப்பட்டால், அத்யாவசியமான சமயங்களில் ஆயா பேசலாம்.

மேனகாவின் குரல்கூட ராமின் காதுகளில் விழாமலிருக்க லாவண்யா அதிஜாக்கிரதையாகவே இருந்தாள்.

அவளைப்பற்றி எந்த ஒரு விவரமும் உங்களுக்குத் தெரியாத படி நடந்துகொள்வேன், உங்கள் மனநிம்மதியைக் கெடுக்க மாட்டேன் என்று கணவனிடம் வாக்குக் கொடுத்திருக்கிறாளே, காப்பாற்றாவிட்டால் எப்படி?

முதல் நாளே அழுத்தம்திருத்தமாய் மேனகாவிடமும், ஆயாவிடமும் லவி சொல்லிவிட்டாள். "அனாவசியமாய் வீட்டுக்கு போன் பண்ணக் கூடாது. தினம் நானே நாலு தடவை போன் பண்றேனே, அப்பறம் என்ன? மீறி செய்ய நேரிட்டு நா இல்லேன்னா அடையாறிலிருந்து பேசறேன்னு சொல்லிட்டு வெச்சுடு— நா வந்து உனக்கு போன் பண்ணுவேன்— ஓ. கே?"

மேனகா அவள் உத்தரவை முதல் சில நாட்கள் மீறாமல்தான் இருந்தாள். ஆனால் இரண்டு மாதங்களைத் தாண்டுவதற்குள் 'போர் அடிக்குது,' 'சினிமா போய் வரட்டுமா,' 'இந்த வாரப் பத்திரிகை வந்தா கொண்டு வாங்க' என்பது போன்ற உப்பு சப்பில்லாத விஷயங்களுக்குக்கூட போன் பண்ணத் தொடங் கியதும், லாவண்யா இதை வளரவிடக் கூடாது என்ற எண்ணத் தோடு போனுக்கு ஒரு பூட்டு வாங்கி மாட்டிவிட்டாள். இனி அவள் அழைத்தால்தான் உண்டு. அவர்களால் பேச முடியாது.

உண்மையில் மேனகாவுக்கு லாவண்யா எந்த ஒரு குறையும் வைக்கவில்லை.

எண்ணூறு ரூபாயில் வீடு. அதில் ஃப்ரிஜ், கீஸர் சௌகரியங்கள், ஏவும் வேலைகளைச் செய்ய ஆயா, வயிற்றை முட்டும் விதவிதமான உணவு வகைகள், மனசை சந்தோஷத்தில் வைக்க அழகான புடவைகள்.

'பொழுது போவதில்லை' என்று ஒருநாள் மேனகா முணுமுணுத்தாள் என்பதற்காக மறுநாளே டி.வி. ஒன்று வந்து சேர்ந்தது.

இன்னும் என்ன குறை?

ஆரம்பத்தில் லாவண்யா கணக்குப் போட்டுப் பார்த்தபோது மேனகாவின் மூலம் ஒரு குழந்தையை தான் அடைவதற்கு அரை லட்சத்துக்கும் மேலேயே செலவு செய்யவேண்டிவரும் என்பதைப் புரிந்துகொண்டிருந்தாள்.

கணக்கில் அடங்காத சொத்து உடைய தங்களுக்கு ஒரு வாரிசு வர ஐம்பதாயிரம் என்ன, லட்சத்தைச் செலவழிக்கக்கூட லவி தயாராய் இருந்ததால் இரண்டாம் முறை இதைப்பற்றி எண்ணவில்லை.

கூடுமானவரையில் தான் மேனகாவைப் பார்க்கப் போவதை பிறர் அறியாதவண்ணம் நடந்துகொண்டாள்.

'அடையாறிலே ஒரு பாலமந்திரில் கௌரவக் காரியதரிசியா வேலை ஏத்துண்டு இருக்கேன். அதான் அடிக்கடி வெளிலே போக வேண்டியிருக்கு' என்று ஒருநாள் அப்புவிடம் சாதாரணமாய் சொல்லி வைத்தாள்.

மற்ற ஆட்களைப்பற்றி அவளுக்குக் கவலையில்லை.

"ஏம்மா நீயே காரை ஓட்டிண்டு போறே? டிரைவரைக் கூட்டிண்டு போகப் படாதோ?" என்று அவர் ஆதங்கத்துடன் கேட்டபோது, "கால் சதைகள் வீக்காய் இருக்காம்! அடிக்கடி கார், சைக்கிள் ஓட்டுன்னார் டாக்டர். சைக்கிள் ஓட்டறதைவிட கார் தேவலை இல்லையா, மாமா?" என்று அவள் சமாளித்ததையும் அப்பு நம்பிவிட்டதால், அதன்பின் கேள்விகள் இல்லை.

எப்போதும் முற்பகலில் இவள் வெளியில் போனதால் மாலை வேளைகளில் ராமுடன் நண்பர்களை, உறவினர்களைச் சந்திக்கச் செல்வதும் நிற்காமல் நடந்தது.



பயந்துபயந்து மூன்று மாசங்களை ஓட்டின பிறகு, யாருக்கும் எதுவும் தெரியாது. இனி எதற்காக இப்படி பயந்து சாக வேண்டும் என்ற தைரியம் லவிக்கு வந்தது.

என்னதான் தைரியமும், நிம்மதியும் வந்தாலும் 'நம்ம குழந்தை வளர ஆரம்பிச்சுடுத்து. வயத்துல உதைக்கறது! நமக்கு எது பிறக்கும்? ஆணா, பெண்ணா? என்ன பேர் வைக்கலாம்?' என்ற குழந்தைத்தனமான நினைப்புகள் எழும்பும்போதெல்லாம் கணவனிடம் வாய்விட்டு இது குறித்துப் பேசமுடியாமல் இப்படி மௌனமாய், தனக்குத்தானே சந்தோஷிக்க வேண்டியிருக்கிறதே என்று லாவண்யா லேசாய் வருத்தப்படுவது மாத்திரம் மறையவில்லை.

## 3

**மே**னகாவுக்கு ரொம்ப போர் அடித்தது.

இந்த டி.வி. சனியன் நாள் பூராவும் இருந்துத் தொலைக்கக் கூடாதா? அமெரிக்காவிலே இருபத்தி நாலு மணி நேரமும் இருக்குமே. அப்படி இங்கேயும் இருந்தால் ஹாய்யாகப் படங்கள் பார்த்துக்கொண்டே இருக்கலாம். இப்படி போர் அடிக்கிறது, போர் அடிக்கிறது என்று சதா மருகத் தேவையில்லை.

எத்தனை நேரம் ரேடியோ கேட்பது? அதுவும் பகலில் பாதி சமயம் மௌனமாகி விடுகிறது.

ஒரு பத்திரிகை பாக்கியில்லை. தமிழ், ஆங்கிலம் ஒரு பத்திரிகை பாக்கியில்லை. போதாத குறைக்கு இவளுக்கு பார்பரா கார்ட்லண்ட் கதைகள் பிடிக்கும் என்பதால் லைட் ரொமான்ஸ் கதைப் புத்தகங்களை எக்கச்சக்கமாய் நூலகத்திலிருந்து லாவண்யா கொண்டுவந்து குவித்திருந்தாள்.

அதற்காக எத்தனைதான் படிப்பது, கண் எரிகிறதே!

மேனகா கான்வென்டில் பத்தாவதுவரை படித்த பெண்.

"உன் உடம்புக்கும், முகவெட்டுக்கும் சினிமாவிலே சேர்ந்தால் பிரமாதமா ஜொலிப்பே" என்று பக்கத்து வீட்டில் கடை வைத்திருந்த டெய்லர் அடிக்கடி சொன்னதில், புத்தி மழுங்கினவளாய், ஒருநாள் ராத்திரி திருட்டுத்தனமாய் வீட்டை விட்டு அவனோடு ஓடிவந்தாள்.

அந்த நாசகாரப் பாவி மெட்றாஸுக்கு அழைத்து வந்து, ஒரு வாரம் இவளை லாட்ஜில் நன்றாய் அனுபவித்தபின் அம்போ என்று விட்டுவிட்டு ஓடிப்போனான்.

பதினேழு வயசில் ஆண்களைக் கண்டால் மேனகாவுக்கு அடிமனசில் ஒரு வெறுப்பு தோன்றியது அப்போதுதான்.

வீட்டுக்குத் திரும்பிவிடலாமா என்று அவள் யோசித்தாள்.

அப்பா பெரிய பணக்காரர் இல்லை. சுமாரான வருமானம், அதில் கிடைத்த சுமாரான வாழ்க்கை. ஆனால் இரண்டு பெண்ணையும் பட்டப்படிப்பு படிக்க வைத்து, தன் சக்திக்கு ஏற்ற இடமாய் கொடுத்துவிட வேண்டும் என்று அம்மாவிடம் அடிக்கடி சொல்லி மேனகா கேட்டிருந்ததால், வீட்டுக்குப்போய் அப்பா முன் நிற்பதைப்பற்றி யோசிக்கையில் அப்பாவின் குணம் கண்முன் நின்று ஆடியது.

மானத்தைவிட எனக்கு எதுவும் பெரிசில்லை என்னும் அப்பா தன்னை வெட்டிப் புதைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார் என்பது நிச்சயமாக, அந்தச் சின்ன வயசில் சாகப் பிடிக்காத வளாய், லாட்ஜுக்கு வந்த துணை நடிகர்களுக்கான ஏஜெண்ட் சினிமாவில் உதிரி வாய்ப்புகள் வாங்கித்தர ஆசைகாட்டியபோது அதை வாய் திறக்காமல் ஏற்றுக்கொண்டாள்.

அப்புறம்தான் அந்த சந்துக்குக் குடிபோனாள்.

இவள் கூட இருந்த பெண்கள் எல்லாம் பத்துக்கும், இருபதுக்கும் என்னென்னமோ செய்ததை இவள் என்றைக்குமே செய்தது இல்லை, இனி என்றும் செய்ய நினைப்பதும் இல்லை.

இதுவரை மேனகா எட்டுப் படங்களில் குரூப் டான்ஸ் ஆடியிருக்கிறாள். அழகாய் இருந்தும், இளமையுடன் இருந்தும் சுமாராய் நாட்டியம் ஆடத் தெரிந்தும், இவள் தங்கள் விருப்பத்துக்கு ஒப்ப மறுக்கிறாள் என்ற கோபத்தோடு இவளைப் பின்னணியில் தள்ளி, குண்டான, அசிங்கமான, ஆடத் தெரியாத, ஆனால் அவர்கள் ஆட்டத்துக்கு ஈடுகொடுக்கத் தெரிந்த பெண்களை முன்னால், காமிராவில் படும்படி நிறுத்தியபோதும், இதுதான் என் தலைவிதி என்று மௌனமாய் மேனகா ஏற்றுக்கொண்டதுண்டு.

ஆனால் அப்போதெல்லாம் இந்த ஆண்களுக்கு எத்தனை திமிர், தங்கள் இஷ்டத்துக்கு ஒரு பெண்ணை ஆட்டிவைக்க முடியும் என்று எத்தனை திமிர், என்று அடிமனசில் தோன்றிவிட்ட வெறுப்பு மெள்ள உள்ளே விசிறுவது உண்டுதான்.

இரண்டு வருஷங்களுக்குமுன் தாமுவின் படத்தில் வேலை செய்தபோது அது அவளுக்குத் திருப்தியைத் தருவதாக இருந்தது.



தாமு ஸார் மாதிரி கண்ணியமான, வசதிபடைத்த மனிதனைக் கணவனாக அடைந்துவிட்டால், இந்தத் தொழிலுக்குக் கும்பிடு போட்டுவிட்டு நகர்ந்துவிடலாம் என்ற ஆசை எப்படியோ சின்னதாய் அவளுள் புகுந்துவிட்டது அந்த சமயத்தில்தான்.

தாமு ஸார் மாதிரி ஆணா? என்னைப் போன்ற பெண்ணை மணப்பதா? இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா? ம்ஹூம் இல்லை. அனுபவிக்க வேண்டுமானால் தயாராக இருப்பார்கள். ஆனால் பெண்டாட்டியாக்கிக்கொள்ள எவன் தயார்? தாமு ஸாராவது என்னை விகல்பமான நோக்கோடு அணுகியதே இல்லை. ஆனால் அந்த சண்முகம்? தாமுவின் உதவியாளராகப் பணிபுரிந்த சண்முகம்?

இரண்டுமாசகாலம் இவளோடு வாழ்ந்துவிட்டு, பிறகு 'எங்கம்மா குடும்பப்பெண்ணா வேணும்னு ஆசைப்படறாங்க, அவுங்க ஏற்கனவே இருதய நோயாளி... உன்னைப்பத்தி சொன்னா அவுங்க நிலை என்னாகும்னு தெரியலை. அதனாலே என்னை மறந்துடு மேனகா' என்று சர்வசாதாரணமாய் ஒருநாள் பேசிவிட்டுப் போய்ச்சேர்ந்தானே!

எனக்கு அழகு இருக்கிறது, இளமை இருக்கிறது, ஆனால் அதிருஷ்டம்தான் இல்லை. ஆனால், நான் காத்திருப்பேன். என்றைக்காவது என் பக்கம் அதிருஷ்டக்காற்று வீசத்தான் செய்யும்; அப்போது இந்த ஆண்களை எல்லாம் என் காலைத் தொட்டுக் கும்பிட வைக்கவேண்டும். சீ, அற்பங்களா என்ற பார்வை பார்க்கவேண்டும்... வரும், அப்படி ஒருநாள் வரும்—

கையாலாகாத்தனத்துடன் மனசில் நூறு கற்பனைகளை வளர்த்துக்கொண்டாலும், பிறந்து வளர்ந்த நல்ல குடும்பத்தின் போதனை காரணமாய், விளக்கில் விட்டில் பூச்சிகளாய் பாய்ந்து தங்களை மற்ற பெண்கள் அழித்துக்கொண்ட நாழிகையில் ஓரளவுக்கு நிதானத்துடன் செயல்பட்டு, தன் தனித்தன்மையை மேனகா காப்பாற்றிவந்த சமயத்தில்தான் லாவண்யா அவளைச் சந்தித்தாள்.

முதல்நாள் லாவண்யா சற்றும் எதிர்பாராமல் வந்ததையும், பலமாய் பீடிகை போட்டுச் சென்றதையும் அன்றிரவு முழுவதும் தனிமையில் அமர்ந்து மேனகா யோசிக்கவே செய்தாள்.

தாமு ஸார் நல்லவர். வித்தியாசமான ஆண். எனக்கு மரியாதை கொடுத்து நடத்திய முதல் ஆண். அவர் கூட்டிவந்திருக்கும் இந்தப் பெண் சொல்லும்படி நடந்துகொண்டால் என்ன

ஆகிவிடும்? ஆமாம், இந்தப் பெண்ணுக்கு எதற்காக என் உதவி தேவைப்படுகிறது?

தமிழ் சினிமாவில் பார்த்த சில சம்பவங்கள் நினைவிற்கு வந்தன.

திடீர் மனைவி, திடீர் தங்கை, திடீர் காதலி, திடீர் வேலைக்காரி என்று சினிமாவில் தத்துபித்தென்று காட்டுவதுபோல ஏதாவது திடீர் கதாபாத்திரத்திற்காக என்னை நாடுகிறாளோ?

எதுவானால் என்ன? இருபத்தையாயிரம்! அடேயப்பா! எத்தனை பணம்! மூன்று வருஷங்களாய் இந்த சாக்கடையில் உழன்றதில் நான் சம்பாதித்துக் கிழித்தது என்ன? அடைந்த அனுபவங்கள் என்ன?

எட்டுப் படங்களில் தலையைக் காட்டினதோடு டெய்லர், துணைநடிகர் ஏஜெண்ட், அந்த நாயர், அப்புறம் சண்முகம் என்று நாலு ஆண்களின் தற்காலிகத் தொடர்பு—

மிஞ்சினது என்ன?

ஒன்றுமில்லை. இளமையான வாழ்க்கையில் மூன்று வருஷங்கள் மைனஸ் ஆனதும், கேடுகெட்ட பெண்களுடன் வாழ்வதும், அன்றாடம் பல்லைக் காட்டும் ஆண்களை எப்படி ஒதுக்கிவிடலாம் என்று கவனமாய் இருப்பதும், 'அவளா? மஹா திமிரு பிடிச்சவ' என்று பட்டப் பெயரைக் கட்டிக்கொண்டதும் தானே மிச்சம்?

மேனகா ரொம்ப யோசிக்கவில்லை. எந்த வேலையானாலும், அது இப்போது வாழும் வாழ்க்கையைவிட ஈனமாய் இருக்காது என்று புரிய, மறுநாள் லாவண்யாவின் நிபந்தனைக்கு ஒப்புக் கொள்வது என்று தீர்மானித்தாள்.

ஆனால், லாவண்யாவின் திட்டத்தைக் கேட்டதும் மேனகா மனசுக்குள் ஒரு நிமிஷம் அதிர்ந்துபோனது நிஜம்தான்.

ஒரு ஆணின் குழந்தையை நான் தாங்கி வளர்க்கவேண்டுமா? அது பிறந்த பிறகு உனக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று நடையைக் கட்டவேண்டுமா? முடியுமா என்னால்?

ஏன் முடியாது. பெற்ற அப்பா அம்மா, கூடப்பிறந்த தங்கையை விட்டு மூன்று வருஷங்களாய் வாழவில்லையா? அது போலத்தானே இதுவும்! பிறந்த குழந்தை செத்துவிட்டது என்று நினைத்துக்கொண்டால்? அதுவும் தவிர, இது என்னைத் தொட்டுத் தாலி கட்டின புருஷனின், நான் மனமார காதலித்த காதலனின்



குழந்தையா என்ன? ம்ஹூம் இல்லை. அவன் யார் என்று எனக்குத் தெரியாது. அழகானவனா, குரூபியா, நல்லவனா, கெட்டவனா; நோயாளியா, திடகாத்திரமானவனா— ஒன்றும் தெரியாது. ஒரு ஊசி போட்டுக்கொள்ள வேண்டும். அப்புறம் சௌக்கியமாய் ராணிபோலப் பத்து மாசங்களுக்கு இருக்க வேண்டும். தடபுடலாய் வீடு, துணிமணி, கூப்பிட்ட குரலுக்கு ஆள். அப்புறம் என்ன?

மேனகா ஒப்புக்கொண்டாள்.

முதலில் தீவிர கவனிப்பில் இரண்டு மாசங்கள் இருந்தபோது வாழ்க்கை நன்றாகவே இருந்த மாதிரி தோன்றியது.

ஒரு பணக்காரப் பெண் அனுபவிக்கும் வசதிகளுடன் கவலை இல்லாமல் வாழ்வது சந்தோஷத்தைத் தருவதாகவே இருந்தது.

ஆனால் பிள்ளை வயிற்றில் உண்டான பிறகு, தலை சுற்றுவதும், வயிற்றுப் பிரட்டலும் தோன்றின பிறகு மனசு லேசாய் மாறத் தொடங்கியது.

லாவண்யா தன்னை இங்கு, அங்கு விடாதபடி கண்டிப்பது கஷ்டமாக இருந்தது. நினைத்ததை சுதந்திரமாய் செய்ய முடியாமல் இருப்பது வேதனை தந்தது. ஜெயில் கைதி மாதிரி ஆயா முகத்தைப் பார்த்துக்கொண்டு, படித்துக்கொண்டு, டி.வி. பார்த்துக்கொண்டு, ரேடியோ கேட்டுக்கொண்டு எந்நேரமும் இருப்பது அலுத்துப் போனது.

நினைத்தபோது சினிமா போனால் என்ன? என்றாவது அத்திப் பூத்த மாதிரி பழைய சிநேகிதிகளைப் பார்த்து, நான் எப்படி அந்தஸ்தாக இருக்கிறேன் பார், என்று பீற்றிக்கொண்டால் என்ன? ரகசியத்தைச் சொல்லக் கூடாது; சரி. நான் இப்போது என்ன பண்ணிக்கொண்டிருக்கிறேன் என்று ஒருத்தரும் அறியக் கூடாது; சரி... ஒப்புக்கொள்கிறேன். அதற்காக என்னை ஒரு ஜெயில் கைதி மாதிரி நடத்தினால் எப்படி?

வாய்விட்டு ஒருநாள் லாவண்யாவிடம் கேட்டபோது அவள் நிதானமாய் இவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

"சின்னக் குழந்தையாட்டம் இது என்ன பேச்சு, மேனகா? ஒரு வருஷம் என் இஷ்டப்படி இருக்கேன்னு ஒத்துண்டது மறந்து போச்சா? அனாவசியமா வெளியே போனா யாராவது பாக்க நேரிடும், ஏதாவது சொல்ல நேரிடும். நோ மேனகா, ஐம் ஸாரி... நீ வாக் போறதும், டாக்டரைச் சந்திக்க வெளியே போறதும் இந்தப்

பத்து மாசத்துக்குப் போதும்... வேற எதையும் நா அனுமதிக்க மாட்டேன். டிவி. இருக்கு, சினிமா பாரு— புஸ்தகங்கள் இருக்கு, படி. வேணும்னா எம்ப்ராய்டரி, கம்பளி நூல் எல்லாம் வாங்கித் தரேன். எம்ப்ராய்டரி போடு, இல்லாட்டா ஸ்வெட்டர் பின்னு..."

மேனகா பதில் ஏதும் பேசவில்லை. ஆனால் மனசில் மட்டும் 'பணத்திமிர் இவளை இப்படிப் பேச வைக்கிறது; என்னைப் பணம் கொடுத்து வாங்கிவிட்டதால் இப்படி நடத்த வைக்கிறது' என்று ரொம்ப நேரத்துக்குக் குமைந்து தீர்த்தாள்.

ஆயாவிடம் முதலிலேயே தாமு சொல்லிவிட்டான். 'நீ வேலை பாக்கப்போறது பெரிய இடம். பெத்தவங்களுக்கும், இளைய பெண்ணுக்கும் ஏதோ மனஸ்தாபம். எவனையோ காதலிச்சதுக்குப் பெத்தவங்க சம்மதிக்காத கோவத்திலே அந்தப் பெண்—மேனகா, வீட்டை விட்டு ஓடிட்டா. மூத்தவ லாவண்யா, அவளைக் கண்டு பிடிச்சி ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, அப்பா அம்மா கோபம் தணியற வரையில் தனியா, கண்மறைவா இருக்கட்டும்னு வெச்சிருக்கா. இதுதான் நீ வேலைபாக்கப்போற பெண் வீட்டுக் கதை. மனசு நொந்த பெண். அதனாலே எதையும் நீயா வாயைத் திறந்து பேசக்கூடாது. இட்ட வேலையைச் செய்துட்டு துணையா ஆதரவா இருக்கணும்— ஒரு வருஷத்துலே பெத்தவங்க மனசு மாறும்னு லாவண்யா நம்பறா. மாசம் உனக்கு சாப்பாடு போட்டு நூறு ரூபாய் சம்பளம். அதைத் தவிர ஒரு வருஷம் கழிச்சு பெண், பெத்தவங்ககிட்ட போகும்போது உனக்குத் தனியா ஆயிரம் ரூபா தருவாங்க... புத்தியோட நடந்துக்க' என்று இல்லாததையும், பொல்லாததையும், இட்டுக்கட்டி கதைபோலச் சொன்னதை ஆயா அப்படியே நம்பிவிட்டாள்.

இந்தக் கதை லாவண்யா, மேனகாவுக்கும் சொல்லப்பட்டு விட்டதால் வம்பு தும்பு ஏதுமில்லை.

ஸ்வபாவமாகவே ஆயா ரொம்பப் பேசும் வகை இல்லை. தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருப்பாள். மேனகா முகத்தைத் தூக்கிவைத்துக்கொண்டு இருந்தால், போர் அடிக்கிறது ஆயா என்று வீட்டை வளையவந்தால், "மகமாயி கருணையாலே எல்லாம் சரியாப் போயிடும்மா... மனசு தளராதே! உங்கப்பா அம்மா மனசு மாறி, உன் விருப்பம்போல பிரியப்பட்டவனையே கட்டிக்குவே" என்று ஏதாவது சொல்லி சமாதானப்படுத்துவாள்.



மேனகா கர்ப்பமானதும், தொடர்ந்து வெளியில் எங்கும் போகக் கூடாது என்று லாவண்யா உத்தரவு போட்டதும், 'ஓஹோ— விஷயம் முத்திப் போச்சு... அதான் பெரியம்மா இவ்வளவு கறாராய் இருக்காங்க' என்று ஆயா எண்ணிக்கொண்டதற்கு யாரும் மறுப்பு சொல்லவில்லை.

லாவண்யாவை அறிந்த இந்தச் சில மாதங்களில் அவளாக ஏதும் சொல்லாவிட்டாலும், தன் சூட்டிகையான குணத்தால் அவளைப்பற்றி நிறைய தெரிந்துகொண்டுவிட்டாள் மேனகா.

டாக்டர் சுசீலா பேச்சிலிருந்து, தாமுவும் லாவண்யாவும் பேசுவதிலிருந்து, இங்கொன்றும், அங்கொன்றுமாகத் திரட்டிய விஷயங்களே அவளுக்கு லாவண்யாவின் பணபலம், குடும்பம், ராமின் குணங்கள் போன்றவற்றை விளக்குவதாக இருந்தன.

இந்த ராமைப்பற்றி இத்தனை உயர்வாகப் பேசிக்கொள் கிறார்களே என்ற வியப்பு மனசில் தோன்றி மெள்ளமெள்ள விரியத் தொடங்கியதும், இவர் நேரில் எப்படியிருப்பார் என்றும் கற்பனை செய்ய முற்பட்ட ஒரு நாளில், பேச்சுவாக்கில் லாவண்யாவிடம், "உங்களோடு கிட்டத்தட்ட நாலு மாசமா பழகறேன், ஆனா உங்களைப் பத்தின விவரம் எதுவும் நீங்க என் கிட்டே சொன்னதில்லை. உங்க வீடு எங்கே இருக்கு? உங்களையும், உங்க வீட்டுக்காரரையும் தவிர உங்க வீட்டுலே வேற யாரு இருக் காங்க?" என்று சிநேகிதத் தன்மையுடன் மேனகா கேள்வி கேட்ட தற்குப் பதிலாய் தன் விழிகளைச் சற்றே விரித்து ஒரு பார்வை பார்த்தாள் லாவண்யா.

பிறகு ரொம்ப மெதுவான குரலில், ஆனால் கண்டிப்பாகப் பேசினாள். "உனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களிலே நீ தலை யிடறது எனக்குப் பிடிக்கலை, மேனகா. உனக்கு இங்கே ஏதாவது அசௌகரியம் இருந்தா சொல்லு— உன் உடம்புக்கு முடியாம இருந்தா சொல்லு— உடனே கவனிக்கறேன். ஆனா, அதோட சரி... ஆரம்பத்திலே தாமுவும் நானும் உன்கிட்ட விவரமா உன் எல்லையைப்பத்திப் பேசி, நீ அதுக்கு சம்மதிச்சிருக்கே; அதை மறக்காதே! இனிமே இந்த மாதிரி சொந்தக் கேள்விகள் கேக்காதே. ஓ.கே?"

மேனகாவின் முகம் சுண்டிப்போனது. சாதாரணமாய் பிறரின் அந்தரங்கங்களில் தலையிட்டு, வம்பளக்கும் பெண் அவள் இல்லை. ரொம்ப முக்கியமான விஷயத்தில் இவளோடு பங்கெடுக்

கிறோம். அதனால் மற்றவர்களிடம் இருக்கிற மாதிரி ஏனோ தானோ என்று பழகக் கூடாது; அன்போடு, பாசத்தோடு அந்தரங்கமாய் பேசிக்கொள்ளுவது நல்லது என்ற முடிவுடன் பேச்சைத் தொடங்கிய மேனகாவுக்கு முகத்தில் அறைந்த மாதிரி, லாவண்யாவின் சொற்கள் கோபமூட்டுவதாக இருந்தன.

சரி இவளோடு நமக்கென்ன என்று ஒதுங்கிப்போனவளின் ஆத்திரத்தை இன்னொரு சம்பவம் விரைவிலேயே மறுபடி தூண்டி விட்டது.

அன்று தலைசுற்றல் வழக்கத்தைவிட அதிகமாக இருந்ததால் என்ன மாத்திரை போட்டுக்கொள்ளட்டும் என்று லாவண்யா விடம் கேட்க வீட்டுக்கு போன் பண்ணினாள்.

காலை மணி ஏழிருக்கும்.

போனை எடுத்தது ஒரு ஆண்–

அழுத்தமான, கனமான குரல்.

"ஹலோ..."

"ஹலோ" என்றாள் மெல்ல.

"ராம் ஹியர்..."

'ராம், என் வயிற்றில் வளரும் குழந்தைக்குத் தந்தை?'

சட்டென்று காரணமில்லாமல் மனசு புல்லரித்தது.

அடுத்த விநாடி லாவண்யாவின் குரல் போனில் கேட்டது.

"யாரு?"

"நாந்தான்" என்றாள் மேனகா.

"ராங் நம்பர்" என்று சொல்லி லவி போனை வைத்தாள். சரியாய் பத்து நிமிஷத்தில அவளே போன் செய்தாள்.

"வீட்டுக்கு போன் பண்ண வேண்டாம்னு சொல்லி இருக் கறச்சே என்ன தைரியத்துலே பண்ணினே? நீ செஞ்சது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலே! அப்படியென்ன தலைபோற அவசரம்?"

லாவண்யா இத்தனை கோபமாய்ப் பேசி மேனகா கேட்ட தில்லை.

அன்று மதியம் வந்தபோதுதான் போனுக்கு ஒரு பூட்டை மாட்டி, "இனி நா கூப்பிடறேன்– நீ பண்ண வேண்டாம்" என்றாள் லவி.



நீ என்ன அடக்கினாலும் அடங்கமாட்டேன் என்று கொந் தளித்துக்கொண்டு மேனகாவின் கோபம் சீறியது அந்த விநாடி யில்தான்.

லாவண்யாவிடம் ஏதும் பேசாவிட்டாலும், அன்று முழுவதும் படம் எடுத்து ஆடிய ஆத்திரத்தை அடக்கத் தெரியாது மேனகா தவித்துப்போனாள்.

எதற்காக இவளுக்கு இத்தனை கோபம் வருகிறது? நான் என்ன தப்பு பண்ணினேன்? இவளுக்காக நான் எத்தனை பெரிய தியாகம் பண்ண சம்மதித்திருக்கிறேன். அதை நினைவில் வைத்துக் கொள்ளாமல் இப்படி கூலியாளை விரட்டுகிற மாதிரி விரட்டு கிறாளே?

நீயும் வேண்டாம், உன் பணமும் வேண்டாம் என்று போய் விட்டால் என்ன?

இரண்டு மாச கர்ப்பத்தைக் கலைக்க வழியா இல்லை?

இவளிடம் அடிமைப்பட்டு ஏன் கிடக்கவேண்டும்?

சரி– போகலாம்– ஆனால் இவளிடம் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறேனே, அது?

பாதியில் நான் இதிலிருந்து விலகினால் இருபத்தையாயிரம் தருவதாய் ஒப்புக்கொண்டிருக்கிறேனே, அது?

நீ இந்த ஒப்பந்தத்திலிருந்து மீறினால் நான் ரொம்பப் பொல் லாதவனாய் இருப்பேன் மேனகா என்று தாமு ஸார் சொல்லி இருக்கிறாரே, என்ன பண்ணுவார்? அவருக்குத் தெரியாமல் திரும்ப நான் இந்த சினிமாத்துறையில் எப்படி நுழைய முடியும்?

யோசிக்கயோசிக்க ஒப்பந்தத்திலிருந்து விடுபட முயற்சிப்பது அசட்டுத்தனம் என்பது தெளிவானது.

மேலும் கொஞ்சம் ஆத்திரம் அடங்கின பிறகு இத்தனை வசதியான வாழ்க்கையை விட்டு ஓடுவது பைத்தியக்காரத்தனம் என்பதும் புரிந்தது.

ஆரம்பத்தில் எழுந்த ஆத்திரமும், கோபமும் தணிந்து, இந்த வாழ்க்கையில் உள்ள ஆதாயங்கள் புரிந்த பிறகு தெளிவான மனசோடு மேனகா சிந்தித்தாள்.

நினைவுகள் லாவண்யாவிடமிருந்து ராமிடம் தாவின.

அவரைப் பார்க்கக் கூடாது, அவரோடு பேசக் கூடாது என்று ஏன் லாவண்யா இத்தனை கவனமாய் இருக்கிறாள்?

தனக்கு மட்டுமே இவர் சொந்தம் என்கிற உணர்வா?

அந்தக் குரலில்தான் என்ன அழுத்தம்?

குரலே இத்தனை ஆண்மையுடன் இருக்கிறதே, ஆள் பார்க்க எப்படி இருப்பார்?

குரலுக்கும், தோற்றத்துக்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பாரா, இல்லை சுமாராய் இருப்பாரா, எப்படி இருப்பார்?

அந்த ராமைப் பார்த்தால் என்ன?

அவரோடு பேசினால் என்ன?

நான் சாதாரணமாய் வீட்டுக்கு போன் பண்ணியதற்கே இப்படி குதிக்கும் லாவண்யா, அவரோடு நான் பேசினேன், அவரை பார்த்தேன் என்றால் எப்படி அடிபட்டுப்போவாள்? நான் இவள் பேச்சால் வதங்கிப்போன மாதிரி? துவண்டுபோன மாதிரி?

லாவண்யா முகத்தை அப்படி கற்பனை பண்ணிப் பார்த்த போது அது ஒருவிதமான குரூரத் திருப்தியைத் தர, ஒரு வாரம் கழித்து ஒரு நாள் ஆயா மார்க்கெட்டுக்குப் போயிருந்த சமயத்தில் வாசலில் போன பூட்டுச்சாவி ரிப்பேர்க்காரனை அழைத்து, "போன் பூட்டு சாவி தொலைஞ்சிடுச்சி, வேற சாவி தரமுடியுமா" என்று கேட்டு, ஒரு மாற்றுச் சாவி வாங்கி அதை மறைவிடத்தில் ஒளித்து வைத்தபோது மேனகாவினுள் சொல்லத் தெரியாத குதூகலம் பொங்கி வழிந்தது.

**"கைலாசம் இண்டர்நாஷனல்..."**

செகரட்டரியின் குரல் மென்மையாய் ஒலித்தது.

ரிஸீவரைப் பிடித்திருந்த மேனகாவின் கையில் வியர்வை ஊறியது.

குரல் எழும்ப மறுத்தது.

"ஹலோ?" அந்தப் பெண் பொறுமையுடன் மறுபடி பேசினாள்.

"மிஸ்டர் ராம்கிட்ட நா பேச முடியுமா?"

"யார் பேசறீங்க?"

யார் என்று சொல்வாள் மேனகா?

பத்துப் பதினைந்து நாட்களாய் நெஞ்சில் திரண்டுவிட்ட ஆத்திரத்தில் எப்படியாவது ராமுடன் பேசிவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்த துடிப்பில், டெலிபோன் டைரக்டரியைப்



புரட்டி அதில் பல ராம்களைக் கண்டு, எந்த ராம் என்று புரியாமல் விழித்து, பின் சட்டென்று டி.வி. பில் ஞாபகம் வர அதைத் தேடி எடுத்தாள்.

டி.வி. கொண்டு வந்து வைத்தவனிடம், "நாளைக்கு கம்பெனியிலிருந்து செக் வந்துடும்" என்று லாவண்யா சொன்னாளே!

இரண்டு நாளில் தபாலில் ரசீது வந்து சேர்ந்ததே, அது எங்கே?

தேடி எடுத்தாள்.

மிஸஸ் லாவண்யா ராம் பேரில் கொடுத்த டி.விக்கு கைலாசம் இண்டர்நாஷனலிலிருந்து வந்த செக்கைப் பெற்றுக்கொண்ட ரசீது.

கைலாசம் இண்டர்நேஷனலா!

டைரக்டரியில் பார்த்தாள் மேனகா.

கமாண்டர் இன் சீஃப் சாலையில் இருந்தது. மானேஜிங் டைரக்டரின் தனிப்பட்ட தொலைபேசி எண்ணைக் குறித்துக் கொண்டாள்.

அப்புறம் ரொம்ப யோசித்துவிட்டு, ரொம்ப தயங்கிவிட்டு, ஆயா பால் வாங்கப்போன சமயம், மதியம் மூணரை மணிக்கு நம்பரைச் சுழற்றினாள்.

இது என்ன அசட்டுக் காரியம்?

ராம் ஊரில் இருக்கிறாரோ இல்லையோ?

என்னோடு பேசுவாரோ மாட்டாரோ?

யார் பேசுவது என்று சொல்வது?

நான் பேசியதை லாவண்யாவிடம் சொல்லிவிட்டால் என்ன நடக்கும்?

லாவண்யாவை எப்படி சமாளிப்பது?

தாமு ஸாருக்கு விஷயம் தெரிந்தால் என்ன நினைப்பார்?

சாக்கடையில் கிடந்தவளைத் தூக்கி மாடிவீட்டில் உட்கார வைத்ததும் தன் புத்தியைக் காட்டிவிட்டாளே, என்றா?

நினைக்கட்டும்... நன்றாய் நினைக்கட்டும்... யார் என்ன நினைத்தாலும் எனக்குக் கவலையில்லை. முதலில் இந்த ராமோடு பேச வேண்டும். முடிந்தால் அவரைப் பார்க்கவேண்டும். அவர் குழந்தையைத் தாங்கி வளர்க்கும் எனக்கு இந்த உரிமைகூட இல்லையென்றால் எப்படி?

வேறு யாரைப் பற்றியும் எனக்கு அக்கறையில்லை.

இரண்டு முறை டயல் செய்து மறுபக்கம் செகரட்டரியின் குரல் கேட்டதும் பயத்தில் ரிஸீவரை மேனகா வைத்துவிட்டாள்.

மூன்றாவது தடவை 'சீ— எதுக்காக நான் பயப்படணும்?' என்று தன்னைத்தானே உலுக்கிக்கொண்டு டயல் செய்தாள்.

"யார் பேசறீங்கனு சொல்லுங்க, ப்ளீஸ்!"

"அவருக்குத் தெரிஞ்சவ... அவரோடுதான் பேசணும்..."

ஒரு கணம் செக்ரட்டரி யோசிக்கிற மாதிரி பட்டது. பிறகு "ஜஸ்ட் எ மினிட்" என்றாள்.

அரை நிமிஷ இடைவெளிக்குப் பின் 'ஸ்பீக் ஆன் ப்ளீஸ்' என்று தொடர்பு கொடுத்தாள்.

"எஸ்— ராம் ஹியர்—"

அந்தக் குரல் அவளைக் குழைய வைத்தது— உடம்பில் கிளுகிளுப்பை உண்டாக்கியது. இந்தக் குரலுக்குச் சொந்தக் காரனைப் பார்க்க வேண்டும், அவசியம் பார்க்க வேண்டும் என்று தீர்மானிக்கச் செய்தது.

"நா மேனகா பேசறேன்..." என்றாள் இனிய குரலில்.

"எந்த மேனகா?"

மேனகாவுக்குச் சட்டென்று கோபம் எழுந்தது.

என் பெயரைக்கூடவா இவரிடம் சொல்லவில்லை?

இப்போது எப்படி அறிமுகம் செய்துகொள்ள வேண்டும்!

"நாம ஒருத்தரை ஒருத்தர் பாத்ததில்லை, ஆனா நமக்குள்ளே அழுத்தமான சம்பந்தம் இருக்கு..."

"ஹலோ... யார் பேசறது? எனக்கு ஒண்ணும் புரியலை..."

"6-6-1978னு தேதியைச் சொன்னா உங்களுக்கு ஏதாவது புரியுமா?"

"வாட்?"

"நா இப்போ மூணு மாசம் கர்ப்பம்னு சொன்னா, ஏதாவது புரியுமா?"

"......."

ராமுக்குப் புரிந்துவிட்டது. அதனால்தான் அவன் மௌனமாய் இருக்கிறான் என்பதை மேனகாவால் உணர முடிந்தது.

குரலை இன்னும் தழையவிட்டாள். சின்னக் கிசுகிசுப்பாய், இனிமையுடன் அது போனில் பாய்ந்தது.



"என்னமோ தெரியலை... மிஸ்டர் ராம்... பத்து நாளா உங்களைப் பத்தின நினைப்பு எனக்கு ரொம்ப அதிகமா இருக்கு— உங்கக் குரலையாவது கேக்கணும்போல ஒரு துடிப்பு— அதுதான் பண்ணினேன்... உங்களைத் தொந்தரவு பண்ணியிருந்தா மன்னிச்சிடுங்க..."

"......."

"என்கூட உங்களுக்குப் பேசப் பிடிக்கலைன்னா, ஐம் ஸாரி... கர்ப்பமா இருக்கும்போது மனசுல உண்டாகும் ஆசைகளைப் பூர்த்தி செய்யலேன்னா குழந்தைக்கு அது நல்லதில்லைன்னு பெரியவங்க சொல்லுவாங்க... அதுதான் பேசிட்டேன். வீட்டுக்கு போன் பண்ணி அனாவசியமா உங்க மனைவியத் தொந்தரவு பண்ண வேண்டாம்னுட்டு, ஆபீஸுக்குப் பண்ணேன். என்னை மன்னிச்சிடுங்க... ப்ளீஸ்"

அந்தக் குரல் தழுதழுப்பு, அந்த இனிமை...

"......."

"ஒண்ணும் பேசமாட்டீங்களா? உங்கக் குரலைக் கேக்கக் கூடவா எனக்குத் தகுதி இல்லே...?"

விசும்புகிறாளா என்ன?

"அப்படியெல்லாம் இல்லே, நீங்க போன் பண்ணினது ரொம்ப ஆச்சர்யமா இருந்தது. அதனாலேதான் கொஞ்சம் திகைச்சிப் போயிட்டேன்..."

சின்னதாய் சிரித்தாள் மேனகா.

"சரி— நா வெச்சிடறேன்— இதுக்கு மேலே உங்களை ஆபீஸ்லே தொந்தரவு பண்ணக் கூடாது. ஒரு உதவி கேக்கட்டுமாங்க? அதுகூட எனக்காக இல்லை, குழந்தையோட நல்லதுக்காகத்தான்... என்னிக்காவது, திரும்ப எப்பவாவது, எனக்கு உங்ககிட்டே பேசணும்போலத் தோணிச்சின்னா, போன் பண்ணலாமா? ரெண்டு நிமிஷம் பேசலாமா? ப்ளீஸ்..."

'நோ— பண்ணாதே— என் நிம்மதியைக் கெடுக்காதே' என்று மனசில் தோன்றியதை வெளியில் சொல்ல இயலாத ராம், "ஆ? அதுக்கென்ன... பண்ணுங்களேன்..." என்றான்.

"இன்னொரு விஷயம்...மனசிலே குறை இருந்தா அது குழந்தை வளர்ச்சியைப் பாதிக்கும்னு பயந்துதான் உங்களுக்கு போன் பண்ணினேன். இதைப்பத்தி வேற யார்கிட்டேயும் சொல்லி அவங்க

மனசக் குழப்ப வேண்டாம்னே எனக்குத் தோணுது. அப்பறம் உங்க இஷ்டம்— உங்களோட ரெண்டு வார்த்தை பேசினது ரொம்ப தெம்பா இருக்கு. தாங்க்யூ மிஸ்டர் ராம்— தாங்க்யூ ஸோமச்... பை தென்..."

பதிலுக்குக் காத்திராமல் மேனகா போன் தொடர்பைத் துண்டித்துவிட்ட பிறகு ரொம்ப நேரத்துக்கு அவளைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தான் ராம்.

இப்படி திடீரென்று இவள் தன்னோடு பேச ஆசைப்படுவாள் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

நல்ல குரல்... இனிமையான குரல்... சின்னப்பெண் குரல் மாதிரி இருந்தது. என்ன வயசிருக்கும்? இருபது, இருபத்திரண்டு?

குழந்தையின் வளர்ச்சியில் நிஜமாகவே அக்கறை கொண்டவளாய் இருப்பாள் போலிருக்கிறதே! பரவாயில்லை, லாவண்யா சரியான பெண்ணாகத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாள்.

படித்தவளா? நன்றாக இங்கிலீஷ் பேசுகிறாளே!

ஆமாம்— வீட்டுக்கு போன் செய்யாமல் இங்கு ஏன் செய்தாள்? நம்பர் எப்படி கிடைத்தது? யாருக்கும் இது தெரிய வேண்டாம் என்று சொன்னாளே, லாவண்யாவைத்தான் சொன்னாளா?

லாவண்யாவிடம் எப்படிச் சொல்லாமல் இருப்பது? அதை லவி எந்த மாதிரி எடுத்துக்கொள்வாள்?

அந்தப் பெண்ணின் பேர் என்ன? எஸ், மேனகா, அவளைக் கோபிப்பாளோ?

ஆமாம், சொல்லாமல் இருந்தால் என்ன தவறு? தேவையில்லாமல் லவியிடம் சொல்லுவானேன்! மேனகா சொன்ன மாதிரி அனாவசியமாய் அவள் மனசை ஏன் குழப்ப வேண்டும்?

நீண்ட நேரம் யோசித்தபின், இப்போதைக்கு இதை மறந்து விடலாம்; லவியிடம் இதுபற்றிப் பேசவேண்டாம், பின்னால் அவசியம் ஏற்பட்டால் பார்த்துக்கொள்ளலாம் என்று ராம் தீர்மானித்தான்.

ஆனால் அதன் பிறகு ஆபீஸில் போன் அடித்தாலும், வீட்டில் மணி அடித்து மொட்டையாய் லவி யாருடனாவது பேசினாலும், 'இது அவளா? அந்த மேனகாவா?' என்று ஒரு நிமிஷம் நினைப்பு எழவே செய்தது.



சரியாய் நான்காம் நாள் மதியம் அதே மூணரை மணிக்கு மேனகா அவனை மீண்டும் அழைத்தாள்.

"ஹலோ..."

"நான்தான்... தெரியறதா"— என்றாள் மேனகா.

தெரிகிறது என்ற தினுசில் பதில் சிரிப்புச் சிரித்தான் ராம்.

"வேலையாய் இருக்கீங்களா? ஐம் ஸாரி. முக்கியமாய் ஒரு விஷயம் சொல்லணும்னு தோணித்து. அதான்."

"என்ன?"— குரலில் கடுமையை வரவழைத்துக்கொண்டு பேசினான் ராம்.

இது தப்பு, லாவண்யாவுக்குத் தெரியாமல் இவளோடு பேசுவது தப்பு என்று நெஞ்சிற்குள் ஏதோ உறுத்த கொஞ்சம் கடுமையாகப் பேசினான்.

"உங்களுக்கு விருப்பம் இல்லேன்னா சொல்லலை— என்னமோ உங்ககிட்ட அதைப் பகிர்ந்துக்கணும்னு ஆசை— அதான்... ஐம் ஸாரி..."

ராமுக்குப் பாவமாய் இருந்தது. வருத்தப்படாதேம்மா— சொல்லு... என்று சொல்லவேண்டும்போல இருந்தது. அடக்கிக் கொண்டான்.

"கேக்கறீங்களா? சொல்லட்டுமா?"

"ம்..."

"வந்து... வந்து... இன்னிக்குத்தான், காலையிலே முதல் முறையா வயத்துல ஒரு அசைவு இருந்தது. அந்த நிமிஷம் அப்படியே உடம்பு சிலிர்த்துப்போச்சு... நமக்குள்ளே ஒரு உசிர் வளருதுங்கற உணர்வு... வாய்விட்டு அழணும்போல இருந்துதுங்க... யார்கிட்டேயாவது என் சந்தோஷத்தைப் பகிர்ந்துக்கணும்போல இருந்தது. முக்கியமா உங்ககிட்டே இதைச் சொல்லணும்போல இருந்தது... நா போன் பண்ணது தப்பாங்க?"

உணர்ச்சிமிக்க குரலில், பரவசத்தோடு மேனகா பேசியது, போன் மூலம் தன்னுள் ஊடுருவிப் பாய்ந்த மாதிரி ராமுக்குத் தோன்றியது.

ஓ! நோ— இது தப்பு... யார் இவள்? இவளோடு எனக்கு என்ன பேச்சு... நோ... நோ...

"நீங்க இப்படி அடிக்கடி போன் பண்ணறது தப்பு, மிஸ் மேனகா... அது உங்களுக்குப் புரியும்னு நினைக்கறேன்..."

ராமின் குரலில் கடுமை இல்லை; கஷ்டப்பட்டுப் பேசும் குரலாக அது இருந்தது.

"மத்தியானத்திலேருந்து காரணமில்லாம எனக்கு அழுகை அழுகையா வரதுங்க... யாருமே இல்லாத அனாதை மாதிரி மனசுக்குத் தோணுது... அதான் நீங்க கோவிச்சிக்கிட்டாலும் பரவாயில்லையின்னு போன் செஞ்சேன். ஐ'ம் ஸாரி... என்மேல கோவமா, மிஸ்டர் ராம்?"

குழந்தைக் குரலில் எதற்காக இவள் இப்படிக் கெஞ்சுகிறாள்? இந்தக் கெஞ்சலை மறுக்க மனசுக்குப் பலம் இல்லையே!

"நீங்க எதுக்காக அனாதை மாதிரி உணரணும்? உங்களை நன்னா லாவண்யா கவனிக்கறா இல்லையா? அப்பறம் என்ன?"

"லாவண்யா என்னை நல்லாத்தான் பாத்துக்கறாங்க... ஆனா, மிஸ்டர் ராம்— ஊருக்கு ஒதுக்குப்புறமா ஒரு வீட்டுலே, வயசான ஆயாவைத் தவிர பேச்சுத் துணைக்கு யாரும் இல்லாம, வெளிய வாசல்ல போகாம மாசக் கணக்கா நீங்க எப்பவாவது இருந்திருக்கீங்களா? அந்த வேதனை உங்களுக்குப் புரியுமா? யாரோ ஒருத்தர் குடும்பத்திலே விளக்கேத்தி வெக்கறதுக்காக அனாதை மாதிரி, தன்னந்தனியா நாளைக் கழிக்கறேனே, அந்தக் கஷ்டம் உங்களுக்குப் புரியுமா, மிஸ்டர் ராம்?"

மெள்ளப் பேசின மேனகா, விசிக்கத் தொடங்கினாள்.

அவள் பரிதாபம் ராமைச் சுட்டது.

பாவம்... ரொம்பப் பாவம்...

"அழாதீங்க, மிஸ் மேனகா... ப்ளீஸ்— ஐம் ஸாரி— உங்களை நா கேட்டது தப்புதான்... இனிமே உங்களுக்கு எப்ப என்கூடப் பேசணும்னாலும் தாராளமா போன் பண்ணலாம்... அழாதீங்க... ப்ளீஸ்..."

ஒரு நிமிஷத்தில் மேனகாவின் விசும்பல் நின்றது.

லேசாய் மூக்கை உறிஞ்சிக்கொண்டாள்.

"நிஜமாவா, மிஸ்டர் ராம்?"

"நிஜம்மாத்தான். அப்பறம் இனிமே இந்த நம்பர் டயல் பண்ண வேண்டாம், என் டைரக்ட் லைன் நம்பர் தரேன், குறிச்சுக்கோங்க..."

"தேங்க்யூ ஸோ மச்—" சிரிப்போடு பேசி வைத்தாள் மேனகா.

ஒருநிமிஷம் அழுகை. மறுநிமிஷம் சின்னக் குழந்தையின் மலர்ச்சி. இவள் விநோதமான பெண்ணாய் இருக்கிறாளே!



இரண்டு நாள் இடைவெளிக்குப் பிறகு மேனகா அதே மூணரை மணிக்கு ராமின் நேரடி போன் நம்பரை டயல் செய்தாள்.

"ஹலோ... குட் ஆஃப்டர்னூன்..."

"குட் ஆஃப்டர்னூன்."

"ரொம்ப பிஸியா?"

"இல்லே, சொல்லுங்க—"

"முதல்லே இந்த நீங்க, வாங்கவை விட்டால் சொல்றேன்."

ராமுக்குச் சிரிப்பு எழுந்தது.

சின்னக் குழந்தைதான் பேச்சில்... பிடிவாதத்தில்...

"ஆல்ரைட் சொல்லு—"

"ஒரு புது சேதி சொல்லட்டுமா?"

"என்ன?"

"நீங்க மிஸ்டர் தாமு எடுத்த இண்டியா டுடே செய்திப்படம் பாத்திருக்கீங்களா?"

"ம்..."

"அந்தப் படம் நல்லா நினைவிலே இருக்கா?"

"ம்..."

"அப்போ சரி— அந்தப் படத்திலே சிலைகளைக் காட்டிட்டு கூடவே உயிர் உள்ள சிலையின் நாட்டியத்தைக் காட்டறாரே, ஞாபகமிருக்கா?"

"ம்..."

"மிஸ்டர் ராம்— அது நான்தான்— அந்த நாட்டியம் ஆடற பெண் நான்தான்—" ரகசியம் பேசுவதுபோல மேனகா கிசுகிசுத்ததும் ராம் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான்.

அவளா? அந்த அழகான பெண்ணா? இவளா? காட்! மை காட்!

"மிஸ்டர் ராம்— எனக்கு உங்களைப் பாக்கணும்போல இருக்கு... சத்தியமாச் சொல்றேன், ரொம்ப ஆசையா இருக்கு... நாம் எந்தக் கற்பனையை மனசுல நினைச்சிருக்கோமோ அதே தினுசுல குழந்தை வயத்துல உருவாகும்னு சொல்வாங்க... உங்களைப் பாத்திட்டு உங்க நினைப்போடு நா இருந்தா, குழந்தை உங்க சாயலாவே பிறக்கலாம் இல்லையா? எனக்கு உங்களைப்

பாக்கணும்— ஒரே ஒரு தரம்… எனக்காக இல்லை… உங்க குழந்தைக்காக; வரீங்களா? ப்ளீஸ்?"

"……"

"உங்க குழப்பம் எனக்குப் புரியுது, மிஸ்டர் ராம்… அஞ்சு நிமிஷம் இருந்திட்டுப் போயிடலாம்… யாருக்கும் இது தெரியாம நா பாத்துக்கறேன்… ப்ளீஸ்…"

"……"

"என் போன் நம்பரைச் சொல்றேன்— உங்களுக்கு சம்மதம்னா போன் பண்ணுங்க… பகல் பத்திலேர்ந்து ரெண்டு மணிவரை போன் செய்யாதீங்க… மத்தபடி எப்ப வேணா, எத்தனை மணிக்கு வேணா செய்யுங்க… ப்ளீஸ், என்னை ஏமாத்தாதீங்க…"

மேனகா, தன் நம்பரைச் சொல்லிவிட்டுத் தொடர்பைத் துண்டித்துவிட்டாள்.

மேற்கொண்டு முழுசாய் ஒரு வாரம் ஓடியது.

மேனகாவிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை.

பெங்களூருக்கும், கொச்சினுக்கும் நாலு நாட்கள் போய்வந்த பிறகும் அவளிடமிருந்து ஒரு சேதியும் இல்லாததால் இதுகுறித்து லாவண்யாவிடமும் ஏதும் பேசமுடியாமல் தவித்த ராம், தன் அவஸ்தை தாளமுடியாதவனாய் அன்று மதியம் அதே மூணரை மணிக்கு மேனகாவுக்கு முதல் முறையாய் போன் செய்தான்.

மேனகா போனை எடுத்தாள்.

"ஹலோ?"

"நா— ராம்—"

"……"

"எப்படியிருக்கே?"

"……"

"ஏன் அப்பறம் போனே பண்ணலை?"

"……"

"கோபமா?"

"நா யாருங்க உங்கமேலே கோபப்படறதுக்கும், ஆசைப் படறதுக்கும்?"

விசனமாய் பேசுகிறாளா, விரக்தியா?

ராமுக்கு மனசு கேட்கவில்லை.



"உன் விலாசம் சொல்லாட்டா, நா உன்னை எப்படி வந்து பாக்க முடியும், மேனகா?"

நிஜமாகவா? இத்தனை சுருக்கவா ராம் என் வழிக்கு வந்து விட்டார்?

ஆரம்பத்தில் லாவண்யா முகத்தில் கரிபூசவேண்டும் என்ற உந்துதல் மட்டுமே காரணமாய் ராமோடு மேனகா தொடர்பு கொண்டாலும், அந்தக் குரலைக் கேட்கக் கேட்க, இவர் பிள்ளையை நான் சுமக்கிறேன் என்ற உணர்வு அதிகரிக்க அதிகரிக்க, தினம் ராமிடம் பேசவேண்டும், இவரைப் பார்க்க வேண்டும், இவரோடு பழகவேண்டும் என்ற தாபம் நெஞ்சில் மண்டத் தொடங்கியது. 'தான் செய்வது தவறு,' 'ஒப்பந்தத்தை மீறுகிறோம்' என்ற குற்றஉணர்வுகளை ஒதுக்கிவிட்டுத் தன் விருப்பத்தை எப்படி நிறைவேற்றுவது என்று ஏங்கியவளுக்கு ராம் தன்னைக் காண வருவதாகச் சொன்னது அளவில்லாத இன்பத்தைக் கொடுக்க, சந்தோஷத்தில் குதிக்கும் உள்ளத்தோடு விலாசம் சொன்னாள். எப்போது வரவேண்டும் என்றும் சொன்னாள்.

அன்றிரவு ஆபீஸ் விஷயமாய் வெளியில் போகவேண்டி இருக்கிறது என்று லாவண்யாவிடம் சொல்லிவிட்டு தன் டொயோடோ காரில் கலாக்ஷேத்ரா காலனிக்கு ராம் வருவதற்கு முன் ஆயாவைத் தயார்செய்துவிட்டாள் மேனகா.

"கர்ப்பமாய் இருக்கேன், ஆயா— அவரைப் பாக்கணும்போல இருக்கு— அவர் வரேன்னு சொல்லிட்டார். நீ இதப்பத்தி யார் கிட்டயும் பேசாதே, ஆயா… என்னைப் பெத்த தாய் மாதிரி உன்னைக் கெஞ்சறேன்! வரப்போறது யாரு? என் வயித்திலே வளர்ற குழந்தைக்குத் தகப்பன்— அவரை எப்படி வராதேன்னு சொல்றது? தயவு பண்ணி யார்கிட்டயும் சொல்லாதே, ஆயா…" கெஞ்சினாள், கொஞ்சினாள். ஆயாவிடம் சத்தியம் வாங்கிக் கொண்டாள்.

இரவு ஒன்பதே காலுக்கு ராம் வந்தான்.

அழகு தேவதை மாதிரி கொடி உடலும், மின்னும் தோலும், சிரிக்கும் அகன்ற கண்களும், தலை நிறைய மல்லிகையும், தழையத் தழைய பிரிண்டட் பட்டுமாய் நின்ற மேனகாவைப் பார்த்தான்; பிரமித்தான். தாய்மைப் பூரிப்பு லேசாய் உடம்பில் பளபளக்கக் கனிவுடன், அன்புடன், காதலுடன், வெட்கத்துடன் சிரித்து

வரவேற்கும் மேனகாவிடம் அந்தக் கணத்தில் தன்னை இழக்கா விட்டாலும், கொஞ்சம் கொஞ்சமாய், அப்புறம் அவளைத் தொடர்ந்து சந்தித்த நாட்களில், 'இவள் என் குழந்தைக்குத் தாய்' என்பது மனசில் விஸ்வரூபம் எடுக்க, அவளோடு மிக அழுத்த மாகக் கலந்து, கரைந்து உருகி, இறுகிப்போனான் ராம்.

## 4

**நா**ன்கு ஆட்கள் வேலை பண்ணிக்கொண்டிருந்ததைக் கிட்டத்தில் நின்று லாவண்யா கவனித்துக்கொண்டிருந்தாள்.

சுவர்களில் வெளிர் இளஞ்சிவப்பு நிறத்தில் சின்னச்சின்ன பூப்போட்ட அழகான வால்பேப்பர். அதே நிறத்தில் தரையில் கம்பளம், இதம் கொடுக்க ஏ.ஸி.; மிக்கி மௌஸ், டனால்ட் டக் போன்ற படங்களைத் தாங்கிய கட்டில்... ஒரு மூலையில் சிங்கப் பூரிலிருந்து வரவழைத்திருந்த ஆள் உயர கரடி பொம்மை. இரவில் அதன் கண்களின் வழியாக விடிவிளக்கு எரிந்து அறையில் பிரகாசத்தைத் தரும். விட்டத்திலிருந்து கட்டிலுக்கு நேராய் தொங்கும் ப்ளாஸ்டிக் ரங்கராட்டினம். குழந்தையின் துணிகளை வைக்க சின்ன அலமாரி. அறையை ஒட்டி இருந்த குளியலறை யிலும் இதற்குப் பொருத்தமாய் அலங்காரம், ஒரு முயல்குட்டி ரூபத்தில் பாட், குட்டிக் குட்டி மிருகங்கள் படம் போட்ட டவல்கள்... குளியல் தொட்டியில் ரப்பர் வாத்து... இப்படி.

மனசுக்குள் குழந்தையின் நர்ஸரி எப்படியிருக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டுவிட்டதால் லவி ஆட்களை வைத்துத் திட்டப்படி வேலைவாங்கிக்கொண்டிருந்தாள்.

இன்னும் ஒரு மாசம்தானே? அதற்குள் அறையைத் தயாராக்கி விட்டால் ஒரு பெரிய காரியம் முடிந்தது.

இந்த அறை அலங்காரங்களை ராமும் கூட இருந்து ரசித்துப் பாராட்டினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று லவி நினைத் தாள். இது நடக்கும் காரியமில்லை என்று உடனடியாய் அந்த ஆசையை ஒதுக்கித் தள்ளினவளுக்கு— கொஞ்ச நாட்களாய், ஏன் சில மாசங்களாய் என்றுகூடச் சொல்லலாம், வித்தியாசமாய் ராம் இருக்கிறது ஞாபகத்துக்கு வந்தது.

ஏன்? என்ன விஷயம்? வியாபாரத்தில் ஏதாவது கவலையா? ஏற்றுமதியில் கோளாறா?



ராம் யோசனையில் ஆழ்ந்த மாதிரி இருப்பதாக உணர்ந்த முதல் சில நாட்களிலேயே லாவண்யா அவனைக் கேட்டாள்.

"ஏதாவது பிரச்சினையா, ராம்?"

"ம்? ஒண்ணுமில்லை— விடு..."

யோசித்துப் பார்த்தபோது இந்தக் குழந்தை விஷயமாய் அவரிடம் எதுவுமே பேசாமல் விலகி இருப்பதனால்தான் தனக்கு இப்படித் தோன்றுகிறதோ, தவறு தன்மேல்தானோ என்றுகூட லாவண்யாவுக்குத் தோன்றியது.

என்னவானாலும் சரி... ஆறு மாசங்களைக் கடத்திவிட்டேன். இன்னும் நாலு மாசங்கள். நிமிஷமாய் ஓடிவிடாதா? அப்புறம் குழந்தை வந்துவிட்டால் வாழ்க்கை சந்தோஷம் நிறைந்ததாகி விடாதா?

குழந்தை—

ராமின் குழந்தை—

ஓ! எங்கள் குழந்தை—

லாவண்யாவின் நினைப்புகள் இனித்தன.

இந்தத் தித்திப்பான கற்பனையில் சதா அமிழ்ந்திருக்கத் தொடங்கியதால் ராமிடம் உண்டான மாற்றங்களை அவள் பெரிசாக நினைக்கவில்லை.

ராம் அவளிடம் பழைய கலகலப்புடன் இல்லாததை, இரவுகள் பழைய இனிமையுடன் நெருக்கத்துடன் இல்லாததை, லாவண்யா பொருட்படுத்தவில்லைதான்.

பாவம் ராம்... மனைவியாகிய என்னுள் அவர் குழந்தை வளராமல் யாரோ ஒருத்தியினுள் வளர்வதை நினைத்தால் அவருக்குக் கஷ்டமாக இருக்காதா? அதுவே மனசை உறுத்தாதா? அதன் காரணமாய்த்தான் கொஞ்சம் வித்தியாசமாய் இருக்கிறார். குழந்தையைப் பார்த்த பிறகு, கொஞ்ச நாள் கழித்து சரியாகி விடுவார்... என்று தன்னைத்தானே சமாதானம் செய்துகொண்டு விட்டாள்.

ஆனால் இந்த மேனகா மீது அவளுக்குக் கோபம்தான். எத்தனை அனுசரணையாய், எத்தனை உயர்வாய் வைத்துக் கொண்டு என்ன? வரவர பேச்சுக்குப் பேச்சு வாயாடுகிறாள். தான் நினைத்ததைச் சாதிக்கவேண்டும் என்கிறாள். சாதுவாய்

இருந்தவளுக்கு எங்கேயிருந்து இத்தனை தைரியமும், துணிச்சலும் வந்தன?

அதுவும் நாலு மாசங்களில் திடும்திடும்மென்று இரண்டு முறை ஊருக்குப் போகவேண்டும் என்று அழுது அழிச்சாட்டியம் செய்து போனாளே? அதைத்தான் லவியால் தாங்கிக்கொள்ளவே இயலவில்லை.

நாலு மாசங்களுக்குமுன் ஒருநாள் தந்தி ஒன்றை லாவண்யா விடம் நீட்டி, 'அம்மாவுக்கு உடம்பு நல்லா இல்லையாம், தந்தி வந்திருக்கு' என்று அழுதபோது லவி அதிர்ச்சியால் இரண்டு நிமிஷங்களுக்குப் பேசவில்லை.

"தந்தியா? உனக்கா? இந்த விலாசத்துக்கா? நீ இங்கே இருக்கறது யாருக்குத் தெரியும்?"

"பழைய விலாசத்தை விட்டு வரத்துக்கு முன்னாலே, எனக்குக் கலியாணம் ஆகப்போகுது; இனிமே என்னைப்பத்திக் கவலைப் படாதீங்கன்னு எழுதி இந்த விலாசத்தை எங்க ஊருக்குத் தெரிவிச் சிருந்தேன்."

"எதுக்காக விலாசம் எழுதின? நா கண்டிப்பா நீ இங்கே இருக்கறது யாருக்கும் தெரியக்கூடாதுன்னு சொல்லியிருந்தேன், இல்லையா?"

"அது எப்படிங்க... ஏதோ அவசரம், ஆபத்துன்னா நா இருக்கற இடம் தெரியாட்டா எப்படி? இப்பத் தந்தி வந்ததுதான் முதல், இதுக்கு முன்னாலே ஒண்ணும் வந்ததில்லே— ஆயாவை வேணா கேளுங்க..."

வேலிக்கு ஓணான் சாட்சி என்று ஆயாவும் தலையாட்டினாள்.

தந்தியைப் பார்த்தாள் லாவண்யா—

கல்கத்தாவிலிருந்து தந்தி?

"அப்போ உன் சொந்தக்காரங்க கல்கத்தாவிலே இருக் காங்களா? இந்தத் தந்தி அடிச்சிருக்கற சாரதா யாரு? என்ன உறவு?"

"அது எங்க அக்கா... என் உறவுக்காரங்க அத்தனை பேரும் கல்கத்தாவிலே இல்லே. அம்மா, அப்பா மட்டும் கல்கத்தாவிலே இருக்காங்க— அக்கா டெல்லிலேந்து வந்திருக்காங்க போலிருக்கு— அப்பாவுக்கு என்மேலே கோபம் இன்னும் குறையலைன்னு தோணுது— அம்மா, ஐயோ அம்மா."



மூக்கைச் சிந்தி பெரிசாய் அழுதாள் மேனகா.

லாவண்யாவுக்குச் சங்கடமாகிவிட்டது. அனுப்பவும் இஷ்டம் இல்லை. அனுப்பாதிருக்கவும் மனசு கேட்கவில்லை.

பெற்ற தாயார்— நாளைக்கு ஏதாவது ஆகிவிட்டால் ஆயுசு பரியந்தம் கடைசி நேரத்தில் தாயும் மகளும் சந்திப்பதை நாம்தானே தடுத்தோம் என்று உறுத்துமே!

இந்த தாமு இருந்தால் கவலையில்லை— ஆனால் அவனும் சமயத்தில் பர்மா, ரங்கூன் என்று போய்விட்டான். இந்திய அரசாங்கத்துக்காக சுபாஷ்சந்திரபோஸ் பற்றி ஒரு செய்திப்படம் தயாரிக்க வேண்டுமாம்... மூன்று மாசத்துக்கு மேலேயே ஆகும் ஊர் திரும்ப.

மறுநாள் விமானத்தில் மேனகாவைக் கல்கத்தாவுக்கு அனுப்பி வைத்தாள் லாவண்யா, தலை போனாலும் ஒரு வாரத்தில் வந்து விட வேண்டும் என்ற நிபந்தனையோடு.

'உன் விலாசத்தைக் கொடுத்துட்டுப் போ'— என்று லாவண்யா கேட்டதற்கு தபால் பெட்டி எண் ஒன்றை மேனகா நீட்டினாள்.

"ஒழுங்கான விலாசம் இல்லே?"

"ம்ஹூம்— கல்கத்தாவிலே இது சகஜம்."

மேனகா பொய் சொல்லுகிறாளா?

விலாசம் தர இஷ்டமில்லாமல் பொய் சொல்லுகிறாளா?

"போன் இருக்கா?"

"ம்ஹூம்— இல்லே— கவலைப்படாதீங்க. ஆறு மாசமா உங்க பிள்ளையை வயத்துலே சுமந்துட்டு இப்ப நா பாதிலே ஓடிட மாட்டேன். நா செஞ்ச சத்தியத்தக் காப்பாத்துவேன். போய்ச் சேர்ந்து தந்தி அடிக்கறேன். லெட்டர் போடறேன். முடிஞ்சா போன் பண்ணறேன். அப்பறம் என்ன?"

கல்கத்தாவுக்கு மேனகா போவதற்கு முதல் நாளே ராம், அரசு வெளியுறவுத்துறையில் வேலை இருக்கிறது என்று டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றவன் மறுநாள் லவிக்கு போன் செய்து, "நேபாளுக்கு ஒரு அவசர வேலையாய் போகவேண்டியிருக்கு; நாலு நாள் ஆகலாம்" என்று தெரிவித்ததுதான் லாவண்யாவுக்குத் தெரியுமே தவிர அவன் அன்றைய விமானத்திலேயே கல்கத்தாவை அடைந்ததையும், சென்னையிலிருந்து வந்த மேனகாவுடன் உடனே டார்ஜிலிங்குக்குச் சென்றுவிட்டதையும் யார் சொல்லுவார்கள்?

நடுவில் ஒருநாள் ஆபீஸிலிருந்து செகரட்டரி போன் செய்து, "எம்டி என்றைக்கு வருகிறார் என்று தெரியுமா? டெல்லி ஆபீஸில் எம்டி கல்கத்தா போய்விட்டதாகச் சொல்லுகிறார்களே, அவரை எங்கே தொடர்புகொள்ளலாம்?" என்று கேட்டாள். "கல்கத்தாவா? இல்லையே– என்னிடம் நேபாள் போவதாகச் சொன்னாரே!" என்று லவி கூறியதும் "ஸாரி மேடம்– ஏதோ குழப்பம். நேபாள் போனாலும் போவேன் என்றுதான் எம்.டி. என்னிடம் சொல்லியிருந்தார். டெல்லி ஆபீஸில் தவறாகக் கூறுகிறார்கள் போலிருக்கிறது" என்று சொல்லி அவள் போனை வைத்த பிறகு லவியும் அதை மறந்துவிட்டாள்.

கல்கத்தாவை அடைந்ததும் அடித்த தந்திக்குப் பிறகு லெட்டர் ஒன்றும் எழுதாதது குறித்து மேனகா மேல்தான் லவிக்கு அசாத்திய கோபம்.

என்ன பண்ண முடியும் அவளால்?

தபால் பெட்டி எண்ணை வைத்துக்கொண்டு அத்தனாம் பெரிய கல்கத்தாவில் எங்கு தேடுவாள்?

எட்டாம் நாள் காலை விமானத்தில் சென்னைக்கு வந்து, வீட்டை அடைந்ததும் சமர்த்துக் குழந்தையாய் போன் செய்தவளிடம் கோபத்துடன் லவி கத்த ஆரம்பிப்பதற்குள், 'அம்மா இறந்துட்டாங்க.. அதான் லெட்டர் எழுதக்கூட ஒழியலை' என்று அழுகைக் குரலில் பேசி மேனகா அவளை வாளாதிருக்கச் செய்துவிட்டாள்.

அப்புறம் அவளை லவி நேரில் பார்த்தபோது, 'உங்க வீட்டுலே என்ன சொன்னா? பிள்ளையாண்டு இருக்கறதைப்பத்தி ஏதாவது கேட்டாளா' என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல மேனகா மறுத்துவிட்டாள்.

"உங்களைப் பத்தி என்கிட்டே ஏதும் சொல்ல மாட்டேங்கறீங்க. அப்பறம் என் வீட்டு சமாச்சாரம் மட்டும் உங்களுக்கு எதுக்கு?"

இந்த பதில் லவிக்கு ரொம்ப ஆத்திரத்தைக் கொடுத்தது.

இவள் துளிர்த்துப் போய்விட்டாள்– வரவர வாயை அதிகம் காட்டுகிறாள்–

அந்தக் கணம் குமைவதைத் தவிர வேறு ஏதும் லாவண்யாவால் செய்ய இயலவில்லை.

மேற்கொண்டு ஒரு மாசம் நிம்மதியாய்க் கழிந்தது.

ஏழாம் மாசம் நடக்கும்போது மறுபடியும் தந்தி வந்தது.



'அம்மா காரியங்கள் நாலாம் தேதி வருகின்றன. உடனே வந்து, நாலு நாட்கள் இருந்துவிட்டுப் போ.

—சாரதா'

இந்த முறை டெல்லிக்குப் போகவேண்டும் என்றாள் மேனகா.

"அம்மா செத்த ரெண்டாம் மாசம் என்ன காரியம்? அப்பவே செய்திருக்க மாட்டேளா?"

"எங்க ஜாதியில நாப்பத்தஞ்சாம் நாள் செய்யறது வழக்கம்."

"என்ன ஜாதி உங்களுது?"

"அந்த விவரமெல்லாம் உங்களுக்கு எதுக்குங்க? நா இதுக்கு கண்டிப்பா போயாகணும். பெத்த தாய் காரியம், போகாட்டா எப்படி?"

எரிச்சல் மண்டிக்கொண்டு எழ, வேறு வழியில்லாமல் மூன்றாம் தேதி மேனகா டெல்லிக்குப் போக லவி விமானத்தில் ஏற்பாடு செய்தாள்.

அக்காவின் விலாசம் கேட்டபோது அது எனக்குத் தெரியாது என்று அவள் அறிவித்துவிட்டாள்.

நிச்சயம் ஏதோ கோளாறுதான்—இவள் அடத்தையும் திமிரான பேச்சையும் பார்க்கும்போது ஏதோ கோளாறு என்று புரிகிறது. ஆனால் எங்கு? அது புரியவில்லையே?

சரி... நாலு நாட்கள்தானே– போய் வரட்டும். அப்புறம் எட்டாம் மாசம் பிறந்துவிட்டால் எங்கும் அலையக் கூடாது என்று டாக்டரைக் கொண்டு சொல்லிவிடலாம்...

வெளிநாட்டிலிருந்து வியாபார ஒப்பந்தத்திற்காகப் பேச்சு வார்த்தை நடத்த வந்திருக்கிறவர்களைச் சந்திக்கவென்று ராம் முதலில் பம்பாய் அப்புறம் டெல்லிக்கு போவதாகச் சொல்லிவிட்டுப் போனதை ஏனோ கோணல் மனசோடு பார்க்க லவிக்குத் தோன்றவே இல்லை.

இதனால், சென்னையில் திருட்டுத்தனமாய்ப் பயந்துபயந்து சந்திக்கவேண்டி இருக்கிறது; புத்திசாலித்தனமாய் திட்டம் போட்டு போன மாசம் டார்ஜிலிங்கில் சந்தித்த தினுசில் இந்த மாசமும் சந்தித்து ஒரு வாரமாவது சந்தோஷமாக இருந்தாலென்ன என்ற நினைப்பில் ராமும் மேனகாவும் வெகு ஜாக்கிரதையாக போன முறை போலவே பொய்த் தந்தி அடித்துவிட்டு டெல்லி வழியாக முஸௌரிக்குச் சென்று ஆனந்தமாய் இருந்ததைப்பற்றி லாவண்யா எப்படி அறிய இயலும்?

நடப்பது எதுவுமே புரியாத பேதையாக, இன்னும் இரண்டு மாசங்களில் தன் கையில் தவழப்போகும் குழந்தைக்கு நர்ஸரி தயாரித்து, குழந்தை வளர்ப்புப் புத்தகங்களைப் படித்துத் தன் நினைவுகளை முழுசாக முகம் தெரியாத அந்தக் குழந்தைக்காக மட்டுமே லவி ஒதுக்கிய அந்த நாட்களில் யாருமே கற்பனை பண்ணிப் பார்க்கக்கூடத் தயங்கும் தினுசில் ராமும், மேனகாவும், உடம்பாலும், உள்ளத்தாலும் ஐக்கியமாகித்தான் போனார்கள்.

அன்றைக்கு மேனகாவைப் பரிசோதனை செய்த டாக்டர் சுசீலா,

'இன்னும் பதினைந்து நாட்களில் குழந்தை பிறந்துவிடும், எல்லாம் சரியாய் இருக்கிறது' என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்துவிட்டு, பின் என்னவோ யோசனை செய்தவராய் மதியம் ஓழிந்த சமயத்தில் லாவண்யாவை போனில் அழைத்தார்.

"என்ன டாக்டர், ஏதாவது பிரச்சினையா?"

"இல்லே லவி— அதெல்லாம் ஒண்ணுமில்லே— மேனகா தெம்பா இருக்கா... பேபி ஈஸியா பிறந்திடும்... வந்து..."

"என்ன டாக்டர்?"

"மேனகாகூட யார் இருக்கறதா நீ சொன்னே, லவி? ஒரு ஆயாதானே?"

"எஸ் டாக்டர்..."

"வந்து... ஆம்பிள்ளைங்க யாரும் இல்லேன்னு நிச்சயமா தெரியுமா?"

என்ன இது? எதற்காக இந்தக் கேள்வி?

"பதட்டப்படாதே, லவி. பரிசோதனை பண்ணறப்போ ஆண் தொடர்பு இருக்கலாம்னு எனக்குப் படறது, அதான் கேட்டேன். சொல்லப் போனா ரெண்டு தடவையாவே எனக்கு இந்த சந்தேகம் தோணறது. நீ ஆயாவைத் தவிர வேறு யாரும் இல்லைனு சொன்னதால முதல்லே விட்டுட்டேன். நா நினைக்கறது தப்பாக்கூட இருக்கலாம். ஆனா மறுபடியும் சந்தேகமா இருக்கு, லவி... நீ இதுக்காகக் கவலைப்படாதே, என்ன? உன்கிட்ட சொல்ல வேண்டியது என் கடமை... சொன்னேன்; ஃபர்கெட் இட்..."

போனை வைத்த லாவண்யாவுக்கு உடம்பு கூசிப்போனது.

இது சாத்தியமா?

எப்படி?



அன்றைக்கு கலாக்ஷேத்ரா காலனிக்குப் போனபோது, ஆயாவை சாமான்கள் வாங்கி வரலாம் வா என்று அழைத்துக் கொண்டு சென்று ஒரு இடத்தில் வண்டியை நிறுத்திப் பேசினாள்.

"நா கேக்கறத்துக்கு நீ உண்மையைச் சொல்லணும், ஆயா— என்னைத் தவிர அந்த வீட்டுக்கு வேற யாராவது வரதுண்டா? முக்கியமா ஆம்பிளை யாராவது? யோசிச்சு சொல்லு, அவசரம் இல்லே..."

லாவண்யாவின் தீர்க்கமான பார்வையை எதிர்நோக்க முடியாமல் ஆயா தலையைக் குனிந்துகொண்டாள்.

"சொல்லு, ஆயா..."

ராமிடமிருந்து அவ்வப்போது நிறைய பணம் வாங்கிப் பழகி விட்ட காரணத்தால் ஆயா வாயைத் திறக்கவில்லை.

"பேசாம இருந்தா எப்படி, ஆயா?"

"என்னாத்தைச் சொல்றதும்மா— எதனாச்சும் இருந்தாத்தானே சொல்றதுக்கு? ஆரு வராங்க இங்கே...?"

ஆயா பொய் சொல்கிறாள்.

நிச்சயம்.

நிமிர்ந்து பார்க்கமாட்டேன் என்கிறாள். குரலில் நடுக்கம் இருக்கிறது.

யாரோ வருவது உண்மைதானா?

ஆண் துணையில்லாமல் ஒரு வருஷம்கூட அவளால் இருக்க முடியாதா?

அவன் தரும் பணத்துக்காக ஆயாவும் உள்கையாக இருக்கிறாளா?

ச்சே, என்ன மோசமான மனிதர்கள்!

ஏதும் பேசாமல் ஆயாவை வீட்டில் இறக்கிவிட்டு, உள்ளே போக மனசில்லாமல், மேனகாவைப் பார்க்கப் பிடிக்காமல் காரை விரட்டிக்கொண்டு லவி போனாள்.

உள்ளே நுழைந்த ஆயா தாங்கள் பேசியதை மேனகாவிடம் சொல்ல, அவள் அந்த நிமிஷமே போனில் ராமை அழைத்து, "விஷயம் வெளியாயிடும்போலத் தோணுது... நீங்கதான் இதுக்கு தைரியமா ஒரு முடிவு எடுக்கணும், ராம்" என்று விசும்பினாள்.

அடுத்த வாரத்தில் லாவண்யா மேனகாவைப் பார்க்க ஒரே ஒரு முறை மட்டும் சென்று 'உடம்பு சாதாரணமாய் இருக்கியா?'

என்று கேட்டுவிட்டு, 'இந்தா போன் சாவி. வலி எடுத்ததுன்னா எந்த நேரமானாலும் வீட்டுக்கு போன் பண்ணு' என்று சொல்லி வந்துவிட்டாள்.

ஆயிற்று இன்னும் ஒரு வாரமோ பத்து நாட்களோ—

இரண்டு வருஷங்களாய் மனசாலும், ஒரு வருஷமாய் உடம்பாலும் பட்ட அவஸ்தைக்கு முடிவு வந்துவிடப் போகிறது. நினைப்பே லவிக்கு நிம்மதியையும் சுகத்தையும் கொடுப்பதாக இருந்தது.

அன்று மாலை திடும்மென்று தாமு போன் பண்ணினான்— ஊரிலிருந்து மதியம் வந்துவிட்டானாம்.

"எப்படி இருக்கே, லவி? பாக்கி விஷயமெல்லாம் சரியாய் இருக்கா? பிரசவ நேரம் எப்போ?"

தாமுவின் குரலைக் கேட்டதும் மனசில் மண்டிக்கிடந்த ஆயாசம் திடீரென்று விலகிவிட்ட மாதிரி இருந்தது.

"எனக்கு உன்னை உடனே பாக்கணும், தாமு— உடனே... உடனே..."

"ஆல்ரைட்... அரை மணியிலே அங்கே வரேன்."

தாமு வந்தான். ராம் ஆபீஸில் இருந்ததால் கீழ்வராந்தாவில் இருவரும் உட்கார்ந்து பேசினர்.

நாலு மாச விவரத்தை லவி சொன்னாள். இரண்டு முறை மேனகாவுக்குத் தந்தி வந்து அவள் வெளியூருக்குப் போனதைச் சொன்னாள். வரவர எதிர்த்துப் பேசுவதைச் சொன்னாள். கடைசியாய் டாக்டர் சுசீலா கூறியதையும் ஆயாவின் மறுப்பையும் சொன்னாள்.

மெதுவாய் விசில் அடித்தான் தாமு— இவ்வளவு நடந்திருக்கிறதா என்கிற மாதிரி.

சில நிமிஷங்கள் ஒன்றுமே பேசாமல் இருந்தான்.

பிறகு, "மேனகாவை எந்தச் சூழ்நிலையிலிருந்து, எந்த வாழ்க்கையிலிருந்து பொறுக்கினோம்னு ஞாபகப்படுத்திண்டுட்டா, அவ இன்னிக்கு இப்படி நடந்துக்கறதுலே நமக்குக் கோபம் வராது, லவி. மேனகா வித்தியாசமா இருப்பான்னு நம்பினேன்... நோ— நானும் அந்தக் குட்டையில் ஊறின மட்டைதான்னு காமிச்சுட்டா! அதனால லவி, இதை நினைச்சுண்டு மனசைக் குழப்பிக்காதே— இன்னும் கொஞ்ச நாள்தான்... அப்பறம் இருபத்தையாயிரம் பணத்தைக் கொடுத்து அவளை அனுப்பிட்டு இதையெல்லாம்



ஒரு கனவா மறந்துடலாம்... அவ ஒரு ஆணோடு தொடர்பு வெச்சிருந்தா என்ன? ஆயா அவளுக்கு உள்கையா இருந்தா என்ன? அவ கர்ப்பம் ஆனபோது ஒழுங்கா இருந்தான்னு நமக்கு நிச்சயமா தெரியும். அதனால இத விட்டுடு— அவ்வளவுதான் நா சொல்வேன்—" என்றான்.

தாமுவின் பேச்சு லவிக்குப் புது தெம்பைத் தந்தது.

அதானே— இன்னும் ஒரு வாரம், அப்புறம் இந்த மேனகாவும், ஆயாவும் எக்கேடுகெட்டுப்போனால் எனக்கு என்ன? நான் ஏன் கவலைப்படவேண்டும்?

"பணம் ரெடியா வெச்சிருக்கியா, லவி? செக் வேண்டாம். காசாகவே தயார் பண்ணிடு..."

"பண்ணிட்டேன், தாமு. தயாரா இருக்கு. அதோடு அவளுக்காக வாங்கித் தந்திருக்கற பாத்திரம், துணி எல்லாம் அவளே எடுத்துண்டு போகட்டும். முதல் நாளிலிருந்தே தாய்ப்பால் கொடுக்க வேண்டாம், பாட்டில் பால்தான்னு டாக்டர் சொல்லிட்டார். குழந்தை பிறந்ததும் ராவா பகலா நா அவளோடு இருந்து ஒன்பதாம் நாள் வீட்டுக்குக் குழந்தையை அழைச்சிண்டு வந்துடலாம்னு இருக்கேன். டாக்டர் சரின்னு சொல்லியிருக்கார். எல்லாம் நினைச்சபடி நடக்குமா, தாமு? எனக்குக் காரணமில்லாம அடிக்கடி பயமா இருக்கு. சமயத்திலே நீயும் எங்கேயோ போயிட்டே, தாமு! ராம்கிட்ட இதுபத்திப் பேசினா தேவலை போல இருக்கு... கொஞ்ச நாளா அவரும் நானும் விலகிப் போயிட்ட மாதிரிகூட இருக்கு... சொல்லு தாமு, எல்லாம் சரியா நடக்குமா?"

லாவண்யா அழுதுவிடுவாள்போல இருந்தது.

அவள் கையை எடுத்து மெல்லத் தட்டினான் தாமு.

"லவி, என்ன இது? நீ உணர்ச்சிவசப்பட்டுப் பேசி நா பாத்ததே இல்லே... ஒரு வருஷமா திட்டப்படி எல்லாம் நடந்துடுத்து; இனிமே எப்படி தப்பாப் போக முடியும்? ம்? தைரியமா இரு, லவி... சரி வா... போய் அவளைப் பாத்துட்டு வரலாம்..."

"இப்பவா?" லாவண்யா கொஞ்சம் தயங்கினாள்.

வழக்கமாய் அந்த நேரத்தில் அவள் வீட்டை விட்டு எங்கும் போகமாட்டாள். ராம் ஆபீஸிலிருந்து திரும்பும்போது அவள் வீட்டில் இருப்பதுதான் அவளுக்குப் பிடிக்கும். ஆனால் அன்று தாமு கேட்டதற்காகக் கிளம்பினாள்.

தாமுவின் அம்பாஸடர் காரில் அவர்கள் இருவரும் கலாக்ஷேத்திரா காலனியை நோக்கிப் போனபோது, அடையாறு திருப்பத்தில் ராமின் வெள்ளை டொயோடோ கார் எதிரில் வந்தது.

ராமா? இந்த நேரத்தில் இங்கா?

இவர்கள் வண்டியை நிறுத்த, ராமும் சற்றுத் தள்ளி நிறுத்தி னான்.

அவன் முகத்தில் கலவரம் காணப்பட்டதாய் தாமுவுக்குத் தோன்றியது.

"ஹலோ தாமு! ஊரிலிருந்து எப்ப வந்தே?"

நன்றாய் சமாளிக்கிறான்— தாமு தலையைத் திருப்பி லவியைப் பார்த்தான். அவள் எதையும் உணர்ந்ததாகத் தெரிய வில்லை.

"ஹாய் ராம்... நீங்க எங்க இவ்வளவு தூரம்?" கண்களை விரித்துக்கொண்டு லவி கேட்கவும் ராம், "ம்... அதுவா... வந்து லவி... மஹாபலிபுரம் போற வழிலே தொழிற்சாலை ஆரம்பிக்கும் படியா ஐம்பது ஏக்கர் இருக்குன்னு புரோக்கர் சொன்னான். பாக்கலாம்னு வந்தேன், ஒண்ணும் சரியா இல்லே..."

ராம் பொய் சொல்கிறான் என்பதை தாமுவால் உணர முடிந்தது. இந்த மாதிரி நிலம் பார்க்க, நீச்சு பார்க்க, என்பதற்கெல் லாம் அலையும் ஆள் ராம் இல்லை. அலையவேண்டிய அவசிய மும் இல்லை. அதற்குக் கைலாசம் இண்டர்நாஷனலில் ஆள் இருக்கிறது— இவன் மானேஜிங் டைரக்டர்; கோடியில் புரள்பவன். இந்தப் பிசாத்து வேலைக்கு இவன் வரத் தேவையில்லை...

"நாழியாச்சு, ஆபீசுக்குப் போயிட்டு நா வீட்டுக்கு வரேன். அப்பறம் பார்க்கலாமா, தாமு? பை, லவி..."— ராம் திரும்பி நடந்து விட்டான்.

கார் கிளம்பினதும் லவி பெருமூச்சு ஒன்றை விட்டாள்.

"நல்லவேளை, தாமு— நீங்க இந்தப் பக்கம் எதுக்காக வந்தேள்னு ராம் கேக்கலை— கேட்டா என்ன சொல்றதுன்னு ஒரு நிமிஷம் ஒண்ணும் புரியலை! அதிருஷ்டவசமா, அவர் வேலை நினைப்புல இருந்ததாலே எதுவும் கேக்கலை."

லவி பேசப்பேச... முதல்முறையாக தாமுவுக்கு லவி இத்தனை அறியாமை உள்ளவளா என்ற நினைப்பும், ஏதோ பெரிசாய் தவறு



நடக்க ஒரு திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்ற பயமும் எழவே செய்தன.

**மே**னகாவுக்கு வலி எடுத்துவிட்டதாம், ஆயா போன் செய்தாள்.

மணி மாலை நான்கு.

டாக்டர் சுசீலாவுக்கு போன் பண்ணிவிட்டு, தாமுவோடும் தொடர்புகொள்ள லவி முயற்சித்தாள்.

தாமு இல்லை. வெளியில் போயிருந்தான்.

காரை எடுத்துக்கொண்டு கலாக்ஷேத்திரா காலனிக்கு விரைந்தாள்.

மேனகாவும், ஆயாவும் தயாராய் இருந்தனர்.

மருத்துவமனைக்குச் சென்றதும் டாக்டர் பரிசோதித்துப் பார்த்து, "போதாது... இன்னும் பெரிய வலி வர வேண்டும்" என்று சொல்லிவிட்டார்.

சுகப்பிரசவம் ஆகுமா?

என்ன குழந்தை?

ஆணா பெண்ணா?

குழந்தை ராம் மாதிரி இருக்குமா? இல்லை மேனகாவைக் கொண்டுவிடுமா?

பிள்ளையாய்ப் பிறந்து ராமின் உயரம், உடல்வாகு, திறமை, புத்தி, குணம் என்று எல்லாவற்றையும் கொண்டுவிட்டால் எத்தனை நன்றாக இருக்கும்!

அப்பா, உங்கள் விருப்பம் இன்னும் சில மணி நேரத்தில் நிறைவேறப்போகிறது.

'ஆண்சிங்கம் போல இருக்கற என் மாப்பிள்ளை மாதிரி ஆறு பேரன்களாவது இருந்தாத்தான் எனக்குத் திருப்தி' என்பீர் களே, அதில் கொஞ்சமாவது நிறைவேறப்போகிறது.

பெண் குழந்தையாய் இருந்தால்?

பெண்ணோ, ஆணோ, எதுவானாலும் ராமைக் கொண்டு பிறந்துவிட்டால் சரி.

குழந்தை அச்சு ராமாக இருக்கவேண்டும்...

ராமைப்போல பிள்ளையோ அல்லது பெண்ணோ!

வராந்தாவில், ஆயிரம் எதிர்பார்ப்புகளோடு நடந்துகொண்டிருந்த லவி சட்டென்று நின்றாள்.

தூரத்தில் வெள்ளை டொயோட்டோ ஒன்று வந்து நிற்பது தெரிந்தது.

ராம்?

இவர் எப்படி இங்கு?

அவள் திகைத்து நின்ற சமயத்தில் கால்களை அகலஅகலமாய் வைத்து நடந்துவந்த ராம் இவளை நெருங்கினான்.

"அவ எப்படி இருக்கா, லவி?" என்றான் படபடப்புடன்.

எவள்? எவளைக் கேட்கிறார் ராம்? மேனகாவையா?

லவியின் திகைப்பு அதிகமாவதை ராம் உணருவதாய்த் தெரியவில்லை.

தலையைத் திருப்பிப் பார்த்தபோது ஆயா ஒரு அறை வாசலில் நிற்பது புரிய, அங்கு இரண்டே எட்டில் சென்றான்.

அவன் பின்னால் லவியும் போனாள்.

வயிற்றுள் இருக்கும் ஜீவன் வெளியே வரத் துடிக்கும் அவஸ்தையில் பங்குகொண்டவளாய், வலி தாங்காமல் அரற்றும் மேனகாவைப் பார்க்கையில் அவன் உருகிப்போனான்.

"வந்துட்டீங்களா, ராம்... ரொம்ப வலிக்குதுங்க..."

ராமைக் கண்டதும் உடைப்பெடுத்த அணைபோல வாய்விட்டு மேனகா அழுவதையும், ஒரே தாவலில் அவளை நெருங்கி, அணைத்து, "அழாதேம்மா... எல்லாம் சரியாப் போயிடும்..." என்று ராம் சமாதானப்படுத்துவதையும் தன் கண்களால் பார்க்க நேர்ந்த கணத்தில், தன் உணர்வுகள் அத்தனையும் செயலிழந்து போய்விட்ட மாதிரி லாவண்யாவுக்குத் தோன்றியது.

பார்வை அவர்களை வெறித்தது.

டாக்டர் சுசீலா, மேனகாவுக்கு ஆண்தொடர்பு இருப்பதாகச் சொன்னது, ஆயா மறுத்தது, நாலு நாட்கள் முன் ராமை அடையாறில் பார்த்தது, சில மாசங்களாய் ராமிடம் மாற்றங்கள் தெரிவது, மேனகாவிடம் திடீர் என்று தைரியம் தோன்றியது, எதிர்த்துப் பேசியது, வெளியூர் சென்றது, அதே சமயம் ராமும் ஊரில் இல்லாமல் இருந்தது, எம்.டி. கல்கத்தா போயிருக்கார் என்று டெல்லி ஆபீசில் சொன்னது, பல சமயங்கள் ஆபீஸுக்குப் போன் செய்தால் எம்.டி. வெளியே போயிருக்கார் என்று தகவல்



கிடைத்தது, இரவு பல நாட்கள் பார்ட்டி அது, இது என்று தாமதமாய் வந்தது எல்லாம், எல்லாம்... எல்லாம்...

ஒன்றன்பின் ஒன்றாய் நினைவுகள் பாம்பு நெளிவது மாதிரி மனசுக்குள் நெளிந்ததும், அத்தனையும் லாவண்யாவுக்கு நிமிஷத்தில் புரிந்துபோனது.

ஒரு வார்த்தைகூடப் பேசாமல் விக்கித்து நிற்கும் லாவண்யாவை ராம் பார்த்தான்.

"அவுங்ககிட்ட எல்லாத்தையும் சொல்லிடுங்க, ராம்... பிரசவ வலி எடுத்து ஆபரேஷன் தியேட்டருக்குள்ள நா நிம்மதியான மனசோட போகணும்... சொல்லிடுங்க. நம்ப முடிவைச் சொல்லிடுங்க... இத்தனை மாசங்களாகத்தான் தயங்கினீங்க... இனியும் பயந்தா ஆகுமா? சொல்லிடுங்க."

அழுதுகொண்டே அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு வலியினால் உதட்டைக் கடித்துக்கொண்டு மேனகா பேசவும், ராம் லாவண்யாவை நிமிர்ந்து பார்த்தான்.

அவள் பார்வையைச் சந்திக்க பலம் இல்லாதவனாய் கண்களைத் திருப்பிக்கொண்டான்.

"சொல்லிடுங்க, ராம்... ப்ளீஸ்..."

மேனகா திரும்பத்திரும்ப ஊக்கம் கொடுக்கவும், ராம் லாவண்யாவைப் பார்க்காமலேயே இந்தப் பக்கமாய் மேனகாவைப் பார்த்துக்கொண்டே பேசினான்.

"உனக்கு இதுக்குள்ளேயே எல்லாம் புரிஞ்சிருக்கும், லவி... நீ புத்திசாலி. உனக்கு நா சொல்லி எதுவும் புரியவேண்டிய அவசியமில்லே... லவி... ப்ளீஸ்... குழந்தை பிறந்ததும் மேனகாவை அனுப்பிட வேண்டாம், லவி... அவளும் நம்ம கூடவே இருந்துட்டும், லவி... ப்ளீஸ்... புரிஞ்சுக்கோ, லவி ப்ளீஸ்."

அடிவயிற்றில் தோன்றின குமட்டல் இதயம், நெஞ்சுக்குழி எல்லாவற்றையும் தாண்டிக்கொண்டு வாய்க்குள் கொப்பளித்தது.

கண்களைத் தாழ்த்திக்கொண்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டு, மேனகாவின் கை தரும் பலத்தில் ஊன்றிக்கொண்டு, அவள் புடவைத் தலைப்புக்குள் ஒளிந்துகொண்டு...

தூ...

சீ...

சடாரென்று திரும்பினாள் லவி.

ஓட்டமும் நடையுமாய் வராந்தாவைக் கடந்து, படிகளில் இறங்கித் தன் வண்டியிடம் ஓடினாள்.

விரல்கள் நடுங்க சாவியை இக்னிஷனில் பொருத்தினாள்.

ஆக்ஸிலரேட்டரை ஒரே அழுத்தமாய் அழுத்தி உறுமலுடன் வண்டியை வீட்டை நோக்கி விரட்டினாள்.

அன்றொரு நாள்— அறுவை சிகிச்சை செய்து ஓவரிகள் அகற்றப்பட்ட பிறகு ஒருநாள்— 'என்னை விவாகரத்து பண்ணிடுங்கோ, ராம்' என்று இவள் பேசின நாள்... 'உன்னை விடவா எனக்குக் குழந்தை முக்கியம்? குழந்தையாவது, கிழந்தையாவது!' என்று ராம் கத்தி வருந்தின நாள், கண்முன் குதி போட்டது.

அந்த ராமா இன்று இப்படிக் கேட்டுவிட்டார்?

'இவளும் நம்மோடு இருக்கட்டுமே...'

வைப்பாட்டியாகவா? இரண்டாம் மனைவியாகவா?

தைரியமாய் நான் இந்தப் பெண்ணைக் காதலிக்கிறேன், அவளைக் கல்யாணம் செய்ய விரும்புகிறேன் என்று கம்பீரமாய்ச் சொல்லியிருக்கலாமே!

அதை விட்டுவிட்டு இவளும் நம்மோடு இருக்கட்டுமே என்று ராமா சொன்னார்?

அன்று, குழந்தைப் பாசம் என்றால் என்ன என்று அறியாததால் 'குழந்தையாவது, கிழந்தையாவது! உன்னைவிடவா அது எனக்கு முக்கியம்?' என்று சொல்ல முடிந்ததா?

இன்று அந்தப் பாசம் பீறிட்டு இப்படிப் பேச வைக்கிறதா? பிறக்காத, முகம் தெரியாத குழந்தைமேல் இத்தனை மோகமா? கண்களில் நீர் திரையிட்டதால் லாவண்யாவால் சாலையைச் சரியாய்க் காண இயலவில்லை.

ஏன், "உன்னை விவாகரத்து செய்ய விரும்புகிறேன், லவி..." என்று ராம் நெஞ்சை நிமிர்த்தி சொல்லவில்லை? உன்னை விவாகரத்து செய்துவிட்டு, இவளை— எனக்குக் குழந்தை தரப் போகும் இவளை— மணக்க விரும்புகிறேன் என்று ராம் சொல்லவில்லை?

இந்தப் பணம், இந்த வசதியான வாழ்க்கை, கோடீஸ்வரன் ராம் என்ற பெயர் எல்லாம் போய்விடுமே என்ற பயத்தாலா?

ராம் அவ்வளவு கோழையா? அவ்வளவு சுயநலவாதியா?



வீடு வந்துவிட்டது.

படீரென்று கதவைச் சாத்திவிட்டு டெலிபோனிடம் ஓடினாள் லவி.

மனசு எரிமலையாய்க் கொந்தளித்தது.

வெடித்து விடுவேன், இனி என்னால் தாங்க முடியாது என்று இதயம் ஆர்ப்பரித்தது.

ரிஸீவரை எடுத்து தாமுவின் நம்பரைச் சுழட்டுவதற்குள் உடம்பு தடதடவென்று குலுங்கி பார்வையில் கருமை படர்ந்தது.

"தாமு ஹியர்—"

"தா... தாமு... தாமு... ஊ... ஊ..." வெடித்துக்கொண்டு எழுந்தது அழுகை.

"லவி? யார் அது? லவி... என்னம்மா... என்ன நடந்தது?"

"தா...மு...ஊ... சிங்கம்னு நினைச்சது முயல்னு இப்பத்தான் புரிஞ்சுது, தாமு... நா சிங்கக்குட்டிக்குத்தான் ஆசைப்பட்டேன். எ...னக்கு முயல்குட்டி வே...ண்டாம், தா...மு... எனக்கு முயலும் வேண்டாம்... முயல்குட்டியும் வேண்டாம்... வக்கீல் லக்ஷ்மணனைக் கூட்டிண்டு உடனே வா... எனக்கு இப்பவே... இந்த நிமிஷமே... விவாகரத்துக்கு ஏற்பாடு பண்ணணும்... வரியா, தாமு? உடனே... உடனே... ஆ..."

வாயைக் கீறிக்கொண்டு பீறிடும் அழுகையை அடக்கத் தெரியாமல், ரிஸீவரை ஒயரில் தூக்குப் போட்டுக்கொள்ள விட்டு விட்டு, அப்படியே தரையில் சரிந்து பெரிசாய், 'ஹோ' என்று அழத் தொடங்கினாள் லாவண்யா.

### கரு வளர்ந்த விதம்...

சென்ற வருஷம் ஜூன் மாசத்தில் ஒருநாள் நண்பர் திரு. கே.வி. சுப்ரமணியம் அவர்களைச் சந்தித்தபோது, 'நேற்று ஒரு செய்தி படித்தேன்; கதையாக எழுதுவதற்கு நல்ல Bold theme! Very few writers can attempt it. என்னவென்று சொல்லட்டுமா?' என்றார்.

கரும்பு தின்னக் கூலியா?

லண்டனில் ஒரு தம்பதி. கர்ப்பம் தரிக்க இயலாத மனைவி, குழந்தை மீது உண்டான அதீத ஆசை காரணமாய், 'உனக்குப் பணம் தருகிறேன், என்

கணவனின் குழந்தையை எனக்குப் பெற்றுக் கொடு' என்று விலைமாது ஒருத்தியிடம் பேரம் பேசி, கணவனையும் சம்மதிக்க வைத்து, பத்து மாசங்கள் ஆசையாசையாய் காத்திருந்து, குழந்தை பிறந்ததும் வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழி உடைந்த கதையானது. 'நான் நடத்தை கெட்டவளாக இருக்கலாம். ஆனால் பாசமில்லாத தாயாக இருக்க முடியவில்லை. இது என் குழந்தை; இதைப் பிரிந்து என்னால் இருக்கமுடியாது' என்று பெற்றவள் மறுத்துவிட்டாள்.

இதுதான் செய்தித்தாளில் வெளியான நான்குவரிச் செய்தி.

நான் யோசித்தேன். விடாமல் யோசித்தேன். பெற்றவள் கடைசி நிமிஷத்தில் குழந்தையைத் தர மறுத்தது ஒரு ரகம்; அவள் வயிற்றில் குழந்தை வளர வளர அவளோடு தன்னைக் கதாநாயகன் இணைத்துக் கொள்வது இன்னொரு ரகம். ஏன், கதையை இப்படி அமைத்தால் என்ன?

'மணியன்' மாத இதழுக்கு துணிச்சலான கருவுடன் ஒரு நாவலை எழுதித்தர திரு. மணியன் கேட்டபோது, ஏற்கனவே போனவருஷம் அவரிடம் இந்தக் கதை குறித்து நான் பேசியிருந்ததால் இந்தக் கருவையே தேர்ந்தெடுத்தேன்.

ஒரு சிங்கம் முயலானது இந்த விதத்தில்தான்...

திரு. கே.வி. சுப்ரமணியத்துக்கும், திரு. மணியனுக்கும், முகம்தெரியாத அந்தத் தம்பதியருக்கும் என் நன்றி.

— சிவசங்கரி

1979